
எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

ආසිරියම්

## புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு தாமதமாவதற்கான காரணங்கள்



- இலங்கையில் கல்விக் கொள்கைகள்
- ஆசிரியரும் தொழில் வகைகூறலும்

ISSN 2021-9041

"அறிவுச் சமூகத்தின் வேட்கை விளைத்திறன் மிக்க ஆசிரியர்"


இதழ் 27–28

யூலை –ஆகஸ்ட் 2013

100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




**விலை 500/-**

## சேமமடு பொத்தகசாலை

யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.ந: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூலை – ஆகஸ்ட் 2013 இதழ் 27–28

# உள்ளே...


✱ புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு...
அன்பு ஜவஹர்ஷா - 5

✱ இலங்கையில் கல்விக் கொள்கைகள்...
மா.கருணாநிதி – 14

✱ ஆசிரியரும் தொழில் வகைகூறலும்
ஆர். லோகேஸ்வரன் – 26

✱ கட்டிளமைப் பருவத்தினரது ஆளுமை விருத்தி...
செ.ரூபசிங்கம் –33

✱ முரண்பாடுகளின் முழுவடிவமாக ஆசிரிய...
கி.புண்ணியமூர்த்தி – 39

✱ உரையாடல் : குறிநெறிசார் சிந்தனை
வி.ரி.ஜி.பி.லிங்கம் –46

✱ உற்றறி உளவியல் கோட்பாட்டு நிலையில்
சபா.ஜெயராசா – 50

✱ மாறுபட்ட சிந்தனை : சில குறிப்புக்கள்
க.சுவர்ணராஜா –54

✱ கற்பித்தலில் ஆக்கச் சிந்தனை
ஆ.அ.அஸ்ஹறா – 58

✱ வாசிப்பு - எழுத்து - கற்பித்தல் புதிய அணுகுமுறை
ச.தேவசகாயம் 62

✱ நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்..
அன்பு ஜவஹர்ஷா - 67


"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"


## தொடர்புகளுக்கு:

தெ.மதுசூதனன்

077 1381747 / 011 2366309/ 021 2227147

காசுபதி நடராஜா – 0777 333890

மர்சூம் மௌலானா– 077 4747235

அ.ஸ்ரீகாந்தலட்சுமி– 0777 286211

## படைப்புகள் அனுப்ப :

*aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*



## பணம் அனுப்ப :

**Chemamadu book centre - BOC Bank -**
A/C- NO :8081150

**Chemamadu book centre - COM Bank -**
A/C- NO:1120017031


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2021-9041

# ஆசிரியம் இதழ் 27–28

**ஆசிரியர் :**

தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**

அ.ஸ்ரீகாந்தலட்சுமி

எம்.என்.மர்சூம் மௌலானா, காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**

பேரா.க.சின்னத்தம்பி, பேரா.சபா.ஜெயராசா

பேரா.சோ.சந்திரசேகரன், பேரா.எம்.ஏ.நுஃமான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**

சுந்தரம் டிவகலாலா, ச.சுப்பிரமணியம்

சி.தண்டாயுதபாணி, அன்பு ஜவஹர்ஷா

வல்வை ந.அனந்தராஜ், த.மனோகரன்

**ஆலோசகர் குழு :**

பேரா.மா.கருணாநிதி, பேரா.மா.சின்னத்தம்பி

பேரா.மா.செல்வராஜா, முனைவர் த.கலாமணி

ஆய்வாளர்.தை.தனராஜ், முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்,

முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்,

செ.அருண்மொழி, சு.முரளிதரன், பொ.ஐங்கரநேசன்

**நிர்வாக ஆசிரியர் :**

சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**

வை.கோமளா

**Printed by: cbc press**

Tel : 0777 345 666

தொடர்புகளுக்கு :

**"Aasiriyam"** 180/1/50 People's Park, Colombo -11,Tel: 011-2331475

E-mail : aasiriyam@gmail.com, Web:www.chemamadu.com/aasiriyam.aspx

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் நல்லாசிரியர்...?

தற்போது "ஆசிரியம்" இதழில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து சில வாசக நண்பர்கள் தங்கள் உணர்வுகளை சாதகமாக நம்முடன் பகிர்ந்து கொண்டார்கள். இன்னும் சிலர் பல்வேறு புதிய ஆலோசனைகளையும் முன்வைத்தார்கள். இவர்கள் யாவருக்கும் நமது நன்றி உரித்தாகட்டும்.

பொதுவாக இந்த இதழ் மாற்றத்திற்கு கல்விப்புல மட்டங்களிலிருந்து எந்தவிதப் பிரதிபலிப்பும் அதிகம் வெளிப்படவில்லை. அந்த வகையில் அவர்களுக்கும் நமது நன்றி உரித்தாகட்டும். ஆனால் "ஆசிரியம்" வருகையின் எதிர்பார்ப்புக்காகக் காத்திருந்து சுகதுக்கம் விசாரித்து மீண்டும் மீண்டும் அறிவுப் பரிமாற்றத்தில் நம்முடன் இணைந்துகொள்ளும் வாசகர் குழாத்துக்கும் நன்றி பாராட்டுவது இங்கு முக்கியம். அதற்கும் மேலாக அந்த வாசகர்குழாம் தான் ஆசிரியத்தை தாங்கிப்பிடிக்கிறது. உயிர்ப்பாக இயங்க வைக்கிறது.

"ஆசிரியம்" ஆசிரியத்துவம் சார் தேவைகளை நிறைவேற்றுவதுடன் மட்டும் நின்றுவிடாது அறிவுப் பண்பாட்டுக் கையளிப்பையும் மேற்கொள்ள வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளது. அதனால்தான் ஆசிரியம் வெளிவருகின்றது.

இன்று ஆசிரியர்களை தொழிற்றகைமைப்படுத்தும் பணியில் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் இலங்கையில் பல உள்ளன. இதில் பல்கலைக் கழகங்கள், தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் என்பன ஈடுபட்டு வருகின்றன. அவற்றோடு சேவைக் காலப் பயிற்சி அடிப்படையில் தொலைக்கல்விப் பயிற்சியை பட்டதாரிகளுக்குரிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவாக பயிற்சி நெறியை வழங்குவதில் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் ஆகிய நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. கொழும்பு மற்றும் பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்கள் உள்வாரிப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளையில் இப்பல்கலைக்கழகங்களில் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் பயிற்சியின் மூலமும் ஆயிரக்கணக்கானோர் பயனடைகின்றனர்.

இவ்வாறு விரிவாக்கம் பெறும் பயனாளிகளுக்கு ஆசிரியத்தின் பயன்பாடு பற்றிய அக்கறையை விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏனோ முயற்சி எடுப்பதில்லை, அக்கறைகாட்டுவதில்லை என்பதையும் நாம் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும். இந்த ஆசிரிய மாணவர்கள் ஆசிரியத்தை முழுமையாகப் பயன்படுத்துவார்களாயின் "ஆசிரியம்" நிலைத்து நிற்பதற்கான பின்புலத்தை தக்க வைக்கும். ஆசிரியத்துவத்தின் வாண்மைசார் விருத்திக்கான அறிவு உள்ளீடுகளை வழங்குவதில் இன்னும் தீவிரமாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களும் உருவாகும்.



சமகாலத்தில் நிகழ்ந்துவரும் துரித மாற்றங்களுக்கு புதிய அறிவும் தொழில் நுட்ப விருத்தியும் அடிப்படையாக உள்ளன. இவற்றை உள்வாங்கிக் கொண்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஒருசில உயர் தொழில்களுக்கு மட்டும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. ஆசிரியத் தொழிலும் புதுமையும் ஆக்கத்திறனும் கொண்ட பிரசைகளை உருவாக்குவதில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக மாறுகிறது. ஆகவே ஆசிரியர் தொழில் உயர் தொழிலுக்குரிய பண்புகளுடன் கூடியதாக மாற்றம் பெற வேண்டிய தேவையும் உள்ளது. நடைமுறையில் ஆசிரியரின் தொழில் தகைமைத் தேர்ச்சி மற்றும் உயர்தொழில் அந்தஸ்து எனும் விடயங்கள் தொடர்பாக சமகாலத்தில் பல்வேறு வினாக்கள் எழுகின்றன.

ஆசிரியர்கள் மரபு ரீதியாக ஏற்று வந்த வகிபங்குகளுடன் பல புதிய வகிபங்கு களையும் பொறுப்புகளையும் ஏற்று வினைத்திறனுடன் கூடியவர்களாகச் செயற்படுவதற்கு உரித்தான தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுதல் இன்றியமையாதது. இதற்காக பல்வேறு முயற்சிகள், பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் ஆசிரியர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு முதலானவற்றில் மாற் றங்கள் உருவாகாமல் இருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

இந்நிலையில் நல்லாசிரியர் யார்? என்ற கேள்வியை எழுப்புவோமா னால் இதற்கான பதில் சிக்கலாகத்தான் இருக்கும். நல்லாசிரியர் தெரிவு செய்து பல மட்டங்களில் சிறப்பும் கௌரவமும் வழங்கப்படுகின்றது. ஆனால் இந்தத் தெரிவு சரியானதா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஆசிரியர்கள் மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்து பவர்கள். கல்விக்காக ஏங்கும், கல்விக்காக தவிக்கும் மாணவர் சமூகத்தின் ஒட்டுமொத்த நன்மைக்காக, தனது வருமானத்தில் சிறு பகுதியையோ அல்லது மற்றவர்களைவிட தங்களுக்கு அதிகமாகக் கிடைத்துள்ள ஓய்வு நேரத்தையோ செலவிடாமல், தமது வருமானத்தை மேலும் பெருக்கிக்கொள்ள காலையிலும் மாலையிலும் தனியார் வகுப்பு (டியூசன்) நடத்துகிறார்களே... அந்த ஆசிரியர்கள் நல்லாசிரியர்களா?

மனித மாண்புகளையும் மனித உரிமைகளையும் மனித நேயத்தையும் கற்றுக்கொடுக்காமல் பன்னாட்டு கம்பனிகளில் அடிமை வேலைகள் செய்யக் கற்றுக்கொடுக்கும் இன்றைய கல்வி முறைகளின் குறைபாடுகள் பற்றி சற்றும் சிந்திக்கத் தெரியாமலே, தானுண்டு தன் வேலை உண்டு என்று வாழ்வியல் சிறைக்குள்ளே பிள்ளைகளை அடைத்து, எதிர்காலத்தில் தவறுகளைத் தட்டிக் கேட்கவும் அநீதிகளை எதிர்க்கவும் எண்ணமில்லாத மனிதர்களாக, தோல்வி களைத் தாங்கிக்கொள்ள முடியாத கோழைகளாக மாணவர்களை உருவாக்கு கிறார்களே... அந்த ஆசிரியர்கள் நல்லாசிரியர்களா?

*எந்த ஓர் ஆசிரியர், தான் பணி செய்யும் பாடசாலைகளில் வகுப்பறைச் சுதந்திரத்தையும் வகுப்பறை சனநாயகத்தையும் கடைப்பிடித்து மாணவர்களை சுதந்திரமாகப் பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் வாய்ப்பளிக்கின்றாரோ..*

*எந்த ஓர் ஆசிரியர், தன் ஓய்வு நேரத்தை பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் பாடசாலைக்கு வெளியே தனி வகுப்பு (டியுட்டரி) எடுப்பதை தவிர்த்து, கல்விக்காக ஏங்கும் மாணவர்களை கைகொடுத்து கரையேற்றத் துடிக்கின்றாரோ..*

*தொடர்ச்சி 32ம் பக்கம் ...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு தாமதமாவதற்கான காரணங்கள்

✱ அன்பு ஜவஹர்ஷா

கடந்த ஆசிரியம் இதழோடு மூன்றாம் ஆண்டில் அடுத்த காலடி பதித்துள்ள ஆசிரியத்தின் 25-26 இதழை முழுமையாக வாசித்தால் உள்ளடக்கத்தில் கல்வித்துறை தொடர்பாக மேலும் ஆழமான புதிய பரிமாணத்தை நோக்கி தடம் பதிக்கத் தொடங்கியள்ளதை காணலாம். ஆசிரியர்கள் பாடப்புத்தக அறிவோடு நின்றுவிடாமல் கல்வித்துறை தொடர்பாக மட்டுமல்ல வேறு அறிவுசார் விடயங்கள் தொடர்பாக நிறையத் தேடல்களை மேற்கொள்ள வேண்டிய காலகட்டமிது.

வெட்கத்தை விட்டு பெரும்பாலான ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ள வேண்டிய விடயமொன்றை கடந்த சில மாதங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தரம் ஐந்து பரீட்சை ஆயத்தங்களின்போது தனது பிள்ளை கேட்கும் பல வினாக்களுக்கு பெரும்பாலான ஆசிரியர்களால் விளக்கம் சொல்ல முடியாமல் இருந்தது. இவ்வாறு கல்வி ஆழமாகி பல்துறைசார்ந்த விடயங்களைக் கொண்டு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இப்படியான சூழ்நிலையில் ஆசிரியத்தின் ஆக்கங்கள் பன்முகப் பரிமாணம் கொண்டவையாக தொடர்வது வரவேற்கத்தக்க விடயமே. இவைகளுக்கு இடையில் இக்கட்டுரையாளரின் ஆக்கங்கள் இன்னொரு திசையில் இருந்தாலும் கல்வித் துறையைச் சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள் தமது தொழில் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய, அல்லது தீர்த்துக்கொள்ள வேண்டிய பல்வேறு தேவைகள் இருப்பதால் அந்தப் பாணியில் இப்பணி தொடர்கின்றது.

புதிய ஆசிரியர் சேவை தொடர்பான எனது ஆக்கங்கள் பலவற்றைப் படித்து இருப்பீர்கள். எழுத்தில் இருப்பது கையில் கிடைக்கவில்லையே என்று அலுத்துக் கொள்வதும் விளங்குகின்றது. உங்களது கேள்விகளுக்கு பல விளக்கங்கள் இந்த ஆக்கம் மூலம் கிடைக்கலாம்.

இலங்கை ஆசிரியர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பு தொடர்பாக ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. கால அட்டவணை தொடர்பாக கல்வி அமைச்சர் தொடக்கம் பொறுப்பான

கட்டுரையாளர்
ஓய்வு பெற்ற அதிபர்
ஆசிரியத்துவம் கல்வி சார்ந்து பல்வேறு கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலரும் ஊடகங்களுக்குத் தகவல்கள் தெரிவித்து வருகின்றார்கள். 2013.04.26 அன்று அரச சேவை ஆணைக்குழு புதிய பிரமாணக் குறிப்புக்கு அனுமதி வழங்கியுள்ளதாக சொல்லப்பட்டது.

கடந்த இரண்டு மாத கால சந்திப்புகளில் கல்வி அமைச்சரும் கல்வி அமைச்சின் செயலாளரும் இன்னும் இரண்டு கிழமைகளுக்குள் புதிய பிரமாணக் குறிப்பு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என ஆசிரியர் சங்கங்களிடம் வாக்குறுதிகள் அளித்திருந்தார்கள்.

"அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெற்ற புதிய ஆசிரியர் பிரமாணக் குறிப்பில் உள்ள முரண்பாடுகள்" தொடர்பாக தகவல்களை உள்ளடக்கி 2013.06.25 ஆம் திகதி தினக்குரலில் விரிவான கட்டுரையொன்று வெளியிடப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சின் செயலாளருக்கு, அதிபர் பட்டதாரி ஆசிரியர் சங்க ஒன்றியம் அனுமதி பெற்ற புதிய பிரமாணக் குறிப்பில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக 18 விடயங்களை உள்ளடக்கிய நான்கு பக்கக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது. இது தொடர்பாக கல்வி அமைச்சரின் செயலாளர் திருத்தங்களை அரச சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்து அமைச்சரவைப் பத்திரம் தயாரிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். இரண்டு வாரக் காலக்கெடுவிற்கு ஆறு மாதங்களும், மேற்சொல்லப்பட்ட வாக்குறுதிக்கு ஏழு மாதங்களும் கடந்துவிட்ட நிலையில் இதுவரை ஆக்கபூர்வமான விடயங்கள் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

கடந்த 30 மாதங்களில் கல்வி அமைச்சின் செயலாளர்களாக ஐந்து பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வாக்குறுதியை அளித்த செயலாளரும் மாற்றப்பட்டு கடந்த மாதம் புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கட்டுரை வெளியாகும் போது வேறு ஒரு செயலாளர் கூட நியமிக்கப்படலாம். பிரச்சினைகள் முன்வைக்கப்படும் போது அதை முழுமையாக இவர்கள் அறிந்துகொள்ள முன்னரே பதவி பறியோர் விடுகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

சகல ஆசிரியர்களுக்கும் தேவையான இந்த விடயம் தொடர்பாக பிரதான ஆசிரியர் சங்கங்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையின் முதல்தரப் பாடசாலையின் ஆசிரியை ஒருவர் அப்பாடசாலையின் மாடிக் கூரையின் மேல் ஏறிப் போராட்டம் நடத்தியதும், மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ஆசிரியை ஒருவரை முழங்காலில் மண்டியிட வைத்ததுமான அண்மைக்காலச் சம்பவங்கள் ஊடங்களுக்கு பெரும் தீனியானது போல இந்தப் பிரதான சங்கங்கள் போராட்டம் நடத்தவும் காரணமாயின. ஆசிரியர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் போது அதற்கு முன்னுரிமை கொடுத்துப் போராடுவதை இங்கு குறையாக சொல்லப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல சகல ஆசிரியர்களுக்கும் முக்கிய தேவையாக உள்ள புதிய பிரமாணக் குறிப்புத் தொடர்பான விடயங்களிலும் இச்சங்கங்கள் கவனமெடுக்க வேண்டும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. பின்வரும் சுலோகங்களுடன் 2013.07.26ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று எதிர்ப்புச் சத்தியாகிரகமொன்றுக்கு அதிபர், ஆசிரியர் சங்கக் கூட்டணி அழைப்பு விடுத்திருந்தது.

1. உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை (2008.10.06) அமுல் நடத்த ஐந்து வருடமும்,

2. ஆலாட்சி அதிகாரி வழங்கிய உத்தரவை (2008.07.15) செயற்படுத்த ஐந்து வருடமும்.

3. தேசிய மனித உரிமை ஆணைக்குழு வழங்கிய தீர்ப்பை (2008.06.30) அமுல் நடத்த ஐந்து வருடமும்,

4. அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவை (2009.03.12) செயற்படுத்த 4 வருடமும்,

5. மேதகு ஜனாதிபதி அளித்த வாக்குறுதியை (2011 வரவு செலவுத் திட்ட உரை) செயற்படுத்த 2 வருடமும்,

தாமதமாவதை முன்னிட்டு, இதைச் செயற்படுத்த விடாமல் தடுக்கும் கல்வி அமைச்சிலுள்ள தீய சக்திகளுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தையோ, கல்வி அமைச்சரையோ குறைகூறாது ஒரு சில அதிகாரிகளுக்கு எதிரான போராட்டமாகவும், புதிய பிரமாணக் குறிப்பை விரைவில் அமுல்நடத்துமாறு கோரும் போராட்டமாகவுமே இந்தப் போராட்டம் அமைந்திருந்தது.

2012ஆம் கணக்கெடுப்பின்படி அரச, தனியார், பிரிவெனா பாடசாலைகளில் 2,35,533 பேர்கள் கற்பித்தல், மேற்பார்வை, நிருவாகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அரச பாடசாலைகளில் கடமையாற்றும் 2,23,333 எண்ணிக்கையிலான மேற்படி ஆளணியில் 93,706 கலை, விஞ்ஞான, வர்த்தக, கலைமாணி பட்டதாரிகளும் 3,781 முதுமாணி பட்டதாரிகளும், 29 கலாநிதி பட்டம் பெற்றவர்களும் உள்ளார்கள். இவ்வாறு உள்ள ஆளணி நிலையில் பட்டதாரி ஆசிரியர்களின் பல்வேறு சம்பள சான்றிதழ் முரண்பாடுகளுக்கு தீர்வுகூறும் புதிய பிரமாணக் குறிப்பை அமுல் நடத்துமாறு கோரும் இந்தப் போராட்டத்தில் 25க்குக் குறைந்தவர்களே கலந்து கொண்டமை கவலைக்குரியதாக இருந்தது. இதற்கு ஏற்பாட்டாளர்களின் தவறோ அல்லது ஆசிரியர்கள் தமது தொழில்சார் போராட்டங்களில் அக்கறை கொள்ளவில்லையோ என்பது தெரியவில்லை.

பிரதான ஆசிரியர் தொழில் சங்கங்களில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கச் செயலாளர் மகிந்த ஜயசிங்க ஆசிரியர் சேவைச் சங்கச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த ஜயசிங்க ஆசிரியர் பிரமாணக் குறிப்பை செயற்படுத்தினால் கடுமையான நடவடிக்கை என்ற தலைப்பில் போராட்டம் இடம்பெற்ற அன்று 2013.07.26 திகதி ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு உள்ளது.

சிக்கல்கள் நிறைந்த புதிய ஆசிரியர், அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்புகளை நடைமுறைப்படுத்துமாறு கோரும். ஒரு ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை செயற்படுத்தினால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

தயாரிக்கப்பட்டுள்ள புதிய ஆசிரியர், அதிபர் சேவை பிரமாணக் குறிப்புகளில் பதவி உயர்வு செயற்பாடுகளில் நன்மைகள் உள்ளதாயினும், சம்பள உயர்வுகளிலும் சம்பள ஏற்றங்களிலும் பெரும் பாதிப்புகள் உள்ளன.

இதன் காரணமாக புதிய பிரமாணக் குறிப்பைச் செயற்படுத்தினால் பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட சகல ஆசிரியர், அதிபர்களுக்கும் கடுமையான பாதிப்புகள் உண்டாகும். ஆகையால் உடனடியாக இந்த பிரமாணக் குறிப்புகளைத் திருத்துமாறு ஆசிரியர், அதிபர் கோரிக்கை விடுக்கின்றார்கள். ஆசிரியர் சம்பளக் கோரிக்கையில் உள்ள விடயங்களை முன்வைத்து புதிய பிரமாணக் குறிப்புகள் தயாரிக்கப்பட வேண்டும்.

அப்படியல்லாது புதிய பிரமாணக் குறிப்பை அமுல்நடத்துமாறு கோரி உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் செய்யும் சங்கத்தின் கோரிக்கைக்கு செவி மடுத்து இதை நடைமுறைப்படுத்தக் கூடாது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் எதிர்ப்பு அறிக்கை விடுத்துள்ளது.

அரச கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கம் இந்த விடயம் தொடர்பாக தனது நிலைப்பாட்டைச் சரியாக இனங்காட்டிக் கொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1997 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ள, இச்சேவை தொடர்பான சம்பள முரண்பாட்டுக்கு 2008.10.06 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி 2008.07.01 தொடக்கம் புதிய பிரமாணக் குறிப்பு அமுல்நடத்தப்பட்டு 06/2006 (VIII) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைப்படி சம்பளம் வழங்கப்பட வேண்டும் 2010.01.05 திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிர்ப்பு காட்டியமையால் இன்று வரை அது அமுலாகவில்லை. தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவே இந்த சம்பள அடிப்படைகளைத் தீர்மானிக்கும் சக்தியாகும்.

அதை மீறி கல்வி அமைச்சோ, வேறு எந்த நிறுவனமோ செயற்பட முடியாது. இலங்கை நிருவாக சேவை உட்பட சமாந்தர சேவைகளின் மூன்றாம் வகுப்பு ஆரம்பச் சம்பளமாக 22,935 ரூபாவுக்கு அதிகமாக வேறு சேவைகளின் ஆரம்பச் சம்பளத்தை அதிகரிக்க தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு அனுமதி வழங்கமாட்டாது என்ற உண்மை கசப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரமாணக் குறிப்பின் படி 01.01.2011 - 31.12.2013 வரை கிடைக்க வேண்டிய நிலுவை

| வகுப்பு தரம் | தொழிற்றகைமை | தற்போதைய சம்பளம் | புதிய சம்பளம் | மாதாந்த அதிகரிப்பு | மொத்த மாதங்கள் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 3-II | தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் | 13,120.00 | 13,410.00 | 290.00 | 36 | 10,440.00 |
| 3-I | டிப்ளோமா ஆசிரியர் | 14,135.00 | 14,280.00 | 145.00 | 36 | 5,220.00 |
| 3-I | பயிற்றப்பட்ட ஆசிரியர் | 14,315.00 | 14,640.00 | 325.00 | 36 | 11,700.00 |
| 3-1 | பட்டதாரி ஆசிரியர் | 15,395.00 | 15,540.00 | 145.00 | 36 | 5,220.00 |
| 2-II | டிப்ளோமா, பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர் | 15,995.00 | 16,235.00 | 240.00 | 36 | 8,640.00 |
| 2-II | பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் | 15,995.00 | 16,340.00 | 345.00 | 36 | 12,420.00 |
| 2-II | கல்வி டிப்ளோமா உள்ள பட்டதாரி ஆசிரியர் | 15,995.00 | 16,580.00 | 585.00 | 36 | 21,060.00 |
| 2-II | கல்வி டிப்ளோமாவுடன் முதுமாணி பட்டதாரி ஆசிரியர் | 15,995.00 | 16,820.00 | 825.00 | 36 | 29,700.00 |
| 2-I | டிப்ளோமா, பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர் | 18,845.00 | 19,245.00 | 400.00 | 36 | 14,400.00 |
| 2-I | பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் | 18,845.00 | 19,350.00 | 505.00 | 36 | 18,180.00 |
| 2-I | கல்வி டிப்ளோமா உள்ள பட்டதாரி ஆசிரியர் | 18,845.00 | 19,750.00 | 905.00 | 36 | 32,580.00 |
| 2-I | கல்வி டிப்ளோமாவுடன் முதுமாணி பட்டதாரி ஆசிரியர் | 18,845.00 | 20,150.00 | 1,305.00 | 36 | 46,980.00 |
| 1 | டிப்ளோமா, பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர் | 21,645.00 | 22,290.00 | 645.00 | 36 | 23,220.00 |
| 1 | பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் | 21,645.00 | 22,395.00 | 750.00 | 36 | 27,000.00 |
| 1 | கல்வி டிப்ளோமா உள்ள பட்டதாரி ஆசிரியர் | 21,645.00 | 23,040.00 | 1,395.00 | 36 | 50,220.00 |
| 1 | கல்வி டிப்ளோமாவுடன் முதுமாணி பட்டதாரி ஆசிரியர் | 21,645.00 | 23,685.00 | 2,040.00 | 36 | 73,440.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், அதை விளங்கிக் கொண்டே ஆசிரியர், அதிபர் சங்கங்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய நிலையில் உள்ளன. அரசாங்கமோ, திறைசேரியோ இதன் அடிப்படையில் தான் மறைமுக நிகழ்ச்சி நிரல்களின்படி செயற்பட்டு வருகின்றன.

புதிய பிரமாணக் குறிப்பு இரகசியமான ஆவணமல்ல கல்வி அமைச்சின் இணையத்தளம், 06/2006 (VIII) இலக்கச் சுற்றறிக்கைகள் மூலம் பிரசித்தம் செய்யப்பட்ட ஆவணமாகும். இன்று ஒரு இலட்சம் வரை ஆகியுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு சில கூடிய அனுகூலங்கள் புதிய பிரமாணக் குறிப்பில் உள்ளமை வெளிப்படையான விடயமாகும். இது இத்துடனுள்ள இரண்டு அட்டவணைகளைப் பார்த்தால் விளங்கும்.

ஜூன் மாதத்திலேயே தமக்கு ஒதுக்கப்பட்ட நிதி முடிந்துவிட்டது என அமைச்சர்கள் கவலையாக உள்ளார்களாம். நாளுக்கு நாள் குறுஞ் செய்திகளின் மூலம் மறைமுகமாகவும், நேரடியாகவும் பொருட்களின் வரி அதிகரிக்கப்படுகின்றமைக்குக் காரணம் உலக சந்தையில் பொருட்களின் விலையேற்றமல்ல. அரச கஜானா காலியாக உள்ளமையே என்பதை பொருளாதாரம் பற்றி குறைந்தபட்ச அறிவுள்ள பொதுமகனும் அறிவான். ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பள அதிகரிப்பு அட்டவணையைப் பாருங்கள். 36 மாதங்களில் மொத்தமாகக் கிடைக்க வேண்டிய தொகையே இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

28/2010 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம், 2008.07.01 திகதியை 2011.01.01 வரை நீட்டிவிட்டது. 30 மாத நிலுவையை தொழில் சங்கங்களின் கயிறு இழுப்பை வைத்து அரசாங்கம் கொள்ளையடித்து விட்டது. புதிய பிரமாணக் குறிப்பின் சம்பளத்தை 2011.01.01 தொடக்கம் வழங்க சுமார் 455 கோடி ரூபா தேவைப்படும். 2013.12.31 திகதி வரையே கட்டுரையாளரால் கணக்குப் பார்க்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள அரச ஊழியர்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்க நிதியுள்ளது என்று சொல்லப்படும் நிலையில் குறைகள் உள்ள புதிய பிரமாணக் குறிப்பையாவது அமுல்நடத்தி 2011.01.01 தொடக்கம் நிலுவை வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியான விடயமேயாகும். 2008.07.01 தொடக்கம் 2010.12.31 வரை 30 மாதங்களுக்கு வழங்க வேண்டிய சுமார் 400 கோடி ரூபாவை அரசாங்கம் ஏற்கனவே விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது.

2011.01.01 தொடக்கம் 2013.12.31 வரையிலான 36 மாதங்களுக்கு ஒவ்வொரு ஆசிரியருக்கும் எவ்வளவு நிலுவை கிடைக்க வேண்டும் என்பதை இந்தச் சம்பள அதிகரிப்பு அட்டவணையைப் பார்த்தால் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இந்த எண்ணிக்கைகள் மேலோட்டமானவை அல்ல. சுற்றறிக்கையின் படி சரியாகக் கிடைக்க வேண்டிய நிலுவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரமாணக் குறிப்பின் படி பதவி உயர்வு நடைமுறைகள்

| ஆசிரியர் வகை | நியமனத் தரமும் சம்பளமும் | 3-I இல் இருந்து 2-II க்குப் பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | | 3-I இல் இருந்து 1 க்குப் பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | | சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|
| டிப்ளோமா | 3-I (C) 14,280/= | 7 வருடங்கள் | | 7+9+6=22 வருடங்கள் | | 22 வருடங்கள் | |
| பயிற்றப்பட்ட | 3-I (B) 14,640/= | 5 வருடங்கள் | | 5+9+6=20 வருடங்கள் | | 20 வருடங்கள் | |
| பட்டதாரி | 3-I (A) 15,540/= | 2 வருடங்கள் | | 2+9+6=17 வருடங்கள் | | 17 வருடங்கள் | |
| | | 2-II இல் இருந்து 2-I க்குப் பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | | 2-II இல் இருந்து 1 க்குப் பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | | 2-II இல் இருந்து சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்வு பெறச் செல்லும் காலம் | |
| | | மிக விஷேட செயலாற்றுமை அடிப்படையில் | சாதாரண செயலாற்றுமை அடிப்படையில் | மிக விஷேட செயலாற்றுமை அடிப்படையில் | சாதாரண செயலாற்றுமை அடிப்படையில் | மிக விஷேட செயலாற்றுமை அடிப்படையில் | சாதாரண செயலாற்றுமை அடிப்படையில் |
| பயிற்றப்பட்ட | 2-II 1 ஆவது படி 16,235/= | 6 வருடங்கள் | 9 வருடங்கள் | 12 (6 + 6) | 15 (9 + 6) | 12 (6 + 6) | 15 (9 + 6) |
| பயிற்சி + பட்டம் | 2-II 2 ஆவது படி 16,340/= | 5 வருடங்கள் | 8 வருடங்கள் | 11 (5 + 6) | 14 (8 + 6) | 11 (5 + 6) | 14 (8 + 6) |
| பட்டம் + கல்வி டிப்ளோமா | 2-II 3 ஆவது படி 16,580/= | 4 வருடங்கள் | 7 வருடங்கள் | 10 (4 + 6) | 13 (7 + 6) | 10 (4 + 6) | 13 (7 + 6) |
| பட்டம் + கல்வி டிப்ளோமா + முதுமாணிப் பட்டம் | 2-II 4 ஆவது படி 16,820/= | 3 வருடங்கள் | 6 வருடங்கள் | 09 (3 + 6) | 12 (6 + 6) | 09 (3 + 6) | 12 (6 + 6) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரமாணக் குறிப்பில் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், அவர்களது மேலதிகக் கல்விச் சான்றிதழ்களுக்கும் கூடிய சம்பளமும் நிலுவையும் உள்ளமை வெளிப்படையான விடயமேயாகும். மேல் நாடுகளில் உள்ளது போல எதிர்காலத்தில் தொழிற்றகைமை உள்ள பட்டதாரிகளே ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

தற்போது உள்ள ஏனைய இளம் ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவும், மேலதிக கல்வித் தகைமைகளைப் பெருக்கிக் கொள்ளவும் முயன்று வருகின்றார்கள். பண்புசார் கல்வி அபிவிருத்திக்குத் தேவையாக விடயமாக இது உள்ளது. எதிர்கால நன்மையைக் கருதி இந்த பிரமாணக் குறிப்பில் உள்ள ஊக்குவிப்புகள் வரவேற்கக் கூடிய விடயங்களாகும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு பாரிய அதிகரிப்பு இல்லை என்பது இது தொடர்பான பல ஆக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொழிற் சங்கங்கள் இந்த விடயத்தைப் பிரதான கோரிக்கையாக இதுவரை முன்வைத்ததாகத் தெரியவில்லை.

புதிய பிரமாணக் குறிப்பின்படி பதவி உயர்வு நடைமுறைகள் இங்குள்ள அட்டவணையொன்றின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. 2008.07.01 வரை இந்தத் தகைமைகளை வைத்தே 2011.01.01 தொடக்கம் நிலுவை வழங்க புதிய பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் உள்ளன.

முன்சொல்லப்பட்ட அரச நிதி நிலைமைகளின்படி இதுவும் கேள்விக் குறியாகவே இருக்கப் போகின்றது. இதை வழங்க 455 கோடி ரூபா இல்லாத நிலையில் புதிய சுற்றறிக்கையொன்றின் மூலம் அல்லது வேறு வகையில் நிலுவை வழங்கும் திகதியானது 2014.01.01 ஆகக் கொள்ளப்பட்டால் கூட ஆச்சரியம் இல்லை. சரியான அடிப்படை அற்ற ஆசிரியத் தொழில் சங்கங்களின் குடுமி சண்டையால் இதுதான் நடக்கப் போகின்றது.

அந்த அட்டவணையில் அடுத்த பதவி உயர்வு தொடர்பான கால அட்டவணை உண்டு. இதற்கு வருடங்கள் மட்டும் போதாது, சாதாரண செயலாற்றுமை அடிப்படையிலும் கூட வேறு பல தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். 2008.07.01 தொடக்கம் 2013.12.31 வரையிலான 66 மாதங்களில் அல்லது 5 1/2 வருட காலத்தில் எந்த ஏற்பாடும் நடைபெறவில்லை. ஆகவே 2013.12.31 வரை இவைகளில் இருந்து விடுவிப்பு வழங்கப்பட வேண்டும். இந்த நடைமுறை மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற செயற்பாடாகவே அமையும். ஒரு சேவையின் பண்புசார் விருத்திக்கு இப்படியான செயற்பாடுகள் பொருத்தமாக அமையமாட்டாது.

சில தொழிற் சங்கங்கள் தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் படியும், சில சான்றிதழ்களின் அடிப்படையிலும் போராட்டங்களை மழுங்கடித்து வருவதால் ஆசிரியர்களே பாதிக்கப்படுவார்கள். சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் வல்லவரான நிதி அமைச்சரான ஜனாதிபதிக்கும் அவரது ஆணைகளைச் செயற்படுத்தும் அதிகாரிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் சொல்லப்பட்ட செயற்பாடுகள் காரியத்தைச் சாதிக்க இலகுவாக வழிகளைக் காட்டிவிடும்.

சிரேட்ட அமைச்சின் செயலாளர் மகிந்த மடியஹேவா தலைமையில் புதிய குழுவொன்று கல்வித்துறை விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டு முதல் கூட்டம் 2013.09.06 அன்று நடைபெற்றது.

முகாமைத்துவ திணைக்களம், பொது நிர்வாக அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு, திறைசேரி, ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் றோயல் கல்லூரி அதிபரும் இக்குழுவில் இருந்தார். பலவித ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள றோயல் கல்லூரி அதிபர் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டதை இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதான ஆசிரியர் தொழிற்சங்கச் செயலாளர் வன்மையாகக் கண்டித்தார்.

சகல ஆசிரியர் தொழிற்சங்கங்களும் இக்கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவித்தன. புதிய சுற்றறிக்கையில் உள்ள சம்பளம் தொடர்பாகவும் அது அதிகரிக்கப்பட வேண்டும். என்பதுமே பிரதான கோரிக்கையாக இருந்தது. இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கோரிக்கைகளை எழுத்தில் தரவேண்டும் என குழு ஆசிரியர் தொழிற்சங்கங்களைக் கேட்டுக் கொண்டது. பழைய பிரமாணக் குறிப்பின் பதவி உயர்வு வழங்கும் திகதி 2013.12.31 வரை பின்போடுமாறு சில சங்கங்கள் இக்கூட்டத்தில் கோரிக்கை விடுத்தன.

புதிய பிரமாணக் குறிப்பை 2008.07.01 தொடக்கம் செயற்படுத்துமாறும் அதில் உள்ள நிபந்தனைகளுக்கு 2013.12.31 வரை சலுகை வழங்குமாறும் கோருவதே சரியான கோரிக்கையாகும்.

புதிய பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு விட்டது. இதற்கு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துவிட்டது. புதிய பிரமாணக் குறிப்பின் சம்பளத்திட்டங்கள் கூட 06/2006 (VIII) இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையாக வெளியிடப்பட்டு விட்டது. இந்த நிலையில் பெரிய மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்க்க முடியாது. கலந்துரையாடல்கள் கண்துடைப்புக்களுக்காக அல்லது குறைவரக்கூடாது என்பதற்காக நடைபெறலாம்.

சகலதும் முழுமையாகக் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. கிடைக்கக்கூடியதையாவது அறிவு பூர்வமாக அணுகி ஒரு மேசையில் அமர்ந்து கலந்துரையாடி, தீர்வு காண ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்வராத பட்சத்தில் கடந்த ஐந்தரை வருட காலமாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் கிடைக்கவுள்ள உரிமைகள் கூட கானல் நீராகி விடும் என்பதைக் கவலையுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# இலங்கையில் கல்விக் கொள்கைகள்: நடைமுறைகளும் விளைவுகளும்

✱ மா.கருணாநிதி

## முகவுரை

கல்விமுறைமையொன்றின் விளைதிறன்மிக்க செயற்பாடுகளுக்கு கல்விக் கொள்கைகளும் அவற்றினை நடைமுறைப்படுத்திய விதமும் முக்கியமாகக் கொள்ளப்படுகிறது. இலங்கையில் கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள் உருவாக்கப்படுவதற்கு அவ்வக் காலப்பகுதியில் நிலவிய சமூக பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள் செல்வாக்குச் செலுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. மரபுவழிக் கல்விச் செயல்முறைகள் செல்வாக்குச் செலுத்தியிருந்த காலத்தில் கல்விமுறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு மிகநீண்ட காலம் எடுத்தது. குடியேற்றவாத ஆட்சி நிலவிய காலங்களில் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகளும் அவற்றின் விளைவுகளும் ஆட்சியாளரின் தேவைகளை அடியொற்றியவையாக அமைந்திருந்தன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கை மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளில் ஏற்படவேண்டிய மாற்றங்களைக் கருத்திற்கொண்டு குடியேற்றவாதக் கல்விமுறைமையிலிருந்து விடுபட வேண்டியதன் அவசியம் நன்கு உணரப்பட்டமையால் துரித மாற்றங்களையும் அதனால் சகல மக்களும் நன்மையடையக்கூடிய வகையில் கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. ஆயினும் 1970களிலிருந்து கல்விச் சமத்துவம், கல்வியில் நியாயத்தன்மை மற்றும் கல்வியின் தராதர மேம்பாடு போன்ற எண்ணக் கருக்களுக்கு முக்கியத்துவம் தரும் கல்விக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. இவ்வாறு காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையின் காரணமாக இலங்கையின் கல்வி முறைமையில் உண்டான மாற்றங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி ஆராய்தல் முக்கியமானதொரு தேவையாகும். புதிய கல்விச் சட்டமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை தேசிய கல்வி ஆணைக்குழு 2008 ஆண்டிலிருந்து மேற்கொண்டு வருகின்றது. ஏறக்குறைய 70 ஆண்டுகளின் பின்னர் மேற்கொள்ளப்படும் இம்முயற்சியானது உலகளாவிய செல்நெறிகளுடன் இலங்கையின் கல்வி இணைந்து செல்லத்தக்க வகையில் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற் துறையில் பேராசிரியராகப் பணிபுரிகின்றார்.



2015 ஆம் ஆண்டில் இலங்கையில் கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் இடம்பெறவுள்ளதால் ஆசிரியர்களும் கல்வியில் ஆர்வமுள்ள ஏனையோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கருத்துக்களை முன்வைப்பதற்குரிய சில அடிப்படைகளை இக்கட்டுரை தருமென நம்புகிறேன்.

**குடியேற்றவாத ஆட்சிக் காலத்தில் கல்வி**

இலங்கை குடியேற்றவாத ஆட்சியாளரின் பிடியில் சிக்குண்டிருந்த காலத்தில் கல்விசார்ந்த தீர்மானங்களைக் குடியேற்றவாத ஆட்சியாளரே மேற்கொண்டனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கல்விசார்ந்த நடைமுறைகளிலிருந்து இவற்றைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். குடியேற்றவாத அட்சியாளரின் தேவைகளை நிறைவுசெய்ய வேண்டிய கல்விமுறை என்பதிலிருந்த உள்ளூர்த் தேவைகளை அடியொற்றிய கல்விமுறைமையை இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் உருவாக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. பிரித்தானியரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த கல்விக் கொள்கைகளில் உள்ளூர்ச் சமூக பொருளாதார மற்றும் தனியாள் அபிவிருத்திக்குப் பொருத்தமான கல்விக் கொள்கைகள் படிப்படியாக இடம்பெறத் தொடங்கின. குறிப்பாக 1939 இலிருந்து ஏற்படத்தொடங்கிய மாற்றங்கள் 1972இன் பின்னர் தீவிரமடையத் தொடங்கியது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1972 இன் பின்னர் உருவாக்கப்பட்ட கல்விக்கொள்கைகள் மிகமுக்கியத்துவம் வாய்ந்தவை. இலங்கைக் கல்விமுறையின் வெற்றி மற்றும் தோல்விகள் இக்கல்விக் கொள்கைகள் விளைதிறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த விதத்திலேயே தங்கியிருந்தன. இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவந்த மரபுவழிக் கல்வி நிறுவனங்கள் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோர மாகாணங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததுடன் மேற்கு நாட்டுக் குடியேற்றவாத ஆட்சியின் விரிவாக்கத்துடன் ஏற்பட்ட அரசியல் சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களால் செயலிழந்தன. குடியேற்றவாத ஆட்சியாளர் உயர் குழாத்தினருக்கான கல்வியை அறிமுகம் செய்தனர். ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட பல்வேறு மாற்றங்களுக்கு மத்தியில் இலவசக் கல்வியையும் அறிமுகம் செய்தனராயினும் அதன் விளைவுகள் உரிய பலாபலன்களைத் தரவில்லை. இன்றைய கல்விமுறைக்கான அடிப்படைகள் 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சியுடன் உருவானது.

பிரித்தானியர் விருத்தி செய்த கல்விமுறைமையானது அவர்களது நிருவாகத்திற்கு தேவையான ஆளணியினரை பயிற்றுவிப்பதையும் பிரித்தானியச் சமூக நியமங்களை உருவாக்குதலையும் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதாரத்தினால் பெற்றுக்கொண்ட மிகை இலாபத்தினால் வளம்பெற்ற மேலைநாட்டுக் கல்விமுறைமை இலங்கையில் மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றத்துக்கு வழிகோலியது. குடியேற்றவாதத்தின் நேரடியாட்சி 1930களில் முடிவடைந்த வேளையில் அரசியல்நிலை மாற்றங்களுக்கு வலுவூட்டக்கூடிய வகையில் கல்விக்கு முக்கியமளிக்கப்பட்டமை இக்காலத்தில் இடம்பெற்ற முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வாகும். இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் பிரித்தானியரின் கல்விக் கொள்கையால் தாம் புறக்கணிக்கணிக்கப்பட்டனர் என்னும் விரக்தி மனப்பான்மையை எடுத்துக்காட்டி கல்வி எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை வலியுறுத்தத் தொடங்கினர்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகள் இலங்கைச் சமூகங்களின் பரவலான மற்றும் துரித அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கத் தொடங்கியன. 1943இல் C.W.W. கன்னங்கரா குழுவினரின் விதந்துரைகளின்படி இலவசக் கல்வியும் இலவசக் கல்விக் கொள்கைக்கு வலுவூட்டும் வகையில் தொடர்ந்து அறிமுகமான பயிற்றுமொழிக் கொள்கை, புலமைப் பரிசில் திட்டம், மத்திய பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை என்பன கல்வியை உள்ளூர் மயப்படுத்துதலில் முக்கியத்துவம் பெற்றன. மேலும் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகங்களை உருவாக்கும் நடவடிக்கைகளும் முதன்மை பெற்றன.

சுதந்திரத்தின் பின்னர் கல்விக்கொள்கை தொடர்பான பல வெள்ளை அறிக்கைகளும் சீர்திருத்தங்களும் கல்விக்கொள்கைகளும் அறிமுகமாயின. ஆயினும் 1972இலும் அதன் பின்னரும் உருவாக்கப்பட்ட கொள்கைகள் இலங்கையைப் பொறுத்தவரையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனலாம். அவற்றில் இடம்பெற்ற முக்கியமான விடயங்களும் அவற்றின் நடைமுறைகளும் விளைவுகளும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

கல்விக்கொள்கை உருவாக்கம் என்பது பரந்த சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார மாற்றங்களின் பதிற்குறியாகும். நாட்டில் இடம்பெற வேண்டிய மாற்றங்களுக்கும் அவையே அடிப்படையாக அமைகின்றன. கல்விக் கொள்கைகளால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் நாட்டின் அபிவிருத்தியிலும் முக்கியமான பொறுப்புகளை ஏற்கின்றன. சுதந்திரத்தின் பின்னர் வந்த கல்விக் கொள்கை மாற்றங்கள் முக்கியமாக அரசியல் சார்ந்த செயற்பாடகவே இருந்து வந்தன என்பதனையும் 1972இலிருந்து தொடர்ந்து வந்த மாற்றங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையின் கல்விக் கொள்கையாக்கங்கள் ஆரம்பத்திலிருந்தே கல்வியைச் சனநாயகப்படுத்தும் நோக்கிலும் கல்வியிலே நிலவிய பிரதேச ரீதியான மற்றும் சமூக பொருளாதார சமத்துவமின்மைகளை நீக்குதல் என்ற நோக்கிலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இக்காலப்பகுதிகளில் முன்வைக்கப்பட்ட கல்விக்கொள்கைகளின் இன்னொரு நோக்கம் தராதர மேம்பாடு மற்றும் இலங்கையின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்குக் கல்வியைப் பயன்படுத்துவதுமாகும். இலங்கை பெற்றுக் கொண்ட சுதந்திரத்தினை உறுதிசெய்தல் 1972க்கு முன்னருள்ள காலப்பகுதியில் முக்கியமாக அமைந்தது என்பதுடன் அக்காலகட்டங்களில் நிலவிய சமூக பொருளாதார , நகரம் கிராமம் மற்றும் பால்நிலை அடிப்படையில் நிலவிய வேறுபாடுகளைக் குறைத்து, கல்வியை சனநாயகப்படுத்தும் நோக்கத்தை அடையும் கல்விக்கொள்கைகள் உருவாக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் முன்வைக்கப்பட்ட முக்கியமான கொள்கைகள் என்ற வகையில் இலவசக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி போதனாமொழி மாற்றம், ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளின் தொகையில் ஏற்பட்ட விரிவாக்கம், பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் மற்றும் பல்கலைக்கழகக் கல்வியில் குறிப்பாகக் கலைத்துறைக் கல்வியில் ஏற்பட்ட விரிவாக்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை இலங்கையின் சமூகம் சார்ந்த குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. எழுத்தறிவு வீதம், பாடசாலைக் கல்வியில் பங்கேற்போர் வீதம் ஆகியவை துரிதமாக அதிகரித்தன. சுதந்திரத்தின் பின்னர் வலுவடைந்த சமத்துவ நோக்குடைய கொள்கைகள் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து தாய்மொழிக் கல்வியையும் பாடசாலைக் கல்வியில் பங்கேற்பதனைத் துரிதப்படுத்தும் நோக்கில் இடைநிலைப் பாடசாலைகளின் தொகையை விரிவுபடுத்தியும் பாடசாலைகளின் தரத்தினை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக 1946-1963 இடைப்பட்ட காலப்பகுதியில் பாடசாலைகளின் தொகை அதிகரித்தது. 5 -14 வயதுப் பிரிவிலுள்ளோரின் பங்கேற்பு 1946இல் 57.6% மாக இருந்து 1963 இல் 71.7% மாக அதிகரித்தது. இப்பங்கேற்பில் வசதிபடைத்தோரின் பிள்ளைகள் மட்டுமன்றி கிராமப்புறங்களிலிருந்தும் பெருந்தொகையானோர் பங்கேற்றனர். பல்கலைக்கழகக் கல்வியிலும் (1960 களிலிருந்து) கிராமப்புற மாணவர்கள் அதிகளவில் பங்குபற்றத் தொடங்கினர்.

**கல்விக் கொள்கைகள்: 1972 உம் அதன் பின்னரும்**

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் மேற்கூறியவாறான சமதர்ம நோக்கிலான கொள்கைகள் அறிமுகமான போதிலும் 1972இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் ஏனையவை யாவற்றிலும் பார்க்க இன்று வரையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. 1972இல் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களும் இலங்கையில் அக்காலத்தில் நிலவிய அரசியல் மற்றும் பொரளாதாரப் பிரச்சினைகளுக்கான மாற்று வழிகளைக் கல்வியின் மூலம் தேடமுற்பட்டன. இச்சீர்திருத்தங்களிலும் கல்வியை சனநாயகப்படுத்தும் நோக்கிலான கொள்கைகளின் தொடர்ச்சிகள் காணப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் பொதுக்கல்விமுறைமையை அறிமுகப்படுத்தும் நோக்கில் எல்லோருக்கும் ஆகக்குறைந்தது 9 ஆண்டுக் கல்வியை வழங்கக்கூடியவாறு பாடசாலை முறைமையை மீளமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் உயிரோட்டமுள்ளதாகவும் கல்வியின் தராதர மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டும் பல மாற்றங்கள் முன்மொழியப்பட்டிருந்தன. இதுகால வரையில் நிலவிவந்த உயர் குழாத்தினருக்கான கல்வியின் அம்சங்களைக் குறைத்தலும் உயர் அரச உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கல்வியில் ஈடுபாடு காட்டுதல் என்ற எதிர்பார்ப்புகளைக் குறைத்து தொழில் மாண்பினை மதிக்கும் மற்றும் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்ட கொள்கைகளாக அவை அமைந்தன.

பிரித்தானியர் கொள்கையின் முக்கியகூறாக அமைந்த கற்கைநெறிகளில் வேறாக்கமானது இலங்கையிலுள்ள பிள்ளைகள் எல்லோரும் கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற முக்கியமான பாடங்களைக் கற்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகளைத் திறந்துவிடவில்லை. 1972இல் அறிமுகமான கொள்கையின் வாயிலாக கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை எல்லோரும் படிப்பதற் கான வாய்ப்புகள் உருவாயின. 1971 இல் இலங்கையில் நிகழ்ந்த இளைஞர் அமைதியின்மைக்கும் முக்கிய காரணமாக இலங்கையின் கல்வி வேலையுலகுடன் பொருந்திச் செல்லவில்லை என்ற காரணத்தினால் பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழகக் கல்வியையும் முடித்துக்கொண்டு வெளியேறியோர் வேலைவாய்ப்பின்றி நீண்டகாலம் இருந்தனர் என்பதால் இலங்கையின் கல்விமுறை பெரிதும் விமர்சனங்களுக்குள்ளாயிற்று. பாடசாலைகளிலேயே பிள்ளைகளை வேலையுலகுக்கு திசைமுகப்படுத்துதல் அவசியமாயிற்று. கல்வியையும் வேயுலகினையும் தொடர்புபடுத்தும் விதத்தில் பொதுக்கல்வி முறையில் தொழில் முன்னிலைப் பாடங்கள் கற்பிக்கப்படுதல் வேண்டுமென விதந்துரைக்கப்பட்டது. அது போலவே பல்கலைக்கழக நிலையிலும் பட்டதாரி மாணவர்களைத் தொழிலுலகுக்குப் பயிற்றுவிக்கும் நோக்குடன் புதிய கற்கைநெறிகள் அறிமுகமாயின.

1972இல் அறிமுகமான கல்விக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறை களும் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாயின. முக்கியமாக, தொழில்முன்னி லைப் பாடத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்கள் பாடசாலைகள் அமைந்துள்ள சூழலில் காணப்படும் தொழில்சார் திறன்களில் மாணவர் பெற்றுக்கொள்ள வேண்டிய திறன்களை குறிப்பிட்டமை இலங்கையில் நிலவிய சமூக பொருளாதார வேறுபாடுகளை மீண்டும் வலியுறுத்தும் வகையில் அமைந்தனவென்ற கருத்து வலுவானதாக இருந்தமையால் 1977 இல் நிகழ்ந்த அரசியல் மாற்றத்துடன் கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் பற்றிச் சிந்திக்கப் பட்டன. இக்காலப்பகுதியில் அறிமுகமான இன்னொரு முக்கிமான விடயமாக சமூகக்கல்வி மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் ஒன்றிணைந்த பாடங்க ளாகக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கற்பிப்பதற்குரிய தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் போதாமை காரணமாகப் பிரச்சினைகள் தோன்றின. உதாரணமாக சமூகக் கல்வி மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் இவ்வாறு தோல்வியைத் தழுவின.

பல்கலைக்கழகங்களில் தொழிலுக்குத் திசைமுகப்படுத்தும் கற்கைநெறிக ளைத் தொடர்ந்தவர்கள் அக்கல்வியின் பலாபலன்களை பொருளாதாரத் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்காமையால் அனுபவிக்க முடியவில்லை. ஆயினும் சீர்திருத்தத்தில் குறிப்பிட்டது போல பொதுக்கல்வி ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையால் மேற்கூறிய பிரச்சினைகளின் மத்தியி லும் பாடசாலைக்கல்வியில் தொகைசார்ந்த விரிவாக்கங்கள் குறிப்பிடத் தக்களவில் உருவாயின. குறிப்பாக தரம் 6 - 12 களில் 1970 களில் 9,452,908 ஆக இருந்த மாணவர் தொகை 1977இல் 9,91,224ஆக அதிகரித்தது. கல்வியைச் சனநாயகப்படுத்தும் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாக இதனைக் கருதலாம்.



1977இலிருந்து இலங்கையின் கல்வியில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் முன்னெடுக்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட்பாடுகள் அத்தகைய மாற்றங்களுக்கு அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாக இருந்தன. குறிப்பாக இதுகாலவரையில் இருந்துவந்த கல்விசார் இலக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் நடைமுறைகள் மீள்பார்வைக்கு உட்பட்டன. 1977 - 2000 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற கொள்கை மாற்றங்களும் கல்வியைச் சனநாயகப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே தொடர்ந்தும் ஈடுபாடுகாட்டி வந்தன. 1978இல் குடியரசு அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களில் கல்வி மேம்பாட்டுக்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. இலங்கை மக்கள் எல்லோரையும் எழுத்தறிவு டையோராக்குதல், கல்வியின் சகல நிலைகளிலும் சமகல்வி வாய்ப்பினை உறுதிசெய்தல் என்பன இக்காலப்பகுதியில் பிரதான கொள்கையாக இருந்தன.

இதனைத் தொடர்ந்து 1981இல் அறிமுகமான கல்வி வெள்ளை அறிக்கையும் பாடசாலை அமைப்பு, கலைத்திட்டம் மற்றும் கல்வி நிருவாகமுறை போன்ற விடயங்களில் மாற்றங்களைக் கொண்டுவரும் கொள்கைகளை முன்வைத்தது. கல்வியில் சமவாய்ப்பினை அடைந்துகொள்வதற்குப் பாடசாலைகளுக்கான வளங்களைப் பகிர்தளிப்பதில் நியாயத்தன்மை பேணப்படாமையைப் பெருந்தடையாகக் குறிப்பிடலாம். 1981இல் கல்வி வெள்ளை அறிக்கை தெரிவித்த முக்கிய விடயமாக நியாயத் தன்மையுடன் கூடிய வகையில் வளங்களைப் பகிரும் நோக்கில் கொத்தணிப் பாடசாலைகளை அறிமுகம் செய்தமையைக் கூறலாம் . கொத்தணிப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் சகல வளங்களையும் கொண்டவையெனக் கருதப்பட்ட பெரிய பாடசாலைகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. பத்துப் பாடசாலைகள் அல்லது 3000 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் தொகுதி ஒரு கொத்தணியாகவும் இத்தொகுதியில் வளமுள்ள பாடசாலை தலைமைப் பாடசாலையாகவும் தொழிற்பட வேண்டும் என்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இருந்த போதிலும் கொத்தணியாகச் செய்யபடுவதில் தலைமைப் பாடசாலைகள் வெளிப்படுத்திய பொருத்தமற்ற நிருவாக முறைகள் எதிர்பார்த்த வெற்றியைத் தருவதற்குத் தடையாக இருந்தன. வளங்களைப் பகிர்வதில் சமநிலையின்மை காணப்பட்டது. குறிப்பாக ஆசிரியர்களை பகிர்தளிப்பதில் மாவட்டங்களுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் இருந்தன.

எல்லோருக்கும் கல்வியை வழங்குதல் என்னும் குறிக்கோளை அடையும் நோக்கில் இலவச பாடநூல்கள், சீருடைகள், இலவச மதிய போசனம் ஆகியவற்றை வழங்குவதில் 1989 தொடக்கம் கூடுதலான ஆர்வம் இருந்தது. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் அதன் பலாபலன்களை உயர் வகுப்பினர் எவ்வாறு அனுபவித்தார்களோ அதே விளைவுகள் அத்தைய திட்டங்களாலும் நிறைவேறின. மேற்கூறிய விடயங்களை பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட காலதாமதங்களால் தூரத்துக் கிராமப்புறப் பாடசாலைகளில் கற்ற பிள்ளைகள் உரிய நேரங்களில் அவ்வளங்களைப் பெறமுடியாமல் இருந்தனர்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம் இன்னொரு மைல் கல்லாகும். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஒவ்வொரு காலகட்டத்திலும் கல்விக்கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுதல் வழக்கமானதொரு நடவடிக்கையாக இருந்துள்ளது. ஆட்சிமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்தாலும் கல்விச் செயற்பாடுகள் எவ்வித தடைகளுமின்றி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற நோக்குடன் 1989இல் தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு கல்வி தொடர்பாகப் பொதுமக்கள் மற்றும் பயனாளிகளின் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு 1992இல் இலங்கைக் கல்விக்கான தேசிய இலக்குகளையும் கல்வியின் மூலம் மாணவர்கள் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகளையும் திட்டவட்டமான முறையில் முன்வைத்தது. இன்று பாடசாலைகளால் முன்னெடுத்துச் செல்லப்படும் கலைத்திட்டம் மற்றும் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகள் யாவும் தேசிய கல்வி இலக்குகளை அடையும் நோக்கில் நெறிப்படுத்தப்படுகின்றன. இவற்றோடு தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்கும் நோக்கில் செயல்வழி சார்ந்த உபாயங்களையும் தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கிய தோடு பொதுக்கல்வியைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைசார்ந்த ஆலோசனைகளை உருவாக்கும் பொருட்டு 12 தொழில் நுட்பக் குழுக்களையும் உருவாக்கியது.

**1998 தொடக்கம் 2003 வரையுள்ள காலத்தில் கல்விக் கொள்கைகள்**

*மீண்டும் 1997/1998இல் புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சீர்திருத்தத்தில் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டதுடன் ஆரம்பநிலை, கனிட்ட இடைநிலை மற்றும் சிரேட்ட இடைநிலைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் முன்மொழியப் பட்டன. ஆரம்பக் கல்விச் சீர்திருத்தமானது 1998இல் கம்பஹா மாவட்டத்தில் முன்னோடித்திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சீர்திருத்தத்தில முன்மொழியப்பட்ட வற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கலைத்திட்டச் சாதனங்கள் மற்றும் நூல்கள் பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்டனவாயினும் அவை மாணவர் மையக்கல்விக்கு உகந்தனவாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

கல்வியின் தராதர விருத்தி என்னும் நோக்கில் தேசிய இலக்குகளும் தேர்ச்சிகளும் முன்வைக்கப்பட்டன. கல்விச்செயற்பாடுகளை திட்டமுறையில் நெறிப்படுத்துவதற்கு இலக்குகள் வழிகாட்டல்களை வழங்கின. ஆயினும் குறிக்கோள் உருவாக்கத்திலும் உறுதியான நிலைமை இருக்கவில்லை என்பது மதிப்பீட்டாளர்களின் கருத்தாகும்.

1998 தொடக்கம் 2003 இடைப்பட்ட காலத்தில் தேசிய கல்வி ஆணைக்குழு மேற்கொண்ட மீள்நோக்குகளின் அடிப்படையில் கலைத்திட்டச் சீர்திருத்தத் துக்கான ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இவற்றுள் ஆரம்பக் கல்விக்குரிய கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் அதிகளவில் மாணவர் மையக் கல்வியை வலியுறுத்தும் பல கூறுகளை உள்ளடக்கியிருந்தன. நான்கு பாடங்களை உள்ளடக்கிய வகையில் (முதல்மொழி, கணிதம், சமயம், சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகள்) ஒன்றிணைந்த அணுகுமுறை, தரம் 1இலும் 2இலும் தொடர்பாடலுக்கான வாய்மொழி ஆங்கிலம் மற்றும் மூன்றாம் வகுப்பிலிருந்து முறைசார் ஆங்கிலம், ஆரம்பக் கல்வியை மூன்று நிலைகளாக ( முதல்நிலை 1, முதல்நிலை 2. முதல்நிலை 3) ஒழுங்குசெய்தல், கற்றல் - கற்பித்தல் மூன்று கூறுகளாக (வழிகாட்டப்பட்ட விளையாட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு மற்றும் மேசைவேலை) தனியாள் தேவைகளுக்கு உகந்த வகையில் கற்றல் - கற்பித்தலை ஒழுங்கு செய்வதற்கு வசதியாக மாணவர்களின் நுழைவுத் தேர்ச்சிகளை இனங்காணல், முதன்மை நிலைகள் ஒவ்வொன்றிலும் மாணவரின் கற்றல் தேர்ச்சிகளை இனங்கண்டு அந்நிலைகள் முடிவடையும் தருணத்தில் பாண்டித்திய நிலையைக் கணிப்பிடுதல், மற்றும் வகுப்பறையைத் தளமாகக் கொண்ட கணிப்பீடும் பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடும் மேற்பார்வையும் போன்றவை ஆரம்பநிலையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களுக்குரிய முன்மொழிவுகளாக இருந்தன.

ஆரம்பக் கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கிய பிரதான பிரச்சினையாக, 10,000 பாடசாலைகளிலும் 5 தரங்களிலும் ஒரே நேரத்திலும் ஒரேவிதத்திலும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது பாரிய சவாலாக அமைந்தது. ஆரம்பக் கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகஞ் செய்யப்பட்ட காலங்களில் அவை பற்றி ஆசிரியர்கள் அறிந்திருந்த அளவுக்கு அதிபர்கள் அறியாமல் இருந்தனர் என்பது பெருங்குறைபாடாக இருந்தது. இச்சீர்திருத்தத்தின் அமுலாக்கம் பற்றி தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் மேற்கொண்ட ஆய்வுகளில் ஆரம்ப வகுப்பிற்கென ஆயத்தஞ் செய்யப்பட்ட கலைத்திட்டச் சாதனங்கள் பல ஆசிரியர் நெறிப்படுத்துபவையாக இருந்தமையால் அவை மாணவரின் ஆக்கத்திறனையும் சுயமுயற்சியையும் கட்டுப்படுத்தின எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீண்டும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஆலோசனைகள் பற்றிச் சிந்திக்கலாயினர்.

கலைத்திட்டச் சீர்திருத்தத்துத்துக்கான ஆவணங்கள் கனிட்ட இடைநிலை தொடர்பான பல விடயங்களையும் உள்ளடக்கியிருந்தன. இந்நிலைக்குரிய ஆலோசனைகள் தொடர்பாக மீளாய்வுகளை மேற்கொண்டோர் இந்நிலையில் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களின் கூறுகள் எண்ணக்கரு ரீதியாகவும் அவற்றினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் தெளிவற்ற நிலையையும் அவை குறித்த தெளிவான நெறிப்படுத்தல்களைக் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

கனிட்ட இடைநிலையில் இடம்பெற்ற மாற்றங்களாக சமூகக் கல்விக்குப் பதிலாக பொது விஞ்ஞானம், தரம் 7-9 வரையில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், வாழ்க்கைத் திறன்களுக்குப் பதிலாக வாழ்க்கைத் தேர்ச்சிகள், செயற்பாட்டு அறையுடன் செயல்முறைகளும் தொழில்நுட்பத் திறன்களும், இரண்டாம் மொழியாக சிங்களம் / தமிழ் மொழிகளைக் கற்க ஊக்குவிக்கப்பட்டமை மற்றும் ஆலோசனையும் வழிகாட்டலும் அறிமுகப்படுத்தப்பட்டமையைக் குறிப்பிடலாம். இவை 1999இல் தரம் 6இலும் 9இலும் 2000இல் தரம் 7இலும் 2001இல் தரம் 8இலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கனிட்ட இடைநிலையில் கலைத்திட்ட உள்ளடக்கம் சுமையாகவும், கற்றல் கற்பித்தல் செயல்முறைகள் ஆசிரியர் மையமானதாகவும், செயற்பாடுகளுடன்கூடிய கற்பித்தலை மேம்படுத்துவதில் எடுக்கப்பட்ட முயற்சிகள் மிகக் குறைவாக இருந்தமையையும் சுட்டிக்காட்டியதுடன் சமாதானக் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சகவாழ்வு, சனநாயகக் கோட்பாடுகள், மனித உரிமைகள், பால்நிலைச் சமத்துவம், சுற்றாடலைப் பேணுதல் போன்றவை தொடர்பான எண்ணக்கருக்கள் நூல்களிலும் ஆசிரியர் கைந்நூல்களிலும் கருத்துள்ள வகையில் ஒன்றிணைக் கப்பட்டமைக்கு ஆதாரங்கள் இல்லை எனவும் தேசிய ஆணைக்குழுவின் அறிக்கை எடுத்துக்காட்டியது. இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகளுக்கு இடையில் பாரிய வேறுபாடுகள் நிலைமையும் மற்றும் மேற்பார்வையும் கண்காணிப்பும் விளைதிறனற்றுக் காணப்பட்டமையும் முக்கிய பிரச்சினைகளாகச் சுட்டிக்காட்டப்பட்டன.

ஆரம்ப மற்றும் கனிட்ட இடைநிலைகளுடன் ஒப்பிடுகையில் சிரேட்ட இடைநிலையில் (தரம் 9-11 வரை) குறைந்தளவிலேயே மாற்றங்கள் இடம்பெற்றன. இந்நிலையில் விஞ்ஞானத்திற்குப் பதிலாக விஞ்ஞானமும் தொழிநுட்பமும் என்ற பாடம் அறிமுகமான வேளையில் அப்பாடம் பொது மக்கள் மத்தியில் முழுமையான நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அமைய வில்லை எனவும் தொழில்சார்ந்த பாடங்களைக் கற்பிப்பதற்குப் போதியளவில் வளங்கள் இருக்கவில்லை எனவும் இப்பாடத்திற்குரிய ஆசிரியர்களின் தராதரத்தில் நம்பிக்கை இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரிதும் வரவேற்பைப் பெற்றன. முதலாவதாக, இந்நிலையில் பாடங்களின் தொகை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டது. பொது சாதாரணப் பரீட்சையின் அறிமுகம், கணிதம், உயிரியல் ஆகிய பாடங்கள் இணைந்த பாடங்களாக அறிமுகமாதல், செயற்திட்டமும் ஒப்படையும் கட்டாயமான கூறாதல், பொது ஆங்கிலம் கட்டாயமான பாடமாதல், கட்டாய வரவு மற்றும் பாடசாலைத் தளநிலைக் கணிப்பீட்டுக்கான மேற்பார்வை ஏற்பாடுகள் ஆகியன முக்கியமான விடயங்களாக அமைந்தன. இந்நிலையில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் ஆசிரியரிலும் பார்க்க மாணவரிடத்திலும் பெற்றோரிடத்திலும் வரவேற்பைப் பெற்றன. ஆயினும் பாடசாலை வரவு 80 சதவீதமாக ஆக்கப்பட்டமை மாணவர் மத்தியில் வரவேற்பினைப் பெறவில்லை. விஞ்ஞானம் தொடர்பில் செய்முறைகள் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் அவற்றிலும் மாணவரின் ஆர்வம் பெரிதாக வெளிப்படுத்தப்படவில்லை மற்றும் பல பாடசாலைகள் செய்முறைக்கான பௌதிக வளங்களையும் ஆளணி வளங்கயையும் கொண்டி ருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. "பரீட்சை நோய்" மாணவர் களை வெகுவாகப் பாதித்தது. ஆங்கிலக் கல்வியும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. க.பொ.த உயர்தரத்தில் அறிமுகமான சீர்திருத்தங்கள் முக்கியமான விடயங்களை நடைமுறைப்படுத்த முற்பட்ட வேளையிலும் பாடசாலைகளுக் கிடையில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் நியாயத்தன்மையைக் குறைத்ததாக வும் ஆய்வாளர்கள் கண்டுகொண்டனர்.

1998 தொடக்கம் 2003 வரையில் நடைமுறையிலிருந்த கல்விச் செயற்பாடு களை மீளாய்வுசெய்த தேசிய கல்விஆணைக்குழு கல்வியின் தராதரம், பொருத்தப்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மேலும் பல விதந்துரை களைச் செய்ததுடன் 2007இல் மேற்கொண்ட மாற்றங்களுக்கு அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டன. தேசிய கல்வி ஆணைக்குழுவானது ஆராய்ச்சி முடிவுகளைத் துணையாகக் கொண்ட புதிய கொள்கைகளை உருவாக்கியமை இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். இதனைக் குறித்துப் பல புதிய ஆய்வுகளும் இடம்பெற்றன. 2003இல் எடுத்துக்கூறப்பட்ட விடயங்களில் அதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து சில மாற்றங்கள் செய்யப்பட்டன. உதாரணமாக, 1992இல் அறிமுகமான 5 தேர்ச்சிகளுடன் மேலும் இரண்டு தேர்ச்சிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இத்தகைய தேர்ச்சிகள் யாவும் ஆளுமை விருத்தி மற்றும் வேலையுலகுக்கு ஆயத்தஞ் செய்தல் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் கொள்கைசார் இலக்குகளாக தொடர்ந்தும் கல்வி வாய்ப்பு, நியாயத்தன்மை மற்றும் தராதரமும் பொருத்தப் பாடும் என்பவற்றை மையப் பொருளாகக் கொண்டிருந்தது.

இக்காலப்பகுதியில் முன்மொழியப்பட்ட விடயங்கள் மீண்டும் கட்டாயக் கல்வி ( 5-16) ஐந்தாந்தரப் புலமைப் பரீட்சையை மீளமைத்தல், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மணவர்களுக்கு வழங்கும் உதவித்தொகைக்கான குடும்ப வருமான எல்லையை அதிகரித்தல், பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு மதியஉணவு வழங்குதல், பாடசாலை அமைப்பில் ஆரம்பநிலை (1-5) இடைநிலை ( 1 - 11, 6-11) சிரேட்ட இடைநிலை ( 1-13, 6-13) என மாற்றங்கள் கொண்டுவருதல் . முக்கியமாக ஆரம்பப் பாடசலைகளை, இடைநிலைப பாடசாலைகளுக்கான ஊட்டப் பாடசாலைகளாக அமையக்கூடிய விதத்தில் மீளஒழுங்கு செய்தல், ஆரம்ப வகுப்புகளில் பயிற்றுமொழி சிங்களம் / தமிழ் மொழியாக இருத்தல் போன்றவற்றை வலியுறுத்தியமையைக் குறிப்பிடலாம்

கல்வியின் தராதர மேம்பாடு என்ற நோக்கில் ஒவ்வொரு நிருவாகப் பிரிவிலும் ஒரு பாடசாலையையேனும் உன்னதமான கல்வி நிலையமாக (மாகாணக் கல்வி நிலையமாக) மாற்றுதல் தொடர்பாகவும் ஆலோசனைகள் பரிமாறப்பட்டிருந்தன. பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்துதல் என்னும் விடயத்தில் அப்பாடசாலைகளை இனங்காண்பதற் குரிய நியதிகள் இறுக்கமான முறையில் முன்வைக்கப்பட்டன. தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதற்கான நியதிகள் 1984இல் முன்வைக்கப் பட்டு அவற்றினடிப்படையில் இலங்கை முழுவதிலும் 14 பாடசாலைகளே இனங்காப்பட்டிருந்தன. காலப்போக்கில் அத்தகைய நியதிகள் கவனத்தில் எடுக்கப்படாமல் தேசியப் பாடசாலையாவதற்குத் தகுதியற்ற பாடசாலையாகவும் அரசியல் அனுசரணையுடன் தேசியப்பாடசாலை என்ற அந்தஸ்தினை அடைந்துகொண்டன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கலேயே கடுமையான நியதிகள் முன்வைக்கப்படன.

ஆறாந் தரத்திலிருந்து இருமொழிப் போதனை அறிமுகமாதல் பற்றியும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இருமொழிப் போதனையானது ஒரே வகுப்பில் சில பாடங்களை ஆங்கில மொழியிலும் பல பாடங்களைத் தாய்மொழியிலும் கற்கும் ஏற்பாடாக இது அமைந்தது. ஆங்கில மொழித் தேர்ச்சியை விருத்திசெய்தல் என்பது இதன் நோக்கமாகும். 1998இல் க.பொ.த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரத்தில் ஆங்கிலம் கற்பிக்கப்படுதல் பற்றிக் கூடுதலான அழுத்தத்துடன் எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும் அநேகமான பாடசாலைகளில் போதியளவில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையைக் கருத்திலெடுத்து ஆங்கிலம் கற்பதில் மாணவரின் விருப்பத் தெரிவுக்கு இடமளிக்கப்பட்டது.

1972இலிருந்து இடைநிலையில் சமூகக்கல்வி ஒன்றிணைந்த பாடமாக கற்பிக்கும் நோக்கில் அறிமுகமாகி இருந்தது. ஏறக்குறைய 30 வருடங்களாக சமூகக் கல்விப் பாடம் கற்பிக்கப்பட்டிருந்தபோதும் அப்பாடத்தின் மூலம் அடையப்பட வேண்டிய இலக்குகள் சரிவர அடையப்படவில்லை என்ற காரணத்தைக் கூறி அப்பாடத்தினை மீண்டும் வரலாறு, புவியியல் மற்றும் குடியுரிமைக்கல்வி என்றவாறு தனித்தனியாக கற்பிக்க வழிகோலினர். இதனிலும் மேலாக 12ஆம் 13ஆம் தரங்களில் கலைத்திட்டமானது கல்விசார் துறைகளாக - கலை, விஞ்ஞானம் மற்றும் வர்த்தகம் - பிரிக்கப்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தேசிய கல்வி ஆணைக் குழுவின் மேற்கூறியவாறான விதந்துரைகள் சில தற்பொழுதும் நடைமுறையிலுள்ளன. அவை பற்றிய தொடர் மீளாய்வுகளும் நடந்த வண்ணம் உள்ளன. இத்தகைய மீளாய்வுகளில் மிகமுக்கியமாக 2005இல் உலக வங்கியானது மாணவர் சேர்வு, இடைவிலகல், மீண்டும் ஒரே வகுப்பில் தங்குதல், மற்றும் மாணவர் அடைவு, ஆசிரியர் பகிர்வு முதலிய விடயங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டமை கவனத்திற்குரியது.

இலங்கையின் கல்விமுறைக்கு மேலும் வலுவூட்டும் வகையில் பல கொள்கையாக்கங்களும் அவற்றுக்கு ஏற்ற சீர்திருத்தங்களும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. 2008ஆம் ஆண்டில் புதிய கல்விச் சட்டம் ஒன்றுக் கான அடிப்படைகளை வரைவதற்கான குழுவொன்று தேசிய கல்வி ஆணைக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது. 1930கள் இலங்கையின் கல்வியில் மாறுநிலைக் கலமாகும் 1939இன் 31ஆம்இலக்கக் கல்விச் சட்டமும் அச்சட்டத்தில் 1945, 1946, 1947, 1951, 1958 மற்றும் 1973 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தச் சட்டங்களும் இலங்கையின் கல்வியை இதுகால வரை ஆட்சிசெய்கின்ற சட்டங்களாக இருந்து வந்துள்ளன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பொதுக்கல்வியுடன் தொடர்புடைய பல சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இவற்றுள் 1960ஆம் ஆண்டின் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிச் சட்டம் 1968ஆம் ஆண்டின் பொதுப் பரீட்சைகள் சட்டம், 1979ஆம் ஆண்டின் பிரிவேனாக் கல்விச் சட்டம் 1985 ஆம் ஆண்டின் தேசிய கல்வி நிறுவக கல்விச் சட்டம் 1986 கல்வியியல் கல்லூரிச் சட்டம் 1991 தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம் ஆகியவற்றுடன் பல சர்வதேசப் பிரகடனங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் 1939இல் கொண்டுவரப்பட்ட கல்விச் சட்டம் இப்பொழுது காலத்துக்குப் பொருத்தமற்றதாக உள்ளது. இலங்கை யின் கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல சீர்திருத்தங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பாரளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்ட பல சட்டங்கள் திருத்தப்படுதல் வேண்டும் என்பதனால் "சகல சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் பொருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அம்சங்களை உள்ளடக்கியதும் தேவையான புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தவும் அபிவிருத்தி சார்ந்த எளிமையான பரந்த அடிப்படையைக் கொண்ட புதிய கல்விச்சட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்" எனத் தேசிய கல்வி ஆணைக்குழு 2003இல் விதந்துரைத்தது. இதற்கமைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு மட்டங்களில் நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழு 7 துறைகளை இனங்கண்டு அவற்றின்கீழ் புதிய கல்விச் சட்டத்திற்கான வரைபினை தயாரித்து அதனை இப்பொழுது பாரளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. இதன் பின்னரும் பல சீர்திருத்தங்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன.

மேற்கூறிய விடயங்கள் எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும்பொழுது இலங்கையின் கல்விக் கொள்கைகள் தொடர்பாக இனங்காணப்பட்ட விடயங்கள் என்ற வகையில் கல்வியில் சமவாய்ப்பு, கல்வியில் நியாயத் தன்மை, கல்வியின் தராதர மேம்பாடு மற்றும் பொருத்தப்பாடு ஆகியவை இன்றுவரை தொடர்ந்து வந்துள்ளன. 1972ற்கு முன்னர் உள்ள காலகட்டத்தில் கல்வி வாய்ப்புகள் பற்றிய விடயங்களை உறுதிப்படுத்தல் முக்கிய இடத் தைப் பெற்றன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பல முன்னேற்றகர மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1960 களில் அரசாங்கம் பாடசாலைகளைப் போறுப்பேற்பதில் கவனமெடுத்தது. ஆயினும் பல கொள்கைகள் வெற்றியளிக்கவில்லை. தொடர்ந்த காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளும் அவற்றினடிப்படையிலான சீர்திருத்தங்களும் சில வெற்றிகளையும் தோல்விகளையும் தழுவின. இவ்விடயத்தில் கொள்கை உருவாக்கத்தினை இன்னும் ஆழமான மற்றும் விளைதிறனுள்ள முறையில் மேற்கொள்வதற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமானது.

## References


1. *Gunawardena, C et al (2002) Evaluation of the effectiveness of the implementation of Reforms in Primary Education. National Education Research and Evaluation Centre*

2. *Jeyasuriya,J.E (1969) Education in Ceylon: Before and After Independence, Wesley Press, Colombo*

3. *National Education Commission (2003) Envisioning Education for Human Development. Proposal for a National Policy Frame work on General Education in Sri Lanka.*

4. *New education act for General education in Sri Lanka. Context. Issues and Proposals. Final report 2009*

5. *Perera, L.P, Gunawardena, C, and wijetunge, S (2003) Evaluation of the effectiveness of the implementation of Educational Reforms at Secondary level (6 – 11) National Education Research and Evaluation Centre.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## ஆசிரியரும் தொழில் வகைகூறலும்

✱ ஆர். லோகேஸ்வரன்

தனிநபரோ, அல்லது நிறுவனமோ தமது நடத்தையில் அல்லது தொழிலில் ஏற்படும் நன்மை, தீமைக்கு தாமே பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையே வகைகூறல் என அர்த்தம் கொள்ளப்படுகிறது. இன்னுமொரு வகையில் தொழில் நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர் அல்லது பணியாளர்கள் அந்நிறுவனத்தினால் தனக்கு அல்லது தமக்கு வழங்கப்பட்டுள்ள சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்து கடமை புரிதல் வேண்டும். இவ்வாறு தான் அல்லது தாம் பணியாற்றும் நிறுவனத்திற்கு பொறுப்புள்ள வராக இருக்கும் நிலையே வகை கூறல் எனப்படுகிறது.

வகை கூறல் பற்றி பிரித்தானிய பிரதம மந்திரி ஜேம்ஸ் கெலகன் (*Jams Helakan*) கருத்து தெரிவிக்கும்போது "தான் மேற்கொள்ளும் பணி தொடர்பில் நிர்வாகிகள் அரசிற்குப் பொறுப்புச் சொல்லவும், தான் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு தானே பொறுப்பு கூறவும் கடமைப்பட்டுள்ளார்கள்." அவ்வாறு தனது பணிக்கு/ தீர்மானத்துக்கு பொறுப்புக்கூறும் நிலைபாட்டையே வகைகூறல் என அடையாளப்படுத்துகிறார். கல்வி முறைமைக்குள் "வகை கூறல்" என்ற எண்ணக்கருவை முதலில் வெளிப்படுத்தியவர் ஹெலக்ஸ் பென்ச் என்பவராகும். அவர் "கல்வி நிலைமைகளை நிறைவேற்றுவதற்கும் அது நடைபெறுகின்றதா? என்பதை வெளிப்படுத்துவதற்கான தகவல்களை வழங்க/ முன்வைக்க மேற்கொள்ளும் ஒப்பந்தம்" வகைகூறல் என சுட்டிக் காட்டுகின்றார்.

1962 யுனெஸ்கோ நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தொழில் மற்றும் தொழில்நுட்ப மகாநாட்டிலும், சர்வதேச கல்வி நிறுவனம், யுனெஸ்கோ ஆகியன இணைந்து நடாத்திய பொதுக் கல்வி தொடர்பான மகாநாட்டிலும் ஆசிரியர்களின் வகை கூறல் பற்றி காத்திரமான சில விடயங்கள் பரிந்துரைக் கப்பட்டது. அதன் அடிப்படையில் ஆசிரியர்களின் வகை கூறல் என்பது,

1. ஆசிரியர்களின் தொழில் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வது தமது நடத்தையில் தங்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு சகல ஆசிரியர்களும் தமது அனைத்து தொழில்சார் செயற்பாடுகளின் போதும் முடியுமான அளவு உச்சநிலையில் பங்களிப்பு செய்ய முயற்சித்தல் வேண்டும் என்றும்,

கட்டுரையாளர்
பத்தனை தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆசிரியர் அமைப்புகளின் பங்களிப்போடு ஆசிரியர்களின் செயற்பாடுகள் தொடர்பாக தொழிற் பிரமாணங்களை உருவாக்கி அவற்றை அத்தரத்தி லேயே பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும்,

3. மாணவர், பொது சமூகம் ஆகியோரின் நன்மைக்காக ஆசிரியர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் கல்விசேவை தொடர்பாக பூரண ஒத்துழைப்பு வழங்கும் வகையில் உழைத்தல் வேண்டும் என்றும்,

4. ஆசிரிய அமைப்புக்கள் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கநெறிகளை அவ்வாறே பின்பற்றி தொழில் கௌரவத்தை பாதுகாத்து தாம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்துக்கு அமைவாக தொழிற் பொறுப்புக்களை நிறை வேற்றுவதில் உறுதியுடன் இருத்தல் வேண்டும் என்றும்,

5. மாணவர்களினதும், சமூகத்தினதும் நன்மை கருதி ஆசிரியர்கள் கலைத் திட்ட செயற்பாடு மேலதிகமான நடவடிக்கைகளில் விருப்புடன் பங்கு பற்றுதல் வேண்டும் என்றும், சுட்டிக்காட்டுகின்றது.

ஆரம்ப காலங்களை விட அண்மைக்காலங்களில் கல்வி முறைமையில் வகைகூறல் என்ற சொற்பதம் பரவலாக பேசப்படும் விடயமாக மாறி வருவதை காண முடிகின்றது. பொதுவாகவே வாண்மைத்துவமிக்க தொழில்கள் அனைத்திலும் அதன் முக்கிய பண்புகளில் ஒன்றாக வகை கூறல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உதாரணமாக வைத்தியர் *(Doctor)* தனது நோயாளர்களுக்கு *(Patent)* சிகிச்சையளிக்கும் போது ஏற்படக்கூடிய எவ்வித பாதிப்புக்கும் அவரே வகைகூற கடமைப்பட்டுள்ளார். அதேபோல் சட்டத்தரணி *(Lawyer)* தனது கட்சிக் காரருக்கு *(Claient)* வழங்கப்படும் தீர்ப்புக்கு அவரே வகைகூற கடமைப்பட்டுள்ளார்.

அந்த வகையில் ஆசிரியர் தொழிலும் இன்று வாண்மைத்துவ தொழில்களுள் ஒன்றாக நோக்கப்படுவதனால் பாடசாலை என்ற நிறுவனத்தில் பணியாளர்கள் என்ற வகையில் மாணவர்களின் சகல அடைவு மட்டத்துக்கும் ஆசிரியர்களே வகைகூற கடமைப்பட்டுள்ளனர். இதன் பொருள் கற்பிக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்படுகின்றதோ அவர்களே கற்றலினால் ஏற்படும் விளைவுகளுக்கும் பதில்கூற வேண்டியவர்கள் என்பதாகும்.

ஆனாலும் எமது கல்வி முறைமையில் வகை கூறல் என்ற சொற்பதம் நீண்டகாலமாக சொற்பிரயோகமாக காணப்பட்டபோதும் அதன் நடைமுறை பயன்பாடு குறைவாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் தற்போது கல்விக்கான பற்றாக்குறையும், கல்வியில் ஏற்பட்டுள்ள வீண்விரயமுமே இவ்வாறான எண்ணக்கரு முக்கியம் பெற காரணமாகியுள்ளது.

தற்போது அமெரிக்காவின் சமூக, கலாசார நிறுவனத்தின் *(Social and Cultural Foundations of America)* கருத்துப்படி கல்வி நிறுவனங்களின் வகை கூறல் *(Accountabitily)* என்பது ஆசிரியர்கள் தமது வகுப்பறை மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தில் பொறுப்புகூற வேண்டியவர்களாகவும், அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவு மட்டம் தொடர்பில் முழுமையாக தாமே பொறுப்பேற்க வேண்டிய வர்களாக இருப்பதோடு ஆசிரியர்கள் எப்போதும் தமது மாணவர்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கு வகைகூற வேண்டியவர்களாகவும் செயற்பட வேண்டும் எனவும் அழுத்திக் கூறுகின்றது.

மாறாக மாணவரது அடைவுமட்டம் *Achivements* குறைவாக இருக்கு மாயின் அதனையும் ஆசிரியர்களே பொறுப்பேற்க வேண்டும் என்கிறது. இவற்றோடு ஆசிரியர்களின் வாண்மைத்துவம் என்பது அவர்களின் வகைகூறும் தன்மையிலேயே தங்கியிருப்பதாகவும் எடுத்துரைக்கின்றது.

அந்தவகையில் கல்வி முறைமையில் வகைகூறல் என்பது முக்கிய ஒரு எண்ணக்கருவாக தற்போது தோற்றம் பெற்று வருவதை நாம் காண முடிகின்றது. இனி ஆசிரியர் தமது பணியிலே எவ்வெவ் விடயங்களில் வகைகூற வேண்டும் என்பது பற்றி நோக்குவோமாயின்.

1. ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களுக்கு - வகைகூறல் ஆசிரியரின் முதன்மையான வாடிக்கையாளர் மாணவர்களேயாகும். அவர்களின் இயலுமைக்கு ஏற்ப சிறப்பான கல்வியை வழங்க வேண்டியது ஆசிரியரின் பிரதான கடப்பாடாகும். ஒவ்வொரு மாணவரினதும் தனியாள் வேறுபாடுகளை கவனத்தில் கொண்டு அவர்கள் குறிப்பிட்ட அடைவு மட்டத்தை *(Achivement)* அடைய உதவுபவர் ஆசிரியரேயாகும்.

   இங்கு அடைவுமட்டம் என்னும் போது பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மட்டுமல்ல பாடசாலையை விட்டு வெளியேறும் போது சிறந்த ஆளுமை பண்புகளைக் கொண்டவர்களாக இன்றைய நவீன உலகில் இணைந்து வாழகூடிய ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டு வெளியேறுதல் வேண்டும். அவ்வாறாக எதிர்பார்க்கப்படுகின்ற அறிவுமட்டத்தையும், ஆற்றல்களையும், ஆளுமைப் பண்புகளையும் கொண்டு வெளியேறாத போது அதற்கு வகைக்கூற வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாகும்.

2. பெற்றோருக்கு/ பாதுகாவலருக்கு - வகைகூறல் வீட்டில் இருந்து வெளியேறும் பிள்ளைக்கு முதல் முகவராக செயற்படுவது பாடசாலையே ஆகும். பாடசாலைகளே நாட்டிற்கு ஏற்ற நல்ல பிரஜைகளை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் அப்பணியை நிறைவேற்ற வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாகும். அவர்களே அவற்றை நிறைவேற்ற வேண்டும் என பெற்றோரும் நம்புகின்றனர். ஆனால் பாடசாலைகள் மூலம் தாம் எதிர்பார்க்கும் நல்ல பிரஜைகளை உருவாக்க தவறும் பட்சத்தில் பெற்றோருக்கு/ பாதுகாவலருக்கு வகைகூற வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாகும்.

3. மேல்நிலை அதிகாரிகளுக்கு - வகைகூறல் தான் பணியாற்றும் நிறுவனத்துடன் (பாடசாலை) தொடர்புடைய மேல்நிலை அதிகாரிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் வகைகூற கடமைப்பட்டுள்ளனர். குறிப்பாக பாடசாலையில் ஆசிரியர் தாம் வகுப்பொன்றை பொறுப்பேற்று செயற்படும்போது குறித்த வகுப்பு மாணவர் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தானே பொறுப்பேற்கும் நிலை காணப்படுகிறது.

அதேவேளை பாடசாலையில் வளங்களை/ உபகரணங்களை பொறுப்பேற்று செயற்படும்போது அவற்றை ஒழுங்காக பேணி கணக்கு பரிசோதகர் *(Audit)* அவற்றை பரீட்சிக்கும் போது அவை தொடர்பான விபரங்களை சமர்பிக்க வேண்டியுள்ளது. அதில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அதற்கு பொறுப்புகூற வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாகும்.

இன்று பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் விருத்தி மதிப்பீட்டு முறைக்கு (தரக்கணிப்பீடு) தேவையான கணிப்பீடுகளை உரிய காலத்தில் முறையாக மேற்கொண்டு அவை பற்றிய அறிக்கைகளை பேணவும் அவற்றை மேல்நிலை அதிகாரிகளுக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டியும் உள்ளது. அவ்வாறு சமர்ப்பிக்க தவறும் போது ஆசிரியர்களே அவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர்.

அதாவது தமது நிர்வாக ரீதியாக ஒதுக்கப்பட்ட பணிகளை முறையாக மேற்கொள்ள தவறும் பட்சத்தில் ஆசிரியர்கள் உயர்மட்ட நிர்வாகிகளான அதிபர், உதவி கல்விப் பணிப்பாளர்கள், கல்வி பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கணக்கு பரிசோதகர் போன்றோருக்கு வகைகூற கடமைப்பட்டுள்ளார்கள்.

4. தொழில் பங்காளிகளுக்கு - வகைகூறல் ஆசிரியர் ஒரு வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியராகவும், தனது பாடத்துக்கு பொறுப்பான ஆசிரியராகவும் செயற்பட வேண்டியிருப்பது வழக்கானதாகும். இந்த வகையில் தனது வகுப்பு மாணவர்களின் சகல செயற்பாடுகளுக்கும் அவரே பொறுப்பானவராவார்.

அதேபோல்தான் தரிசிக்கும் ஏனைய வகுப்புக்களின் தனது பாடத்தில் மாணவரின் அடைவு மட்டத்துக்கும் அவரே பொறுப்பு கூற வேண்டியவராக உள்ளார். பாடசாலையில் இவ்வாறான வகுப்பறை செயற்பாடுகளைத் தவிர பாடசாலைகளில் நடைபெறும் புறக்கீர்த்தி செயற்பாடுகளின் போது தான் பொறுப்பு வகிக்கும் மன்றங்களின்/ நிகழ்வுகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும், சக ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் பொறுப்புகூற கடமைப்பட்டுள்ளார். அந்தவகையில் தமது தொழிற் பங்காளிகளுக்கு அவர்களால் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கும் வகைகூற வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.



5. அரசாங்கத்திற்கு - வகைக்கூறல் கல்வி தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை கல்வியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக அடைய செய்வதும் அரசாங்கத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

குறிப்பாக உலக நாடுகளின் அரசுகள் தமது நிதி ஒதுக்கீட்டில் அதிக பணத்தை கல்விக்கே ஒதுக்கி வருகின்றன. (ஆசிரிய பயிற்சிக்கும், ஆசிரியர்களின் சம்பளத்திற்கும் பெருந்தொகையான பணம் செலவிடப்படுகிறது) அந்த வகையில் அரசாங்கம் எதிர்பார்க்கும் கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் மாணவர் அடைய செய்வதில் ஆசிரியரின் பங்கு இன்றியமையாததாக அமைகிறது.

எனவே 21ம் நூற்றாண்டின் அறைகூவல்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய தேர்ச்சி பெற்ற, ஆளுமை படைத்த, ஆற்றல்களை கொண்ட மாணவர் சமூகத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுடையதாகவே அமைகிறது. இவ்வாறான நோக்கத்தை/ குறிக்கோளை நிறைவேற்ற தவறும்பட்சத்தில் அதற்கு வகைகூற வேண்டிய பொறுப்பு ஆசிரியர் களையே சாரும்.

6. தனக்குதானே - வகைகூறல் ஆசிரியர்கள் தமது தொழில் தொடர்பாக தமது நிறுவனத்துடன் (அரசாங்கம் - கல்வியமைச்சு) ஒப்பந்தம் செய்து கொண்டதன் அடிப்படையிலேயே நியமனம் பெறுகின்றார்கள். அந்த வகையில் அந்த நிறுவனத்துடன் உடன்பட்டவற்றை நிறைவேற்றுவதில் திருப்திடைய வேண்டும்.

அதாவது நாட்டின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றுவோம், அரசாங் கத்தின் சட்டத்திட்டங்கள், அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படுவோம் என்ற உறுதியுரையின்படி அவர்கள் பணியாற்ற வேண்டும்.

மாறாக கஷ்டபிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற முடியாதென்றோ அல்லது அமைச்சினால் பரிந்துரைக்கப்படும் பணிகளை நிறைவேற்ற முடியாது என்றோ மறுத்துரைக்க முடியாது. அவ்வாறு தாம் தொழில் வழங்குனரோடு (அரசாங்கத்தோடு) செய்து கொண்ட உடன்பாட்டின் படி கடமையாற்றுகின்றோமா? என்ற வினாவிற்கு தமது மனசாட்சிப் படி தனக்குத்தானே வகைகூற வேண்டியவர்களாக உள்ளார்கள்.

**முடிவுரை**

ஆசிரியர் தொழிலை இன்று வாண்மையுடன் கூடிய தொழிலாக அடையாளப்படுத்த கல்வியியலாளர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் வாண்மை தொழிலுக்குரிய பண்புகளில் ஒன்றான வகைகூறல்/ பொறுப்பு கூறல் என்பது எமது ஆசிரியர் தொழிலை பொறுத்தவரை இன்றும் வினாக்குரிய ஒன்றாகவே உள்ளது. அந்த வகையில் எமது நாட்டின் கல்வி முறைமையுடன் இதனை பரிசீலிப்போமாயின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சம்பள உயர்வுக்காகவும், வேறு சலுகைகளுக்காகவும் போராட்டங்களில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் பாடசாலைகளில் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பின்நிற்பதாக நீண்டகாலமாகவே அரசாங்கம் முறைபாடு தெரிவிப்பதை காணலாம். வெளிநாடுகளை பொறுத்தவரை குறிப்பிட்ட ஆசிரியர் கற்பித்த பாடங்களின் இறுதி புள்ளிகள் அல்லது மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. அல்லது சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது. அவ்வாறான கடுமையான சட்டமே பின்பற்றப்படுகிறது.

எமது நாட்டிலும் 1980களில் அரச பாடசாலைகளில் சம்பள உயர்வு வழங்குவதற்கு வட்டாரகல்வி அதிகாரி *(eircuit Education Inspector)* பாடசாலைக்கு விஜயம் செய்து வகுப்புகளில் கற்றல் செயற்பாட்டை அவதானித்து *Annual Report* அவரின் ஒப்புதலுடனேயே சம்பள உயர்வு வழங்கப்பட்டது.

இன்றும் பாடசாலைகளில் கல்வி அதிகாரிகளால் ஆசிரியரின் செயற்றிறனை சோதிப்பதற்கு செயற்றிறன் கணிப்பீடு (ஆசிரியர் தரங்கணிப்பு -*Appralsal)* நடைமுறையில் உள்ளது. இதில் ஆசிரியரின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள், சுயமாக பொறுப்பேற்று செய்யும் வேலைகள் என்பனவற்றுக்கு செயலாற்றுகை தரச்சுட்டி வழங்கப்பட்டு கணிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டே சம்பள உயர்வு *(Increment)* வழங்கப்படுகிறது. இவ்வாறாக பல்வேறு நடைமுறைகள் காணப்பட்டபோதும் இவை எந்தளவு விளைத்திறன் கொண்டதாக அமைந்தன என்பது வினாக்குரிய ஒன்றாகவே உள்ளது.

காரணம் 94% கல்வியறிவு கொண்ட எமது நாட்டில், 100% ஆண்டு ஒன்றுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் எமது நாட்டில் இடைவிலகுவோர் தொகை தரம் 9 இற்கு முன் 15% இற்கு மேல் உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதேபோல் க.பொ.த (சா/த) பரீட்சையில் 6 இலட்சம் பேர் தோற்றினாலும் 3 இலட்சத்துக்கு சற்று அதிகமானவர்கள் சித்திப் பெறுவதில்லை என்றும் இதில் அனேகமானோர் 35 புள்ளிகளைகூட பெற முடியாத நிலையிலேயே உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. கல்வியின் அடைவு மட்டம் இவ்வாறிருக்க மறுமுனையில் இன்று பாடசாலை மாணவரிடையே பாலியல் ரீதியான நடத்தைகள் அதிகரித்து செல்வதும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதும், தற்கொலை முயற்சிகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதும், கொலை, களவு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் என வாழ்க்கைநெறி தவறிய செயல்கள் வெகுவாக அதிகரித்து செல்வதையும் காண முடிகின்றது.

இவ்வாறாக மாணவரின் அடைவு மட்டம் *(Achivements)* வீழ்ச்சியடைந்து செல்வதற்கும், பாடசாலையில் மாணவர் இடைவிலகல் தொடர்வதற்கும், மாணவரின் பிழையான நடத்தைக் கோலங்கள் அதிகரிப்பதற்கும் யார் வகைக்கூறுவது என்ற வினா இன்று பரவலாக முன்னிலைப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இன்று ஆசிரியர் தொகை இரண்டு இலட்சமாக அதிகரித்தி ருக்கும் நிலையில் அவர்களை மேலும் வினையாற்றல் கொண்டவர்களாக மாற்ற ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள் என அதிகமானோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களை வளம்படுத்துவதற்காக கல்வித் திணைக்களம், பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீட்டு திணைக்களம், தேசிய கல்வி நிறுவனம் போன்றவைகளும் அதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் கல்வித்துறைக்கு அதிக நிதியும் ஒதுக்கப்படுகின்றது. இவையெல்லாம் இடம்பெறும் போதும் பரீட்சை பெறுபேறுகள் வீழ்ச்சி நிலையில் இருப்பதற்கு/ கல்வி தரம் வீழ்ச்சி நிலையில் இருப்பதற்கு வகைகூறுவது யார்? இதற்கெல்லாம் காரணம் கல்வி கொள்கைகளும், அதன் பிரதான முகவர்களான ஆசிரியர்களுமே என்று விரல்நீட்டி குற்றஞ்சாட்டும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

எனவே இக்குற்றச்சாட்டுகளில் இருந்து விடுபட வேண்டுமாயின் ஆசிரியர்கள் தமது பணியினை பொறுப்புடன் நிறைவேற்றுவதுடன், தமது பணியில் மனநிறைவுடனும், மாணவரிடமும், பெற்றோரிடமும் நம்பிக்கை பெறும் வகையிலும் செயற்பட வேண்டும். இல்லாவிடின் தனக்கும் (தனது மனசாட்சிக்கும்), மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், உயர் அதிகாரிக ளுக்கும், அரசாங்கத்துக்கும் கூட வகைகூற வேண்டியவர்களாக அல்லது பொறுப்பு சொல்ல வேண்டியவர்களாக மாறும் நிலை உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

*4 ம் பக்கத் தொடர்ச்சி...*

*எந்த ஓர் ஆசிரியர், தன்னிடம் படிக்கும் மாணவர்கள் ஒருவர் கூட வெளியில் தனிவகுப்புக்கு (தனியார் டியூட்டரிக்கு) செல்லும் கட்டாயத்தை உருவாக்காமல் தன்னலமில்லாமல் நேர்மையாக கல்வி அளிக்கின்றாரோ..*

*எழுதப் படிக்க மட்டும் கற்றுக்கொடுப்பது ஓர் ஆசிரியரின் பணியல்ல.. வெறும் மனப்பாடத் திறமையில் தகவல் தொகுப்பாக மாணவர்களை தகுதி யானவராக மாற்றுவது ஓர் ஆசிரியரின் கடமையல்ல.. மாறாக ஒட்டு மொத்த சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் விருப்பு வெறுப்பின்றி விசாரணை செய்வதும், அதன் மூலம் சமூக அநீதிகளைக் களைவதும், ஒரு சிலர் மட்டும் அனுபவிக்கும் முறையற்ற செல்வப் பகிர்வை ஒழித்து, உலகில் உள்ள அனை வருக்கும் பயனுடையதாக மாற்றுவதும் ஓர் ஆசிரியரின் நோக்கமாக இருக்க வேண்டும்.*

இப்படிப்பட்ட ஆசிரியர்களே மிகச் சிறந்த ஆசிரியர்களாக இருக்க முடியும். அவர்களே இந்த தேசத்தின் நல்லாசிரியர்கள் என்பதை நாம் உணர வேண்டும். இத்தகைய நோக்கோடு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நாம் சிரம் தாழ்த்துவோம்! வணங்குவோம்!!

தெ.மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்தினரது ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களது வகிபாகம்

✱ செ.ரூபசிங்கம்

13-19 வரையிலான வயதுப்பருவம் கட்டிளமைப்பருவமாக வழமையாகக் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் கல்வி உளவியல் ரீதியில் 9-23 வயதுவரையிலான காலப்பகுதியாகவும் கொள்ளப்படுவதுண்டு. கட்டிளமைப் பருவம் பிள்ளைப் பருவத்தினை தொடர்வது. முதிர்பருவத்துக்கு இட்டுச் செல்வது. மேற்படி பிள்ளைப்பருவம் முதிர்பருவம் ஆகிய இரண்டு பருவங் கட்கும் இடையிலான இடைமாறுகால கட்டமாகும். உயிரியல் மாற்றங்களும் நடத்தை மாறுபாடுகளும் ஒன்றை ஒன்று கடக்கும் பருவமாகும். இக்காலப்பகுதி வாழ்க்கையின் உடல், உள்ளம், சமூகம் முதலானவை சார்ந்த பல்வேறு ஆளுமைப் பண்புகளும் விருத்தியடையும் மாணவப் பருவமாகும். பொதுக்கல்வியினது கனிஷ்ட சிரேஷ்ட இடைநிலைக்கல்வி பெறப்படும் காலப்பகுதி இப்பருவமாகும். இவற்றுள் கனிஷ்ட இடைநிலைக் கல்வி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரமாகவும் சிரேஷ்ட இடைநிலைக்கல்வி க.பொ.த. உயர்தரமாகவும் அமையும்.

மனித வளர்ச்சியினது ஏனைய பருவங்களைப் போலவே கட்டிளமைப் பருவத்தினரது வளர்ச்சி விருத்தி என்பனவற்றின்பால் பாரம்பரியக் காரணி களும் சூழல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆயினும் இப்பருவத்தின் மாற்றங்களின்பால் சூழல் காரணிகள் பாரம்பரியக் காரணி களிலும் பார்க்க கூடியளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் இப்பருவத்தினரது ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களது பங்களிப்பு மிகையானதாகும்.

கட்டிளமைப் பருவத்தில் உடலியல் ரீதியிலான மாற்றங்கள் பெருமளவில் இடம் பெறுகின்றன. இவற்றுள் துணைப்பால் இயல்புகள் முக்கியமானவை. பிறப்பிலிருந்தே ஆண் பெண்பால் தன்மைகளை வேறுபிரித்தறி வதற்கு காரணமான உடல் கட்டமைப்பு மற்றும் தோற்ற இயல்புகள் முதற்பால் இயல்புகளாகும். இவற்றுக்கு மேலதிகமாக கட்டிளமைப் பருவத்தினரில் தோன்றும் இயல்புகள் துணைப்பால் இயல்புகளாகும். இக்காலப்பகுதியில் ஆண்களில் தோல் தடிக்கச் செய்யும். தோலிலுள்ள நெய்ச் சுரப்பிகளினால் பெருமளவு நெய் சுரக்கச் செய்யும். மார்பு தோள்கள் என்பன அகலிக்கச் செய்யும். முகம் மார்பு வயிறு கக்கம் இலிங்க அங்கங்களைச் சூழ்ந்த பகுதிகள் என்பனவற்றில் மயிர்கள் தோன்றும். குரல்வளை தடித்து பருமன்

கட்டுரையாளர்
முதுநிலை ஆசிரியர்,
அறிவியல்
சிந்தனையாளர்,
ஆய்வாளர்,
கட்டுரையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பதுடன் குரல் ஒலியும் தடிக்கச் செய்யும். ஆண்குறி, விதைப்பை போன்றவை பருமனில் அதிகரிப்பதுடன் இப்பகுதிகளில் நிறப்படிவுகளும் உருவாகும். இனப்பெருக்கத் தொகுதியில் காணப்படும் துணைச் சுரப்பிகளி னின்றும் சுரக்கப்படும் சுரப்புக்களின் அளவு அதிகரிக்கும். பெரும்பாலும் 13-14 வயது காலப்பகுதியில் முதிர்ந்த விந்துக்களுடன் கூடிய சுக்கிலம் வெளிப்படும். இது ஆண்களது பூப்படைதலாகும்.

மேற்படி அறிகுறிகளது வெளிப்பாடு பாரம்பரியம், போசாக்கு, சுகாதாரம் போன்ற காரணிகளால் பாதிக்கப்படுவதாகும். அறிகுறிகள் அளவுரீதியிலும் பண்பு ரீதியிலும் பெருமளவில் வேறுபடுவதுடன் இவை வெளிப்படும் காலவீச்சும் பரந்தளவிலானதாக அமைவதுண்டு. இவ்விடயங்கள் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் எடுத்து விளக்கப்பட வேண்டியவை யாகும். சில அறிகுறிகள் பாரம்பரியமாகவே சிலரில் வெளிப்படாது போகலாம். முகத்தில் மயிர்கள் தோன்றி வளரும் பட்சத்தில் அவற்றை ஒழுங்காக சவரம் செய்யுமாறு மாணவரை பணிப்பது வழமையானது.

ஆயினும் மீசை தாடி போன்றவை அரும்ப முன்னரே சவரம் செய்யுமாறு மாணவரை வற்புறுத்துவது சுகாதார ரீதியில் அசாதாரண நடவடிக்கையாக அமைவதுடன் பாலியல் ரீதியில் அவர்களது கவனத்தை திருப்பி பாலியல் செயற்பாடுகளின்பால் ஆர்வத்தை அதிகரிப்பதற்கு காரணமாகி விடலாம். இதுவே எதிர்மறை விளைவுகளுக்கு காரணமாகி விடும். இதனால் கற்றல் செயற்பாடு களில் பாதிப்பு ஏற்படலாம். அத்துடன் அவ்வாறு வற்புறுத்துவது சம்பந்தப் பட்ட ஆசிரியர்களது வக்கிர உணர்வுகளது வெளிப்பாடாக கொள்ளப்படு வதுமுண்டு. இத்தகைய போக்கு குறித்த ஆசிரியர்பால் தப்பான அபிப்பிராயங் களை கல்விச் சமூகத்தில் உண்டு பண்ணிவிடலாம். சகபாடிகளிடையே வெவ்வேறு காலப்பகுதிகளில் துணைப்பால் இயல்புகள் வெளிப்படத் தொடங்கலாம் என்பதை விளக்கி அவர்களை அதனை ஏற்றுக்கொள்ளச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். துணைப்பாலியல்புகள் வெளிப்படுகின்ற காலப்பகுதியில் ஏற்படும் தாமதம் மாணவரிடையே தாழ்வுச் சிக்கல்களை ஏற்படுத்தாதவாறு ஆசிரியர் மாணவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

பெண்களில் சூலகங்கள், கருப்பைக் குழாய்கள், கருப்பை, யோனிமடல் போன்றவை முதிர்ச்சி அடையும். மார்பகங்கள் பருமனில் அதிகரிக்கும். கக்கங்களிலும் இலிங்க அங்கங்களைச் சூழவும் மயிர்கள் உருவாகும். உடல்வளர்ச்சி வீதம் அதிகரிக்கும். தோலில் கொழுப்புப் படிவுகள் உண்டாகும். இடுப்பு பருமனில் அதிகரிக்கும். இடுப்பு மார்பகங்கள் பிருஷ்டங்கள் போன்ற இடங்களில் கொழுப்புப் படியச் செய்யும் தலையில் மயிர்கள் அதிகரிக்கும். நீண்டு வளரச் செய்யும். இலிங்க வட்டங்கள் ஆரம்பிக்கும். இது பெண்களைப் பொறுத்தவரை பூப்படைதலாகும். இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் மாணவியரை தயார்படுத்துவதுடன் இக்காலப்பகுதி களில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப் பருவத்தில் மாணவரது உண்மை வயது அதிகரிப்பதுடன் அவர்களது சமூகவயது உளவயது போன்றவையும் அதிகரிக்கச் செய்யும். சமூகவயது சமூகரீதியிலான காரணிகளாலும் உளவயது உளவியல் ரீதியிலான காரணிகளாலும் தீர்க்கபடுபவையாகும். முறையே சமூகரீதியிலான சுட்டிகளாலும் உளரீதியிலான சுட்டிகளாலும் அளவிடப்படுபவையாகும். உளவயது அதிகரிப்பானது மாணவரை தன்முனைப்பு மிக்க தொழிற்பாடுகளில் ஈடுபட தூண்டப்படுவற்கு காரணமாகும். சகபாடிகளது சேர்க்கையானது இத்தகைய செயற்பாடுகளை மேலும் முன்னெடுக்கத் தூண்டுவதாக அமையும். இக்காலப்பகுதியில் மாணவர்கள் பெரும்பாலும் சுதந்திரத்தை நாடுபவர்களாக இருப்பர். எனவே மாணவரை சுதந்திரமாக செயற்பட போதியளவில் அனுமதித்துக்கொள்ளும் அதேவேளை மாணவரது செயற்பாடுகளின்பால் ஆசிரியர் கண்காணிப்பையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய கண்காணிப்பு நடவடிக்கைகள் மாணவரது ஆளுமைக் குலைவுகளுக்கு காரணமாக அமையாத வண்ணமிருக்க வேண்டும்.

கட்டிளமைப் பருவம் அகமையமாதலுக்குரிய தன்முனைப்பு விருத்தியடையும் காலப்பகுதியாகும். தன்முனைப்பு காரணமாக மற்றவர் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் மாணவர் இக்காலப் பகுதியில் செயற்படுவர். இதற்காக நடை, உடை, பாவனை மற்றும் நடத்தைக் கோலங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வர். மாணவர்கள் தலைமயிரை வளர்த்துக்கொள்வது, ஒற்றைக் காதில் தோடு அணிந்துகொள்வது, இறுக்கமான ஆடைகளை அணிந்துகொள்வது, வேகமாக வாகனங்களை செலுத்துவது போன்றவை இத்தகைய செயற்பாடுகளாகும். பெரும்பாலும் மாணவர்கள் ஆக்கிரமிப்பு மிக்க மீச்செலவு *(aggressive)* நடத்தைகளை வெளிப்படுத்துபவராக இருப்பர். இவ்வாறே மாணவியரும் இக்காலப்பகுதியில் நடத்தைக் கோலங்களில் சடுதியான மாற்றங்களை பிரதிபலிப்பர். பெருமளவு வெட்கம் பயம் போன்ற உணர்வுகளால் பீடிக்கப் படுவதுண்டு. எவ்வாறாயினும் மற்றவர் கவனத்தை தம்பால் ஈர்க்கத்தக்க வகையில் அமைதியான வழிமுறைகளில் செயற்படுவர். உளவயது அதிகரிப்பு காரணமாக கட்டிளமைப் பருவம் மாணவரிடத்தே நியமசிந்தனைப் பருவமாக அமையும். பெரும்பாலும் இக்காலப் பகுதியில் கருத்துநிலைச் சிந்தனை வளர்ச்சி ஏற்படும். பியாஜேயினால் குறிப்பிடப்படும் துணைநிலை உளத்தொழிற்பாடுகள் அதிகமாகக் காணப்படும். தருக்கநிலை சிந்தனையாளராகக் காணப்படுவர். கற்றல் இடமாற்றம் இப்பருவத்தினரில் இலகுவாக இடம்பெறுவதாக இருக்கும். கற்பனை வளமிக்கவர்களாக கட்டிளமைப் பருவத்தினர் காணப்படுவர். ஆசிரியர்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மாணவரிடம் ஆக்கச் சிந்தனை விரிசிந்தனை போன்றவை வளர்ச்சி அடையும் வகையில் தூண்டி படைப்பாற்றல் மிக்கவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். பாடங் களுடன் தொடர்புபட்ட புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும். எதிர்கால கலைஞர்களை உருவாக்கிக் கொள்வதற்கான அடித்தளங்களை கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவயது அதிகரிப்பானது மாணவரை சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுவதாக இருக்கும். சமூகத் தொடர்புகள் விழுமியங்கள் திறன்கள் போன்றவை இக்காலப்பகுதியில் உயர்ந்த வேகத்தில் துரித வளர்ச்சி காணும். சமூகத்தில் தமக்கென ஒருநிலையான இடத்தை தாபித்துக் கொள்ளும் வகையில் இக்காலப் பகுதியில் மாணவரது நடத்தைகள் அமையும்.

கட்டிளமைப் பருவம் மனவெழுச்சிகளால் பெரிதும் பாதிக்கப்படும் பருவ மாகும். அதீத கோபம், பயம், சந்தோசம், வெட்கம், மனச்சோர்வு போன்றவை இத்தகை பய மனஎழுச்சி வெளிப்பாடுகளாகும். மாணவர்கள் கட்டிளமைப் பருவத்தில் அடிக்கடி மனவெழுச்சிகளுக்கு ஆட்படுவர். மனஎழுச்சிகளை தடைப்படுத்தாது மாணவரது ஆளுமை விருத்திக்கு குந்தகம் ஏற்படாத வகையில் ஆசிரியர் அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும். மனவெழுச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு மனவெழுச்சிச் சமநிலையினை அடைந்துகொள்வதற்கு மாணவரைப் பயிற்றிக்கொள்ள வேண்டும். வாழ்வில் இன்பியல் நிகழ்வுகளும் துன்பியல் விடயங்களும் சகஜமானவை என்பதை மாணவருக்கு எடுத்துரைக்க வேண்டும். ஆசிரியரும் ஒரு சகபாடியாக மாறி மாணவரது இன்ப துன்பங்களில் பங்களாராகிக்கொள்ள வேணடும். எவ்வாறாயினும் இக்காலப் பகுதியில் ஆசிரியர் மாணவர் என்ற வரையறைகள் கடக்கப்படாதிருக்க வேண்டும்.

கட்டிளமைப்பருவம் முரண்பாடுகள் மிக்க ஒருபருவமுமாகும். தனது எண்ணங்கள் சிந்தனைகள் செயற்பாடுகள் மட்டுமன்றி இதே விடயங்களில் உறிவினரிடையேயும் குடும்ப அங்கத்தவரிடையேயும் கூட முரண்பாடுகள் தோன்றுவதுண்டு. இவற்றுள் பெரும்பாலானவை அகமுரண்பாடுகளாகும். இக்காலப்பகுதியில் ஒப்பீட்டளவில் சகபாடிகளுடனான முரண்பாடு களினளவு குறைவானதாகும். ஆசிரியர்கள் முரண்பாடுகளை களைவதற்கான வழிகாட்டிகளாக செயற்பட வேண்டும். பல சந்தர்ப்பங்களில் முரண்பாடு களை சவால்களாகக் கொண்டு ஆளுமையை விருத்திசெய்து கொள்வதற்கு ஆசிரியர் துணைநிற்க வேண்டும். ஆசிரியர் முரண்பாடுகளை களைவதற்கான வழிகாட்டியாக இருக்கவேண்டுமேயன்றி மாணவரது முரண்பாடுகளையும் தடைகளையும் தாம் சுமப்பவராக இருத்தலாகாது. அத்தகைய போக்கு மாணவரது ஆளுமைக் குலைவுகளுக்கு காரணமாகி விடும். முரண்பாடுகள் காரணமாக மாணவரது கட்டிளமைப் பருவம் முன்னோக்கி பிள்ளைப் பருவத்துக்கோ அல்லது பின்னோக்கி முதிர் பருவத்துக்கோ தள்ளப்படும் வகையில் ஆசிரியர்கள் நடந்துகொள்ளலாகாது. கட்டிளமைப் பருவம் பாலியல் உந்துதல் உருவாகும் காலப்பகுதியும் கூடவாகும். இத்தகைய போக்கு பாலியல் ரீதியில் ஆரம்பத்தில் ஒத்த பாலினை சார்ந்த ஒருவரின்பால் அளவுகடந்த அக்கறையுணர்வை உண்டு பண்ண காரணமாகும்.

தொடர்ந்து ஒத்தபாலினை சார்ந்த ஒரு குழுவினரின்பால் கவரப்படு வதற்கும் அடுத்து எதிர்ப்பாலிற்குரிய குழுவினர் பின்னர் அவர்களுள் ஒருவர் என்றவாறு அக்கறையுணர்வு மாறுபடச் செய்யும் இறுதியில் இதுவே காதலாக மாறுவதும் உண்டு. ஆசிரியர்கள் இத்தகைய கவர்ச்சி மற்றும் ஈர்ப்பு மாறுகை கள் தொடர்பாக மாணவர்க்கு விளக்க வேண்டும். இவை இயல்பூக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஏற்படுபவை என்பதையும் இயற்கையானவை இயல்பானவை என்பதையும் அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். இக்காலப் பகுதியில் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் காரணமாக சமூகவிழுமியங்களைக் கடக்காத வகையில் மாணவர் நடந்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். மாணவர் தம்மை புடம்போடத் தக்கவகையிலும் நேர்முகமான வைராக்கியத்தை வளர்த்தெடுத்துக் கொள்ளத்தக்க வகையிலும் துணையிருக்க வேண்டும். ஆலோசனையும் வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காதல் வசப்படுவதோ அன்றி காதலிப்பதோ தவறல்ல எனினும் காதல் காதலித்தல் என்பனவற்றின் பின்னணியில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எடுத்துக்கூறி மாணவரை எச்சரிக்க வேண்டும். காதலை, திருமணத்தை தொடர்ந்து வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் குடும்ப ரீதியிலும் சமூக ரீதியிலும் நிறைவேற்றப்பட வேண்டியவற்றை எடுத்துணர்த்தும் வகையில் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

அத்துடன் கட்டற்ற ஆசைகள் உணர்வுகள் காரணமாக வாழ்வின் விழுமியத் தடங்களை தவறவிடவேண்டி ஏற்படும் என்பதை எடுத்துக்கூறி எச்சரிக்க வேண்டும். காதலை கற்றல் செயற்பாடுகளின் பொருட்டு உந்து விசையாக பயன்படுத்தி வாழ்க்கையில் மேம்பட்டவர்களது அனுபவங்களை மாணவர்க்கு எடுத்துரைக்கலாம். ஆனால் தன்னநம்பிக்கையும் கல்விச் செயற்பாடுகளின்பால் உறுதி நிதானம் போன்றவற்றை இழக்காதவண்ணம் மாணவரை கவனித்துக் கொள்ள வேண்டும்.

கட்டிளமைப் பருவத்தில் விருத்தியடையும் பண்புகளுள் தலைமைத்துவத் தன்மையும் ஒன்றாகும். இக்காலப்பகுதியில் சகபாடிகள் பாலான ஈரப்பு காரணமாக பரஸ்பர இணக்கப்பாடு விட்டுக் கொடுப்புகள் போன்ற பண்புகள் காரணமாக மாணவர் அனைவருமே தலைமைத்துவ பண்பு மிளிர்பவராக காணப்படுவர். ஆசிரியர்களும் பாடசாலைச் சமூகங்களும் இத்தகைய வாய்ப்பினை நேர்முகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கட்டிளமைப் பருவத்து சகபாடிகள்குழு என்பது மிகமலிவாகக் கிடைக்கக்கூடிய ஊழியப் படையாகக்கூட அமையலாம்.

கட்டிளமைப் பருவமே அறிகைத் தொழிற்பாடுகள் அதிகரிக்கும் பருவமும் சிந்தனைப்பொறிமுறைகள் விரிவாக்கிக் கொள்ளும் பருவமும் ஆகும். நுண்மதி ஈவு இக்காலப்பகுதியில் விருத்தியடையும் வேகமும் கூடுதலாக காணப்படும். இதனால் புதிய முறைகளில் தகவல்களை கோவைப்படுத்தி தரவுகளை கட்டியெழுப்பிக் கொள்வர். கிரகிக்கும் ஆற்றலும் கிரகித்தவற்றை நிலை நிறுத்திக் கொள்ளும் ஆற்றலும் அவற்றைச் சந்தரப்பத்துக்கு ஏற்ப பிரயோகிக்கும் திறனும் இக்காலப்பகுதியில் உயர்வாகக் காணப்படும். எனவே இத்தன்மைகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்பால் மாணவர் கவனத்தை திருப்பி கல்வியில் ஊக்கம் உண்டாவதற்கும் ஆர்வமும் விருப்பமும் ஏற்படுவதற்குமான அடிப்படைகளை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் நியாய சிந்தனை திறன் கட்டிளமைப் பருவத்தினரி டையே குறைவாகவே காணப்படுவதனால் மாணவரிடத்தே நியாயபூர்வமான சிந்தனைத் திறனை ஆசிரியர்கள் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டும். தார்மீகம் ஆன்மீகம் போன்றவை சார்ந்த உணர்வுகள் மாணவரிடத்தே வளர்வதும் இக்காலப்பகுதியில் என்பதனால் எதிர்காலத்தில் எத்தகைய பிரஜைகளாக மாணவர் திகழ்வர் எனபதை எதிர்வு கூறி பொருத்தமான நெறிப்படுத்துகைகள் மூலம் மாணவரை வழிப்படுத்திக் கொள்ளலாம்.

கட்டிளமைப்பருவம் தேவைகள் நிறைந்த பருவமாகும். உடலியல் ரீதியிலானதும் உளவியல் ரீதியிலானவையும் சமூகவியல் ரீதியிலானவையுமாக பல்வேறு விதமான தேவைகள் நிறைந்த பருவமாகும். மேற்படி தேவைகளில் பல பொருளாதார ரீதியில் அல்லாத தேவைகளாகும். அடிப்படையான பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு முடியுமானவரை ஆசிரியர் பொருத்தமான ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

கட்டிளமைப் பருவத்தினரின் விருத்தியில் பெற்றோர் உறவினர் சகபாடி கள் சமவயதுக் குழுக்கள் ஆசிரியர்கள் போன்ற சமூகத்தினரின் பல்வேறு தரப்பினராலும் பாதிப்புகள் ஏற்படலாம். புதிய விடயங்களைப் பரிசீலித்துக் கொள்ளும் உந்துதல் காரணமாக பல்வேறு போதைப் பொருட்களதும் பயன்பாட்டிற்கு பழக்கப்பட்டுக் கொள்ளுதல் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் சம்பந்தப்படவேண்டி ஏற்படலாம். போதைவஸ்த் துக்களை முதலில் வெறுமனே பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் பயன்படுத்த ஆரம்பித்து பின்னர் சிறிதுசிறிதாக பழக்கத்துக்கு அடிமையாகிக் கொள்கின் றனர். சகபாடிகளது வேண்டுதல்களும் சகபாடிகளிடமிருந்து தனித்து விடுவோமோ என்ற பயமும் ஆர்வம் உவகை போன்றவை கூட போதைப் பொருட்களுக்கு பழகிக்கொள்வதற்கு காரணமாகும்.

கட்டிளமைப் பருவத்தினர் சமூகத்தில் வெவ்வேறு நபர்கள் தொடர்பாக வும் அறிமுகம் பழக்க வழக்கங்கள் தொடர்பாடல்கள் தொடர்பாக வெவ்வேறு எல்லைகளை வகுத்துச் செயற்படும் வகையில் மாணவரை அறிவுறுத்த வேண்டும். வெவ்வேறு நபர்களுடனும் பொருத்தமான இடைவெளிகளைப் பேணிக் கொள்வதன் மூலம் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை ஆசிரியர்கள் எடுத்துக்காட்டக் கூடியதாக இருக்கும். ஆசிரியர்கள் இத்தகைய வழிப்படுத்துதல்களை மேற்கொள்ளும்போது குறித்த மாணவர் சார்பாக வெறுமனே ஒரு அநுதாபியாக அல்லாது அவரது இன்ப துன்பங்களது பங்காளராக மாறி அவரது அந்தரங்க வெளியில் பிரவேசித்து ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளின் முழுவடிவமாக ஆசிரிய கல்வியியலாளர் சேவை

✱ கி.புண்ணியமூர்த்தி

*பாரம்பரியமாகச் செயற்பட்டுவரும் ஆசிரிய கல்லூரிகளின் பயிற்சி முறைகளில் காணப்படும் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டே, கல்விக் கல்லூரிகள், 1986ம் ஆண்டின் 30ஆம் இலக்கக் கல்விக் கல்லூரிகள் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் கல்விசார் கட்டுப்பாடு தேசிய கல்வி நிறுவகத்திற்குட்பட்டதாகும். இலங்கை அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தில் பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது கல்விக் கல்லூரி ஒன்றின் பட்ட அல்லது டிப்ளோமாச் சான்றிதழ் இருந்தால் மாத்திரமே ஆசிரிய நியமனம் வழங்கப்படுதல் வேண்டும் என்ற ஏற்பாடு உள்ளது.*

*ஆசிரிய கல்வியியலாளர் சேவை தொடர்பாகச் சமூகத்தில் பாரிய எதிர்பார்ப்புகளும் கருத்துக்கணிப்புகளும் காணப்படுகின்றன. ஆசிரிய சேவை யிலுள்ள பலர் இச் சேவையில் நுழைவதற்காகப் பெரும்பாடுபடுகின்றனர். அதற்கான நேர்முகத் தேர்வுகளும் நடந்து வருகின்றன. இச் சேவை இலங்கையில் அதியுயர் சேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இலங்கை நிர்வாக சேவை (SLAS) கல்வி நிர்வாக சேவை (SLEAS) போன்ற சேவைக ளுக்குச் சமாந்தரமான சேவையாகவே இது கருதப்படுகின்றது.*

*இச் சேவைகளுக்குரிய வரப்பிரசாதங்களான வாகன அனுமதிப்பத்திரம், வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள், அதியுயர் சம்பள வகுதி, சமூக அந்தஸ்து என்பன போன்ற எதிர்பார்ப்புகளும் ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுகின்றன. இச் சேவையினுள் நுழைவதே தமது இலட்சியம் எனப் பல ஆசிரியர்கள் தமது கல்வி, தொழில்வாண்மைத் தகைமைகளை விருத்தி செய்பவர்களாக உள்ளனர்.*

கட்டுரையாளர்
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்

*ஆசிரிய கல்வியியலாளர் சேவை பல வரப்பிரசாதங்களைக் கொண்டிருந்த போதும் இச் சேவை முரண்பாடுகளின் முழுவடிவமாகக் காணப்படுகின்றது. 1995 ஜனவரி மாதம் முதலாம் திகதி இச் சேவை ஆரம்பிக்கப்பட்டபோதும் 1999ம் ஆண்டே நடைமுறைக்கு வந்தது. இச் சேவையின்படி புதிதாக நியமனம் பெறும் ஒருவர் வகுப்பு III இற்கு நியமிக்கப்படுவார், வகுப்பு III இல் உள்ள ஒருவர் 7 வருடங்களின் பின்னர் பகிரங்க நேர்முகப்பரீட்சையின் ஊடாக வகுப்பு 2II ற்குப் பதவியுயர்த்தப்படுவார். வகுப்பு II இல் இருக்கும் ஒருவர் மீண்டும் 5 வருடங்களின் பின்னர் வகுப்பு 2II ற்குத் தரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தப்படுவார். வகுப்பு 2II இல் இருக்கும் ஒருவர் மீண்டும் 5 வருடங்களின் பின்னர் வகுப்பு I ற்குத் தரம் உயர்த்தப்படுவார்.

ஆசிரிய கல்வியியலாளர் சேவை ஆரம்பிப்பதற்கு முன்னர் கடமையாற்றிய விரிவுரையாளர்கள் உதவி விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருந்தனர். ஆசிரிய கல்வியியலாளர் சேவை உருவாக்கப்பட்டதன் பின்னர் இவர்கள் வகுப்பு III இல் வைக்கப்பட்டார்கள். அதேவேளை 1993ஆம் ஆண்டில் விரிவுரை இணைப்பாளர்கள் என்ற பதவியும் சிலருக்கு வழங்கப்பட்டது. இவர்கள் நேரடியாக வகுப்பு 2II இல் வைக்கப்பட்டார்கள்.

உதவி விரிவுரையாளர்களுக்கு நேர்முகப் பரீட்சையினூடாக 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி வகுப்பு 2II வழங்கப்பட்டது. இவர்களது தகைமைகளாகப் பல்கலைக்கழக வகுப்புச் சித்தியும், பட்டப் பின்படிப்புக் கல்வி டிப்ளோமாவில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கோரப்பட்டது. இத்தகைமை இல்லாத 83 பேருக்கு இப் பதவியுயர்வு கிடைக்கவில்லை. இவர்கள் 10 வருடங்களுக்கு மேல் செய்த தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பின்னர் 2006ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தத்தில் (*amendment*) வகுப்புச் சித்தியுடன் கூடிய பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது திறமைச் சித்தியுடன் கூடிய பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் (இரண்டில் ஏதாவது ஒன்று) இருந்தால் போதுமானது என விதிக்கப்பட்டது. உடற்கல்வி, ஆங்கிலம் போன்ற பாடங்களுக்குரிய விரிவுரையாளர்களுக்கு இத் தகைமைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இவர்களுக்கு 1.1.1995 இல் இருந்து வகுப்பு 2II வழங்கப்பட்டது. இதில் காணப்படும் முரண்பாடு தரம் 3 இல் 7 வருடங்கள் இருந்தால்தான் வகுப்பு II வழங்கப்படும் என்ற விதி வலிதற்றதாகியது.

ஆசிரிய கல்வியிலாளர் சேவை பிரமாணக்குறிப்பின்படி வகுப்பு III இல் இருப்பவர்கள் முதலாவது வினைத்திறனுக்கான தடைதாண்டலாகச் செயல்நிலை ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும். அச் செயல்நிலை ஆய்வு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறனுக்கான தடைதாண்டலாக முதுமாணிப்பட்டம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். அது தவிர வகுப்பு 2II இல் இருந்து வகுப்பு 2 I ற்குப் பதவியுயர்வு பெறுவதற்கு வினைத்திறனுக்கான தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெறுதல் வேண்டும். இதில் பொது நிர்வாகம், நிதிப்பிரமாணங்கள், கல்விச்சட்டம் (கல்வி, நிர்வாகம் மற்றும் மேற்பார்வை) ஆகிய 3 பாடங்கள் உள்ளடங்கியுள்ளன. அது தவிர பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பாடநெறியில் சித்தி பெறுதல் வேண்டும் இது தேசிய கல்வி நிறுவகத்தால் மேற்கொள்ளப்படும் வதிவிடத்துடன்கூடிய 1 வருடப் பாடநெறியாகும். வசதி கருதி இப் பாட நெறியினை இரண்டு வருடங்களில் பகுதி நேரமாகவும் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் 80 வீதமான வரவு கட்டாயமானதாகும். வகுப்பு 2I ற்கு விண்ணப்பிக்கும்போது 45 வயதினைப் பூர்த்தி செய்திருந்தால் இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்களிக்கப்படும். ஆனால் கடந்த காலங்களில் எதுவிதமான தடைதாண்டல்களும் கருத்தில் கொள்ளப்படாது பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

2000,2001 ஆகிய ஆண்டுகளில் ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு 2013ம் ஆண்டு வரை 12 வருடங்கள் கழிந்த பின்னரே இவ் வருடம் மே மாதம் நேர்முகப் பரீட்சை இடம்பெற்றுள்ளது. இதில் வகுப்பு 2II ற்கான அடிப்படைத் தகைமைகளாகக் கல்விப் பொதுத் தாராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் திறமைச்சித்தி, வகுப்பு 2II ற்கான தடைதாண்டல்களைப் பூர்த்தி செய்திருத்தல் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இத் தகைமைகளைப் பெற்றிருத்தல் கட்டாயமானது என அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2000,2001 ஆகிய ஆண்டுகளில் நியமனம் பெற்றிருந்த ஆசிரிய கல்வியியலாளர்கள் 7 வருடங்கள் கழிந்த பின்னர் வகுப்பு 2II ற்கான தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தபோதும் வகுப்பு 2II வழங்கப்படாததால் 12 வருடங்கள் கழிந்த பின்னர்கூட இதுவரை இப் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை. ஆசிரிய கல்வியியலாளர் சேவை பிரமாணக்குறிப்பின்படி வகுப்பு1 Iச் சேர்ந்தவர்கள் பீடாதிபதிப் பதவிகளுக்கும், வகுப்பு 2 IIச் சேர்ந்தவர்கள் உபபீடாதிபதிப் பதவிகளுக்கும், வகுப்பு 2II Iச் சேர்ந்தவர்கள் இணைப்பாளர் பதவிகளுக்கும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஒரு கல்விக்கல்லூரியில் பீடாதிபதியின் தலைமையின்கீழ் 3 உப பீடாதிபதிகள் தொழிற்படுவர். கல்வியும் தர மேம்பாடும் *(Academy and Quality Assurance)* நிதியும் நிர்வாகமும்*( Finance and Administration)* தொடருறு கல்வி *(Continue Education)* ஆகியனவே இவ் உப பீடாதிபதிகளுக்கான வகுதிகளாகும். கல்வியும் தர மேம்பாட்டுக்குமான உப பீடாதிபதியின் கீழ் 2 பீடத் தலைவர்கள் தொழிற்படுவார்கள். அது தவிர ஒவ்வொரு உப பீடாதிபதிகளுக்கும் கீழ் ஒவ்வொரு இணைப்பாளர்களும் தொழிற்படுவார்கள். எவ்வளவு பதவி அணிகள் இருந்தபோதும் அனைத்துக் கடமைகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தினை பீடாதிபதியே கொண்டுள்ளார்.

கல்விக் கல்லூரிகளில் சேவையாற்றும் பீடாதிபதிகள் ஆங்கிலத்தில் *"President"* என அழைக்கப்படுகிறார்கள். பீடாதிபதி என்றால் *Dean* என்று அழைக்கப்படுதல் வேண்டும். சரியான விளக்கம் இல்லாததால் சிலர் இப்பபதவியை *Principal* என்றும், *Dean* என்றும் அழைக்கிறார்கள். ஆசிரிய கல்லூரிகளின் அதிபர்கள் *Principal* என்றே அழைக்கப்படுகிறார்கள். எனவே கல்விக்கல்லூரி பீடாதிபதி எனும் பெயரே முரண்பாட்டில்தான் ஆரம்பிக்கின்றது. அது தவிர பீடத்தலைவர்கள் *Dean* என்றே அழைக்கப்படுகிறார்கள் பீடத்தலைவர் பதவி சில கல்லூரிகளில் நடைமுறையிலும் சில கல்லூரிகளில் வழக்கொழிந்தும் காணப்படுகின்றது.



பல கல்லூரிகளில் வகுப்பு I ஐச் சேர்ந்தவர்களோ, வகுப்பு 2 I ஐச் சேர்ந்தவர்களோ இல்லாததால் வகுப்பு 2II ஐச் சேர்ந்தவர்கள் பதில் பீடாதிபதிகளாகக் கடமையாற்றுகிறார்கள். வகுப்பு III ஐச் சேர்ந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப பீடாதிபதிகளாகப் பதில் கடமையாற்றுகிறார்கள். 2009ஆம் ஆண்டு நியமனம் பெற்றவர்கள் கூட சில கல்லூரிகளில் வெற்றிடம் காரணமாக உப பீடாதிபதிகளாகத் தொழிற்படுகிறார்கள். ஆனால் வேறு சில கல்லூரிகளில் வகுப்பு 2 II ஐச் சேர்ந்தவர்களுக்கே எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை. உள்ளார்ந்த *(Internal)* பதவி ஒழுங்குகளை வழங்கும் அதிகாரம் பீடாதிபதி களுக்கு வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு செல்வாக்குச் செலுத்துகின்றது.

கல்வியியலாளர் சேவை வகுப்பு 2I ற்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 2011. பெப்ரவரி 14ம் திகதி கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சை ஒன்று இடம்பெற்றது. இதற்கு வகுப்பு 2II ச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கள் 120 பேர் தோற்றினர். இவர்களில் பெரும்பாலானோர் வகுப்பு 2 I ற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டவர்களாக இருந்தனர். வகுப்பு 2 I ற்கான தகைமைகள் என்னும் போது வகுப்புச் சித்தியுடன் கூடிய பட்டம், பட்டப்பின்கல்வி டிப்ளோமா முதுமாணிப்பட்டம், வினைத்திறனுக்கான தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் என்பனவாகும். ஆனால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 12 பேர் மாத்திரமே வகுப்பு 2I இற்கான பதவியுயர்வினைப் பெற்றுள்ளனர். (Lankadeepa 23/07/2013)

இது தொடர்பாகக் கல்வி அமைச்சில் விசாரித்தபோது பொது சேவை ஆணைக்குழு இம்முறை ஆசிரிய கல்வியியலாளர் சேவை பிரமாணக்குறிப் பின் பிரிவு 15 "r" க்குப் புதிய வியாக்கியானம் வழங்கியுள்ளதால் பலருக்கு இப் பதவியுயர்வு வழங்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை 1995.1.1 ஆம் திகதி உருவாக்கப்பட்டதன் பின்னர் 1995- 2003 வரையிலான காலப்பகுதிகளில் உபபீடாதிபதிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இரண்டு தடவைகளில் இடம்பெற்றுள்ளது. இந்த நேர்முகப் பரீட்சைகளில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் 40 பேர் உப பீடாதிபதிகளாகப் பதவியுயர்வு பெற்றுள் ளார்கள். இவர்களுக்குப் பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாச் சான்றிதழிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. இந்த இரு சந்தர்ப்பங்களிலும் பொது சேவை ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட சரத்துத் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவில்லை. 2004 ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரை உப பீடாதிபதிப் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. பத்து வருடங்களின் பின்னர் 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தப் பதவி உயர்வு தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப் பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. பொது சேவை ஆணைக் குழுவின் பிரிவு 15 "r" விற்கான புதிய வியாக்கியானத்தின்படி பதவி உயர்வு வழங்கப்படும் திகதியில் 45 வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இதற்கு முன்னர் இடம்பெற்றது போல் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ டிப்ளோமாச் சான்றிதழிலிருந்து விலக்களிக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இது தொடர்பாக ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரிடம் வினவியபோது 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 1.1.1995 இல் 45 வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இத் தேவையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்களிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறெனின் தற்போது 63 வயதையுடைய ஒருவருக்கே இது சாத்தியமானதாகும் அந்த அடிப்படையில் ஓய்வூதியம் பெற்ற ஒரு சிலருக்கு இப் பதயியுயர்வுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மற்றொருவர் போதிய விளக்கம் இல்லாமலேயே இந்த விண்ணப்பம் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை மாற்றுவது பாராளுமன்றத்தாலேயே சாத்தியமானதாகும் எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் பீடாதிபதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும்போது முன்னர் சிற்றூழியர் பதவிகளுக்கு 8ம் வகுப்புச் சித்தி பெற்றிருந்தால் போதுமானது. ஆனால் தற்போது கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்னும் விதியுள்ளது. அந்தக்கால சந்தர்ப்பத்திற்கு வழங்கப்பட்ட பதவியுயர்வுகளைத் தொடர்ந்தும் கோர முடியாது காலத்துக்கேற்ப தகைமைகளை மாற்றிக் கோருவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது எனக் குறிப்பிட்டார். அது தவிர தற்போது இடம்பெறும் விரிவுரையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் முன்னரைப் போலன்றி மேலதிக தகைமைகள் எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டார். மேலும் ஒரு பீடாதிபதி இவர்கள் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவில் சித்திபெறாதது அவர்களது பிழையே எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு விரிவுரையாளரிடம் கேட்டபோது தாம் பல தடவைகள் கேட்டும் ஒரு போதும் தமக்கு இப் பாடநெறியைப் பின்பற்றப் பீடாதிபதியால் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனக் கூறினார். இக் கருத்தை வகுப்பு III விரிவுரையாளர் ஒருவரும் உறுதிப்படுத்தினார். அதாவது 12 வருடங்களாகத் தான் வகுப்பு III இல் இருப்பதாகவும், இம்முறை கோரப்பட்டுள்ள குறிப்பிட்ட பாடநெறிக்கான விண்ணப்பத்தைத் தான் தமது பீடாதிபதியிடம் சிபாரிசுக்காக வழங்கியபோது அவர் பற்றாக்குறையான ஆளணியினரைக் காரணம் காட்டித் தமது விண்ணப்பத்தை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டார். குறிப்பிட்ட பீடாதிபதி விரிவுரையாளராக இருக்கும்போது அவரது பீடாதிபதி இப் பாடநெறியைப் பின்பற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கியிருக்காவிட்டால் அவர் பீடாதிபதியாயிருக்க முடியுமா? எனத் தனது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தினார். மற்றுமொருவர் புதிய நியமனங்கள் வழங்கப்படப்போகும் நிலையில் பீடாதிபதிகள் இவ் விண்ணப்பங்களை நிராகரிப்பது தர்மமில்லை என்றும் புதியவர்கள் பதவிக்கு வரும்போது விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி முடிவடைந்திருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

வகுப்பு 2 I ற்கான அடிப்படைத் தகைமையாக பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாச் சான்றிதழ் இருக்கும்போது அப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அனுமதியாமல் இருப்பது ஒரு விரிவுரையாளரின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். அது தவிர சமாந்தர சேவைக்காலத்தையுடைய பலர் ஏற்கனவே இப் பாட நெறியைப் பூர்த்தி செய்துள்ளார்கள். அவர்களிலிருந்து பூர்த்தி செய்யாதவர்கள் காலத்தால் பிந்த வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையும் பதவிகள் கிடைக்காமல் போகும் சூழ்நிலையும் ஏற்படும் என ஒரு விரிவுரையாளர் தெரிவித்தார்.

குறிப்பாகக் கூறுவதானால் பொது சேவை ஆணைக்குழு பிரிவு 15 "I" ற்கு 1995 - 2012 வரை ஒரு வியாக்கியானமும் 2012இல் வேறொரு வியாக்கியானமும் வழங்கியுள்ளதாக ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் குறிப்பிட்டார். இந்த ஆணைக்குழு முன்னர் செய்தது சரியா? அல்லது தற்போது செய்வது சரியா? எனத் தெரியாமல் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். முன்னர் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது? என அவர் கேள்வி எழுப்பினார். முன்னர் பிழையாக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தால் இப் பதவி உயர்வுகளைப் பெற்றவர்களுக்குப் பதவிகளும், சம்பளங்களும், சலுகைகளும் தவறாகவே வழங்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட பாடநெறி அவசியமெனின் ஏற்கெனவே அது வலியுறுத் தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு வலியுறுத்தப்பட்டிருந்தால் கடந்த 10 வருடங்களில் தாம் அதனைப் பூர்த்தி செய்திருப்போம் எனப் பாதிக்கப்பட்ட ஒரு விரிவுரையாளர் குறிப்பிட்டார். அத்துடன் தனக்குப் பதவி உயர்வு கிடைக்காததால் பல வருடங்கள் தான் சம்பள உயர்ச்சி இன்றி இருப்பதாக அவர் கவலை தெரிவித்தார்.

பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பாட நெறியைப் பின்பற்றச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் நுழைவுப் பரீட்சையில் (கல்வி முகாமைத்துவம், ஆங்கிலம்) சித்தியடைதல் வேண்டும். அவ்வாறு சித்தியடைந்து கல்வி கற்க அனுமதி கிடைத்தாலும் பாடநெறி நடாத்தப்படுவது "மீபே" முகாமைத்துவ கற்கை நிலையத்திலாகும். இது கொழும்பிலிருந்து அவிசாவளைக்குச் செல்லும் பாதையில் சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு ஆங்கில மொழி மூலம் பாடநெறி நடாத்தப்படுவ தாக அறிவிக்கப்பட்ட போதும் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடாத்தப்படுவதாகப் பாடநெறியைப் பினபற்றுவோர் கருத்துத் தெரிவிக்கின் றனர். இப்பாட நெறியைத் தேசிய கல்வி நிறுவகப் பிராந்திய நிலையங்களில் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில் நடாத்தினால் பெருமளவானோருக்குப் பயன்மிக்கதாக அமையும் எனக் கல்வியியலா ளர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இப் பாடநெறியைப் பின்பற்றுவதற்குரிய சந்தர்ப்பங்களைப் பரவலாக்கிய பின்னரே இதனை ஒரு அடிப்படைத் தகைமையாகக் கொள்ள வேண்டும் என்பது ஏகோபித்த கல்வியியலாளர் களின் அபிப்பிராயமாகும்.

2006ஆம் ஆண்டு 1ம் இலக்கத் திருத்தியமைக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின்படி SLAS, SLEAS போன்ற அகில இலங்கை சேவைகளுக் குரிய சம்பள அமைப்பே கல்வியியலாளர் சேவைக்கும் காணப்படுகிறது. அச் சேவைகளுக்குக் கிடைக்கும் வாகன அனுமதிப்பத்திரம் (Permit) இச் சேவைக்கும் கிடைக்கிறது. ஆனால் அச் சேவைகளில் வகுப்பு 1,2,3 ஆகிய பதவி அமைப்புக்கள் காணப்படுகின்றன. வகுப்பு III இல் நுழையும் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வருடங்களில் வகுப்பு IIற்கும் 15 வருடங்களில் வகுப்பு I ற்கும் செல்வார். ஆனால் ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் ஒருவர் வகுப்பு I ற்கு வருவதற்குச் சாதாரணமாக 17 வருடங்கள் செல்லும். ஆனால் நடைமுறையில் வகுப்பு III இலேயே 12 வருடங்களைச் செலவிடும் சூழ்நிலை காணப்படுகின்றது.

ஏனைய சேவைகள் போட்டிப்பரீட்சைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவை. கல்வியியலாளர் சேவை அவ்வாறில்லை எனக் காரணம் கூறப்படுகிறது. ஆனால் ஏனைய சேவைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் மாத்திரம் சித்தியடைந்த ஒருவர் சேவை முதிர்ச்சியுடனும் போட்டிப் பரீட்சைகளில் போதிய புள்ளிகளைப் பெறுவதுடனும் அச் சேவைக்கு வர முடியும். ஆனால் ஆசிரிய கல்வியியலாளர் சேவை கல்வியில் நிபுணத்துவமும் அனுபவ முதிர்ச்சியும் உடையவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. பொதுவாக ஏனைய அகில இலங்கை சேவைகளுடன் ஒப்பிடும்போது சமமான சம்பளத்திட்டம், வாகன அனுமதிப்பத்திரம் என்பவற்றைவிட வேறு எதுவிதமான சமாந்தரத் தன்மையும் இச் சேவையில் இல்லை எனலாம்.

எனவே ஆசிரிய கல்வியிலாளர் சேவை முரண்பாடுகளின் முழுவடிவமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் கல்வியியலாளர்கள் பல தடைகளைத் தாண்டுவதற்கு முன்னர் இச் சேவை பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. ஆசிரிய கல்வியிலாளர் சேவையின் புதிய பிரமாணக்குறிப்பு வெளிவரவிருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு புதிய பிரமாணக்குறிப்பு வெளிவரும்போது இம் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

*60ஆம் பக்கத் தொடர்ச்சி...*

- மாணவர்கள் அறிந்தவற்றை விரிவுபடுத்துங்கள்
- சுய முகாமைத்துவத்தை முன்னேற்றுங்கள்
- மாணவர்களது தீர்மானங்களை அவர்கள் தாங்களாகவே மதிப்பிட பயிற்றுவியுங்கள்
- திறந்த சவால்களை விடுங்கள்
- சூழ்நிலைகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துங்கள்

ஆசிரியர்களான எங்களுக்கு இருக்கும் புதிய சிந்தனைகளை நாங்களாகவே வெளிப்படத்த படைப்பாற்றலும் இயலுமையும் அவசியம். நாங்கள் ஆசிரியர்களாக பணிபுரிய இருக்கும் இச் சமூகத்திலுள்ள சில ஆசிரியர்கள் பல துறைகள் தொடர்பான நிறைவான அறிவு உள்ள போதிலும் அவற்றை மாணவர்களுக்கு தெளிவாக வெளிப்படுத்தவோ வழிகாட்டவோ தெரியாதுள்ளது. இவ்வாறல்லாது மாணவரை சிறப்பாக வழிகாட்டக் கூடிய ஆசிரியர்களாக மாற வேண்டும். நாங்கள் உருவாக்க இருக்கும் நாட்டின் இளம் சந்ததியினரை படைப்பாற்றல் கொண்டவர்களாக உருவாக்க முயற்சி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாடல் : குறிநெறிசார் சிந்தனை

✷ வி.ரி.ஜி.பி.லிங்கம்

**மாணவர் :** குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனை *(Critical Thinking)* என்றால் என்ன?

**ஆசிரியர் :** இது உயிரினங்களிடையே இயற்கையாகவே இருக்கின்ற மனத்தின் செயற்திறனாக அடையாளங் காணப்பட்டுள்ள வொன்றாகும். விசேடமாக மனிதவாக்கத்தினரிடையே இது மேம்பட்டிருப்ப தையும் அவதானிக்கலாம். ஐம்புலன்களின் சீரிய இயக்கங்களி னால் ஏற்படும் நிகழ்வுகளை வகுத்து, பகுத்து, ஆராய்ந்து தீர்மானமாக அல்லது முடிவாக மாற்றியமைக்கும் சிந்தனை யையே குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனை என்கின்றோம். இதனால் எட்டப்பட்ட முடிவு, திறந்த மனத்துடனும், நியாய மான முறையிலும், கட்டுக்கோப்புடன் ஆக்கமும் கொண்டதாய் இருப்பதுடன் நம்பகத் தன்மையின் செறிவு சிறந்ததாக இருக்க வேண்டும்.

**மாணவர் :** இந்தச் சிந்தனையின் செயன்முறையில் அடங்கும் காரணிகள் யாவை? அவை எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன?

**ஆசிரியர் :** சிந்தனைக்குட்படுத்தப்பட வேண்டிய அடிப்படை விடயம், கொள்கை, திட்டம், குறிப்பான ஒருவிடயம், பிரச்சினை, முரண்பாடு, திடீர் நிகழ்வுகள், எதிர்பாராத ஆபத்துக்கள், புதியன எழுதல், குறுக்கீடுகள், தடைகள் என்பனவாகும். இவை அரசியல், பொருளாதாரவியல், சமூகவியல், விஞ்ஞான தொழில்நுட்ப வியல், சூழலியல், சட்டவாக்கம், இயற்கை அனர்த்தம், கல்வி, மருத்துவம், மெய்யியல், வானசாஸ்திரம் போன்ற எந்தத் துறையையும் சார்ந்திருக்கலாம்.

சிந்திக்க வேண்டிய பொருளை இனங்கண்டபின் அதுபற்றி தகவல்கள், தரவுகள் யாவும் நிரைப்படுத்தல் வேண்டும். இது சம்பந்தமான தற்போதைய நிலையை அகப்புறச் சூழலை வைத்து அனுமானிக்க வேண்டும். விடயத்திலுள்ள மயக்க நிலையையோ, இன்மொழிந்தவற்றையோ, முரண்பாட்டுக்குரிய

கட்டுரையாளர்

ஆழி இயந்திரப் பொறியியலாளர், இலங்கை கடற்படை ஆணை அதிகாரி (ஓய்வு), முகாமைத்துவ ஆலோசகர், கடல்சார் சூழல் மாசடைதல் தடுப்பு ஆலோசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்களை எப்படி கையாளலாம் என வியூகங்கள் சிருஷ்டிக்கப்பட வேண்டும். அவற்றுள் மாற்று முறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். வியூகம் ஒவ்வொன்றினதும் பலம், பலவீனம் என்பனவற்றை எடைபோடுவதோடு சாதக பாதக நிலையின் தரத்தையும் கணிப்பீடு செய்தல் அவசியம்.

இவ்வகையான ஆதாரங்கள் யாவும் கிரகிக்கக்கூடிய ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டபின், மூல அல்லது முதன்மை நோக்கை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமொன்றை எட்டலாம். அதன்போது மாற்றுத் தீர்மானங்களும் முன்மொழியப்படலாம். இது ஒரு தனிமனித நடைமுறையென்றால் தீர்மானம் எடுப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் ஏற்படும் தாமதங்கள் குறைவாக இருக்கும். ஆனால் தனிமனிதன் எடுக்கும் முடிவில் "தர" குறைபாடுகள் "அபாய"ச் செறிவின் தாக்கங்கள் காணப் படலாம். ஒரு குழுமம் முடிவெடுக்கும் போது பலருடைய முன்மொழிவுகளும், பரிந்துரைகளும் உள்வாங்கப்பட்டு, அலசி ஆராயப்பட்டு, தீர்மானத்தின் "தரம்" பேணப்படுவதோடு, "அபாய" அச்சுறுத்தல்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன.

பின்னர் தீர்மானத்தைச் செயற்படுத்தும் போது அடிப்படை நோக்கத்துக்கு இயைவான திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், தொடர்பாடுதல், நெறியாளுதல், கட்டுப்படுத்தல், அளவீடு செய்தல், தரப்படுத்துதல், மீளாய்வு செய்தல், குறைகளைதல், மேம்படுத்துதல்.. போன்ற செயன்முறைகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஒரு விடயத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவுரை சிந்தனையின் செயலாக்கத்தில் எந்தச் சந்தர்ப்பங்களிலும் "நெகிழ்வுத் தன்மை யும், உறுதிப் பண்பும் தேவைக்கேற்பக் கடைப்பிடித்தல் அவசியமாகின்றது. இந்தச் சிந்தனையின் இயைவாக்கம் அடிப்படை நோக்கிலிருந்து நழுவக்கூடாது. ஆனால் குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனைக்குட்படுத்தப்படும் விடயத்திற்கேற்ப சிந்தனையின் வினை விளைத்திறன்களும், செயலாக்கத்திலும் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவற்றைச் சீர்செய்யும் திறன் தனிமனிதனுக்கோ அல்லது குழுமத்துக்கோ அவசியமாகின்றது.

**மாணவர் :** இத்தகைய குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனை நடைமுறையில் இருக்கும் போது எவ்வகையான திறன்களை ஆளுமைக்கு உட்படுத்த வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் :** (1) விடயம் பற்றிய ஆழ்ந்த அறிவு (2) விடயத்திற்கு ஏற்படக் கூடிய அகப்புறத்தாக்கங்களை ஊகித்தறியும் தன்மை (3) எதிர்மறைக் காரணிகளை நேர் மறையாக்கும் திறன் (4) மாற்று முறைகளில் சிறந்த முறையைத் தேர்வு செய்யும் புத்திக்கூர்மை (5) குழுமத்தில் மாற்றுக் கருத்துக்கள் உருவாகும்போது, மோதல் நிலை தவிர்த்து, குழுமத்தினர் ஒன்றிணைந்து செயற்படும் புரிந்துணர்வு (6) செயலொழுக்கக் கோவையையும், பண்பாட்டுக் கோட்பாடுகளையும் மதித்து நடக்கும் மனத்திண்மை (7) எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையிலும் நேர்மையாகவும், காரணகாரியத்தோடு செயற்படும் ஆளுமை (8) நோக்கத்திற்கேற்ப காலவரையுடன் இயங்கும் தெளிவு முதலாகியன அவசியமாகின்றன. மேற்கூறிய செயலாண்மைத் தன்மைகள் ஆக்கபூர்வமான அனுகூலங்களைத் தருவதற்கு தொடர்பாடல் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. இங்கு தொடர்பாடல் முறை, மொழிவளம், குரலின் பண்பு, கருத்தியல் விளக்கம், பேரம்பேசும் தன்மை விமர்சனத்தின் மூலம் விடயத்திற்குத் தேவையானவற்றை போற்றி ஏற்கும் சுபாவம,. வேண்டாதவற்றை மற்றவர் மனம் புண்படாது நசூக்காக கைவிடல், சமரச வார்த்தைப் பிரயோகத்தால் முரண்பாடுகளைத் தூண்டாதிருத்தல் என்பன கருத்தில் எடுக்கப்படல் வேண்டும். திறந்த மனம் சிறந்த ஆக்கம் என்பதை மறக்கலாகாது.

**மாணவர் :** இந்தக் குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனையின் ஆரம்பமும் ஆக்கமும் பற்றிச் சொல்லுங்கள்.

**ஆசிரியர் :** உங்கள் முதற்கேள்விக்கு அளித்த பதிலின் இதன் ஆரம்பம் பற்றிக் கூறியுள்ளேன். உயிரினங்களின் ஆரம்பமே இச்சிந்தனையின் ஆரம்பமெனலாம்.

பல ஆய்வாளர்களின் கருத்துப்படி இது 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் செயலுருவையும் செயலாக்கத்தையும் பெற்று, இதன் பிரயோகம் பல்துறைகளில் வியாபகம் பெற்றிருப்பதும், பலனளித்துக் கொண்டிருப்பதும் நிரூபணமாகியிருக்கின்றமை கண்கூடு.

தாய்மார்கள் நிலவைக்காட்டி தம் குழந்தைகளுக்கு பாலூட்டிய காலம் மாறிவிட்டது. இன்று அந்த நிலவில் காலடி வைத்த மனிதர் "நீல் ஆம்ஸ்றோங்"கும் காலமாகிவிட்டார். பிரஞ்சுப் புரட்சி, மறுமலர்ச்சிக்காலம், ருசியப் புரட்சி, அமெரிக்காவின் சிவில் யுத்தம், மக்னா காட்டாவின் உருவாக்கம், சுதந்திரப் பிரகடனம், முதலாம் - இரண்டாம் உலகப்போர், ஜப்பானில் அணுகுண்டுகள் வீசியமை, "ஆமிஸ்ரிக்" சமாதான உடன்பாடு, ஐக்கியநாடுகள் சபையின் தோற்றம், ருசியப் பேரரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்தமை, பேர்ளின் சுவர் அகற்றப்பட்டமை, மனிதன் சந்திரமண்டலத்தில் காலடி வைத்தமை, தற்போது "கூறியஸ்" விண்கலம் செவ்வாய் கிரகத்தில் இயங்குகின்றமை, ஆங்கிலக் கால்வாயின் அடியின் கீழ் புகையிரதச் சுரங்கப் பாதை அமைத்தமை, ஆசிய ஆபிரிக்க, மத்திய கிழக்கு, போல்கன் பிரதேசங்களின் நடந்த நடைபெறுகின்ற யுத்தங்கள், முரண்பாடுகள், சிக்கல்கள், அணுவாயுத பரிசோத னைகள், கடலடி கனிமங்களின் அகழ்வுகள், வளிமண்டல ஆய்வுகள், கண்டுபிடிப்புகள் ஆகியனவற்றைக் கூர்ந்து கவனிக்கும் போது குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனையின் வெற்றிகளும் தோல்விகளும் புலப்படுகின்றன.

இதன் அடிப்படையில் இருப்பன "மனித மனத்தின் பண்பும் வீண்பும்" என்பது புலனாகின்றது. குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனையின் "பண்பு" பண்பட்டு "வீண்பு" வீரியமிழக்க வேண்டும்.

ஒரு குழந்தையைக் கருக்கொண்டு பெற்று வளர்த்து ஒரு நற்பிரஜையாக்குவது பெற்றோரின் குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனையிலேயே தங்கியுள்ளது. இது எல்லாவற்றிற்கும் "கல்வி" குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனையுடன் அமைய வேண்டும்.

**மாணவர் :** இதை நன்றாகத் தெரிந்து செயற்படுவதற்கு அதிக நேரமும் தேடலும் தேவைப்படுமே?

**ஆசிரியர் :** கற்றறிதல், உற்றறிதல், பட்டறிதல் மூன்றும் முக்கியம். இதற்கு எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும்.

**மாணவர் :** குறிநெறிசார் (நிலைநோக்குச்) சிந்தனை பயன்படும் சந்தர்ப்பங்கள் எவை?

**ஆசிரியர்:**
1. ஒரு புதிய கொள்கை வகுக்கும்போதும் செயற்படுத்தும் போதும்.
2. ஒரு திட்டத்தின் சிந்தனை (கருக்கொள்ளும்) ஆரம்ப நிலை, உருவாக்கம் பெறும் நிலை, செயலாக்கம் பெறும் நிலையும் தொடர்ச்சியும்
3. ஆசிரியர் - மாணவர், கற்பித்தல் - கற்றலின் போதும்,
4. பொறியியலாளர், மருத்துவர், சட்டத்தரணி, கணக்காளர், இராணுவ அதிகாரி, அரசியல்வாதி போன்றோர் தத்தமது துறைசார் செயற்பாடுகளில் பிரச்சனைகளைக் கையாளும் போதும்.
5. மக்கள்சார் தேசிய, பல்தேசியப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்கும் போதும்.
6. இருக்கும் கொள்கைகளில் மாற்றம் செய்து மேம்பாடு செய்யும் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றறி உளவியல் கோட்பாட்டு நிலையில் அதன்பலம்

✱ சபா.ஜெயராசா

உற்றறிக் கோட்பாட்டை (Critical Theory) அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெற்றதே உற்றறி உளவியலாகும். மரபுவழியான உளவியல் அணுகுமுறைகளை அது அறைகூவலுக்கு உட்படுத்துகின்றது. உளவியல் விளக்கங்களை முற்போக்கான நிலைகளுக்கு இட்டுச் செல்கின்றது. உளவியற் பிரச்சினையையும் உளநோயையும் ஏனைய உளவியல் அணுகுமுறைகள் தனிமனிதரை அடிப்படையாகக் கொண்டே நோக்குகின்றன. ஆனால் உற்றறி உளவியல் சமூக இயல்பை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றது. சமூக மாற்றத்தின் வழியாகவே தனிமனித உளநலனை ஏற்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துகின்றது. அந்த வகையில் அது மார்க்சியத்தின் செல்வாக்கை உட்கொண்டு மேலெழுகின்றது.

சமூகத்திலே இடம்பெற்றுள்ள அதிகாரக் கட்டமைப்பும் சமூக வர்க்க இயல்பும் மனித உள நலத்தைப் பாதிப்படையச் செய்கின்றன. சுரண்டலுக்கு உள்ளாகும் மனிதர் அவலங்களை அனுபவிக்கும் மனிதராகின்றனர். ஏனைய உளவியல் அணுகுமுறைகள் சமூகத்திலே நிலவும் சுரண்டலையும், அதிகார அழுத்தங்களையும் கருத்திலே கொள்ளத் தவறிவிடுகின்றன. உற்றறி உளவியலே அவற்றை முழுமையான கவனிப்புக்கு உள்ளாக்குகின்றது.

1970ஆம் ஆண்டளவில் உற்றறி உளவியல் என்ற கருத்தாக்கம் ஜேர்மனியிலே தோற்றம் பெற்றது. அந்தக் கருத்தாக்கம் தோற்றம் பெறுவதற்கு கார்ல் மார்க்சின் சிந்தனைகள் வளமான பின்புலமாக அமைந்தது. தனிமனித உணர்வுகள் அவர்களின் வாழ் நிலையிலிருந்தும் சமூக இருப்பிலிருந்தும் மேற் கிளம்புதலை மார்க்சியத் தருக்கம் தெளிவுபட விளக்கியுள்ளது. சமூக இருப்பிலிருந்தே உணர்வுகள் மேலெழுகின்றன.

மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றி பிரான்சிலும், ஜேர்மனியிலும் மாணவர் எழுச்சி இயக்கங்கள் தோற்றம் பெற்றன. மார்க்சியத்தின் விடுவிப்புச் செயற்பாடு பல நிலைகளிலே ஊட்டம் விளைவிக்கத் தொடங்கின. உளவியல் நிலையில் அதன் செல்வாக்கு உற்றறி உளவியலாக முகிழ்த்தெழுந்தது.

கட்டுரையாளர்

கல்வியியல்துறைப் பேராசிரியர், பன்னூல் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றறி உளவியலுக்குரிய அறிகை வடிவத்தை அமைத்தவர்களுள் ஹோல்ஸ்காம் *(Holzkamp)* முக்கியமானவர். ஆய்வின் ஆட்சி நிரலமைப்புப் *(Paradigm)* பற்றிய கருத்தை முன்வைத்தவர் கூன் அவர்கள். உளவியல் ஆய்வை ஹோல்ஸ்காம் முன் அமையும் ஆட்சி நிரலமைப்பின் வடிவமாகக் கண்டார். ஏற்கனவே மார்க்சிய உளவியல் பலநிலைகளிலே வளர்ச்சிகொள்ளத் தொடங்கிவிட்டது. பவ்லோவ், வைக்கோட்சி முதலியோர் மார்க்சிய விஞ்ஞான சிந்தனைகளை அடியொற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தனர். வைக்கோட்சி சமூக இயல்பையும் நிலவரங்களையும் அடியொற்றி கற்றற் செயற்பாடுகளை விளக்கினார்.

அதே மரபில் வந்த ஆய்வாளர்களுள் அலெக்சி லியோன்ரி யேவ் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றி மனித வினைபாடுகளை, உயிரியற் பண்புகளின் அடிப்படையில் மட்டுமன்றி சமூகப் பண்பாட்டுப் படிமலர்ச்சியின் அடிப்படையிலும் ஆராய்ந்து விளக்கினார். சமூக வினைப்பாட்டின் ஒரு பகுதியாகவே தனிமனிதரின் செயற்பாடுகளும் அறிகையும் இடம்பெறுதலைக் கண்டறிந்தார். மனித அறிவு வளர்ச்சியிலே சமூகம் உருவாக்கிய குறியீடுகள், மற்றும் மொழி ஆகியவற்றின் முக்கியத்து வத்தையும் ஆய்வு நிலையில் விளக்கினார்.

மார்க்சிய உளவியலை முன்னெடுத்த பிறிதோர் ஆய்வாளர் லுசியான் செவே *(Luceien Seve)* ஆவார். அவர் மனித ஆளுமையின் உருவாக்கத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தார். அத்தகைய மார்க்சிய உளவியலாளரின் செல்வாக்குகளை அடியொற்றி உற்றறி உளவியல் எழுச்சி கொண்டது. அத்துடன் உளப்பகுப்பியல் மற்றும் தோற்றப்பாட்டு வாதம் முதலியவற்றின் செல்வாக்குகளும் உற்றறி உளவியலில் இடம்பெற்றன.

மனிதரின் புலக்காட்சி உருவாக்கம், அறிகைச் செயற்பாடுகள், வம்ச விருத்திச் செயற்பாடுகள் முதலியவை வரலாறு மற்றும் பண்பாட்டுக் கட்டுமை களினால் உருவாக்கம் பெற்ற இணைப்புக்கள் உற்றறி உளவியலால் விளக்கப் படுகின்றன. வரலாற்று வளர்ச்சியுடன் இணைந்த சமூக ஆக்கம் மற்றும் பொருள்சார் பண்பாடு ஆகியவற்றுக்குமிடையே உள்ள இணைப்புக்கள் ஹோல்ஸ்காம் அவர்களாற் கண்டறியப்பட்டன. அந்நிலையில் உற்றறி உளவியல் மார்க்சியச் சிந்தனை வீச்சின் வளங்களோடு சங்கமித்தது.

நடத்தைவாத உளவியல் சமூக பண்பாட்டுக் கோலங்களைக் கருத்திலே கொள்ளாத மட்டுப்பாடுகளுடன் இருத்தலை உற்றறி உளவியலாளர் வெளிப்படுத்தினர். புறவயமான விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையினை நடத்தைவாதம் கொண்டுள்ளது என்று கூறப்படுவதன் மட்டுப்பாடுகளையும் அவர்கள் குறித்துரைத்தனர். அதாவது, சமூக இருப்பையும் நிலவரங்களையும் கருத்திலே கொள்ளாது தூண்டி - துலங்கல் அடிப்படையிலே மனித நடத்தைகளை விளக்குதல் முழுமை அடையாத மட்டுப்பாடுகளையே கொண்டிருக்கும். மேலும் நடத்தைவாதம் விஞ்ஞான பூர்வமானது என்பது ஒருவித மாயைத் தோற்றமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றறி உளவியல் கற்றற் கோட்பாடுகளையும் மீள் வாசிப்புக்கு உட்படுத்தியது. ஹோல்ஸ்காம் அவர்கள் 1993ஆம் ஆண்டுக்குப் பின்னர் அத்துறையிலே தீவிர கவனம் செலுத்தினார். ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்த கற்றல் கோட்பாடுகளை உற்றறி உளவியலுக்குரிய முறைகளைப் பயன்படுத்தி மீள் வாசிப்புக்கு உட்படுத்தினார். அந்த வாசிப்பு கற்போரின் சமூக பண்பாடு நிலைகைளையும், வரலாற்றுச் சூழமைவுப் பின்புலத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. மேலும் அறிகை மானிடவியல் *(Cognitive Anthropology)* கருத்துக்களையும் அவர் ஒன்றிணைத்து மீள்பதிப்பீடுகளை மேற்கொண்டார்.

நவீன வகுப்பறைக் கற்பித்தலும் சமூகமயமாக்கலும் அரச நிறுவனமயப் பாட்டுடன் இணைந்த செயற்பாடுகளாகின்றன. இத்துறையில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட மிசேல் பூக்கோ அறிவுக்கும் அதிகாரத்துக்குமுள்ள தொடர்புகளை விளக்கினார். அவர் எழுதிய "ஒழுக்கமும் தண்டனையும்" என்ற நூலில் மாணவரின் உடலானது அதிகாரத்துக்கு அடிபணியும் வகையிலே "பணியும் உடலாக" மாற்றப்படுதலையும் சுட்டிக்காட்டியுள்ளார். பாடசாலையின் முழு அமைப்பும் அதிகாரத்தை நிலை நிறுத்தும் வகையிலே திட்டமிட்டுக் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ள விதத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

பூக்கோவின் சிந்தனைகளை உற்றறி உளவியலும் உள்வாங்கிக் கொண்டது. வரலாற்றிறன் வழியாக உருவாக்கம் பெற்ற நவீன வகுப்பறைகள் மாணவரின் உள்ளார்ந்த ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. வகுப்பறையிலே பயன்படுத்தப்படும் உபாயங்களும் நுட்பங்களும் மாணவரின் கற்கும் வலுவைக் கட்டுப்படுத்திவிடுகின்றன. அவ்வாறான எதிர்மறை நிலைகளைக் கருத்திலே கொண்ட ஹோல்ஸ் காம் அவர்கள் அவற்றை மாற்றியமைப்பதற்கு "விரிவமை கற்றல்" *(Expansive Learning)* என்ற ஏற்பாட்டைப் பற்றி விளக்கியுள்ளார். வகுப்பறைக் கற்பித்தலின் மட்டுப்பாடுகளை மாற்றியமைத்தல் அக்கற்பித்தலில் விளக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டில் "உற்றறி உளவியல்" என்ற ஒரு தொகுப்பு நூல் வெளிவந்தது. டெனிஸ் பொக்ஸ் அவர்களும் ஐசாக் பிறிலெட்டன்ஸ்கை அவர்களும் அந்த நூலின் ஆசிரியர்களாகச் செயற்பட்டனர். உற்றறி உளவியல் தொடர்பான பல்வேறு கருத்தாடல்களை முன்னெடுப்பதற்கு அந்த நூல் ஆதாரமாகவுள்ளது. மனித மனத்தை மொழி என்ற சட்டகத்தினுள் சுருக்கி விடுதல் பற்றி கருத்தும் விவாதத்துக்கு உள்ளாக்கப்பட்டது. அதாவது உளவியலை மனித மனம் என்ற சட்டகத்துள் மட்டும் சுருக்கி விட்டு சமூக இயல்பை நிராகரித்தல் எத்துணை அபத்தமானதோ அவ்வாறே மொழி என்ற சட்டகத்துள் சுருக்கி விடுதலும் அபத்தமானதாக முன்மொழியப்பட்டது. மொழி பற்றிய சிந்தனைகள் எழுச்சி கொண்ட நிலையில் சமூக நிலவரங்களை மறந்து அனைத்தையும் மொழிக்குள் அடக்கிவிடும் செயற்பாடுகளை சில உளவியலாளரும் ஏற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999ஆம் ஆண்டிலே இயன் பாக்கர் என்பவர் தீவிர உளவியல் மற்றும் உற்றறி உளவியல் தொடர்பான ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். உற்றறி உளவியல் தமது பரப்புக்குள் பின்வருவனவற்றை உள்ளடக்கிக் கொள்ளல் வேண்டுமென்ற கருத்தை அவர் வலியுறுத்தினார்.

(அ) பல்வேறுபட்ட உளவியல் முறைமைகளையும் ஆக்கங்களையும் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்துதல். ஒவ்வொரு முக்கியமான உளவியல் சிந்தனா கூடங்களுக்கும் பின்புலமாகவுள்ள கருத்தியலும் மேலாதிக்கத்தில் எவ்வாறு செயற்பாடு கொள்கின்றது என்பதையும் கண்டறிதல்.

(ஆ) ஒவ்வோர் உளவியல் வகையும் வரலாற்று வளர்ச்சியிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் எவ்வாறு கட்டுமைக்கு உள்ளாக்கப்பட்டது என்பதைக் கண்டறிதல், மாற்று வகையான உளவியலின் மட்டுப்பாடுகளைக் கண்டறிதல், எவ்வாறு அவற்றின் கருத்தியலை எதிர்த்து எழ முடியும் என்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

(இ) புலமை எல்லைகளையும், கோட்பாட்டு வடிவங்களையும் கடந்து உளவியற் பண்பாடு ஒவ்வொருவரதும் நாளாந்த வாழ்க்கையிலே எவ்வாறு செயற்படுகின்றது என்பதைக் கண்டறிதல்.

(ஈ) சமகால உளவியற் கல்வியின் செயற்பாடுகளை ஒவ்வொருவரதும் நாளாந்த வாழ்க்கைத் தொழிற்பாடுகள் எவ்வகையில் தாங்கிப் பிடித்தும் எதிர்த்தும் நிற்கின்றன என்பதை உய்த்தறிதல். அதாவது ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் சாதாரண உளவியலை புலமை நோக்கில் தேடலுக்கும் ஆய்வுக்கும் உட்படுத்துதல்.

பெரும் உளவியற் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் உற்றறி உளவியல் கேள்விக்கும் விசாரணைக்கும் உட்படுத்தி வருகின்றது. அக்கோட்பாடுகளை முற்று முழுதாக நம்பும் மனோபாவத்தை உற்றறி உளவியல் தகர்த்துள்ளது. பெரும் உளவியற் கோட்பாடுகள் முன்வைத்த கருத்துக்களும் அணுகுமுறைகளும் சரியானவை என்று கருதும் உளப்பாங்கு இன்றும் பலரிடத்துக் காணப்படுகின்றது. ஒவ்வோர் உளவியற் கோட்பாட்டுக்கும் பின்புலமாக அமைந்த கருத்தியலை *(Ideology)* பரிசீலிக்கும் பக்குவம் மாணவரிடத்து இன்னமும் வளர்ச்சியடையவில்லை. அத்தகைய தேக்க நிலையை உற்றறி உளவியல் உடைத்து விடுகின்றது.

உற்றறி உளவியல் பற்றி அறிந்துகொள்ளும் பொழுதுதான் உளவியல் பற்றிய தெளிவான காட்சிகளை அறிந்து கொள்ள முடியும். உளவியலின் நடப்பியல் தழுவிய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுபட்ட சிந்தனை : சில குறிப்புக்கள்

* க.சுவர்ணராஜா

மனிதனின் அடிப்படை வெற்றிக்கு ஆதாரமாக அமையும் விடயங்கள் பற்றிய நோக்கில், இன்று அதிகமாக பேசப்படும் விடயம் மாறுபட்ட சிந்தனை விருத்தி பற்றியதாகும். எமது எதிர்கால கல்வி முறையிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதொரு விடயமாகவும், பாடசாலைக் கலைத்திட்டச் செயற்பாடுகள், ஆசிரியர் கல்வி போன்ற துறைகளிலும் கட்டாயம் உட்புகுத்த வேண்டியதொரு அம்சமாகவும் மாறுபட்ட சிந்தனை விருத்தி அமைகின்றது.

நுண்ணறிவு விருத்திக்கான தளத்தில் மாறுபட்ட வித்தில் சிந்தித்து செயலாற்றும் திறனை விருத்தியாக்கும் நுட்பங்கள் பற்றிய தெளிவான நோக்கு வளர்த்தெடுக்கப்படல் இன்று பெரிதும் வரவேற்கப்படுகின்றது. மறுபக்கத்தில் நிறுவனச் செயலாற்றுகைகள், தலைமைவகித்தல், தீர்மான மெடுத்தல், போன்ற விடயங்களின் சகல தளங்களிலும் மாறுபட்ட சிந்தனையின் ஊடாகவே வெற்றியடைய முடியுமென்ற நிலை எழுந்துள்ளது.

எமது கல்வி முறையின் ஊடாக மாறுபட்ட சிந்தனைகள் கொண்டோரை உருவாக்குதல் மூலமே எதிர்கால தொழில் வாய்ப்புக்களில் வெற்றியடைவதை உறுதிப்படுத்த முடியும். கல்வியறிவும் நுண்ணறிவும் ஒரு வாகனத்தின் இயந்திரம் போன்றது. மாறுபட்ட சிந்தனை என்பது அந்த அந்த வாகனத்தை பொருத்தமாக செலுத்துவது போன்றதென உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எம்மிடம் சக்தி வாய்ந்த ஒரு வாகனம் இருக்கின்றது என வைத்துக் கொள்வோம். அந்த வாகனத்தை பொருத்தமான வேகத்தில் செலுத்துவதற்கும், பொருத்தமாக பராமரிப்பதற்கும் எமக்கு தெரியாவிட்டால் அதிலிருந்து அதிக பயன் பெற முடியாது. அதே போன்று தான் எமது சிந்தனையும் அமைகின்றது. நாம் எவ்வளவு பெரிய அறிவாற்றல் உடையவராக இருந்தாலும், எம்மிடம் உள்ள அறிவையும் ஆற்றலையும் சரியாகப் பயன்படுத்த புதிய கோணத்தில் சிந்திக்காது விட்டால் எம்மால் வெற்றிபெற முடியாது போய்விடும். மறுபக்கத்தில் நோக்கினால் எம்மிடம் இருக்கும் சக்தி குறைந்த வாகனத்தை எமது மாறுபட்ட சிந்தனையினால் மிகத் திறமையாகப் பயன்படுத்தி அதிக பலன் பெறவும் முடியும்.

கட்டுரையாளர்

வவுனியா தேசிய கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எம்மிடம் உள்ள அறிவின் பெரும்பகுதியை ஒரு கருத்தை சரியென நிரூபிப்பதிலும், எமது கருத்தை மற்றவர்களை பலவந்தமாக ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் பயன்படுத்துகின்றோம். இதன் விளைவாக பின்வரும் மோசமான விளைவுகள் தோன்றுகின்றன.

| | |
|---|---|
| ⊙ மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதில்லை முரண்பாடுகள் உருவாகுகின்றன. | மாற்று கருத்துக்களை அசட்டை செய்கின்றோம் புதுமை எழுவதில்லை. |
| ⊙ மற்றவர்களை சரியாக செவிமடுப்பதில்லை மனித நேயம் வீழ்ச்சியடைகின்றது. | எமது கருத்துகளில் அதீத நம்பிக்கை கொள்கின்றோம் மாற்றங்களை ஏற்க தயக்கம் ஏற்படுதல். |
| ⊙ மற்றவர்களின் கருத்துக்களின் மீது சந்தேகம் கொள்ளல் | சிறப்பான கருத்துக்கள் வெளிவருதலுக்கான சந்தர்ப்பங்கள் குறைவடைகின்றன. |
| ⊙ எதிர்பாராத தோல்விகள் ஏற்படுகின்றன. | தோல்விகளுக்கு மற்றவர்களை காரணம் காட்டும் எதிர் மனப்பாங்கு உருவாகுகின்றது. |

மேற்கணட விளைவுகளை நோக்கினால் எமது சிந்தனைகள் அகவயப்பட்டதாகவும், மாற்று வழிகளை ஏற்றுக்கொள்ளதாகவும் இருந்தால் எமது பணியின் வெளியீடுகள் தரமற்றதாகவும், தொடர்ந்து பிரச்சினைகளை உருவாக்கும் செயன்முறையாகவும் அமையும் என்பது புலனாகுகின்றது.

**எமது சிந்தனைகளை நாம் மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம்**

- சிந்தனைகள் மாறும் போது செயலாற்றல்கள் அதிகரிக்கின்றது.
- சிந்தனைகள் தெளிவாகவும், மாறுப்பட்டதாகவும் அமையும் போது அது கல்வி, தொழில், வாழ்க்கை என்பன சிறப்படைவதற்கு அடித்தளமாகின்றது.
- விரைவாகவும், ஆக்கப்பூர்வமாகவும், மற்றவர்களை கவரக்கூடிய முறையிலும் நாம் செயலாற்றுவதற்கு எமது சிந்தனைகளில் மாற்றம் தேவை.
- பிரச்சினைகளை சுயமாகவும், பொருத்தமாகவும் அணுகுவதற்கும், தீர்ப்பதற்கும் மாறுப்பட்டு சிந்தித்தல் அவசியமானது.
- அறிவுப் பொருளாதாரத்துடன் இணைந்து செல்வதற்கு அவசியமான நிபந்தனை புதிய முறைகளில் சிந்தித்தல் ஆகும். ஏனெனில் அறிவு பொருளாதாரம் நெகிழ்ச்சியாக சிந்திக்கும் திறன்களையும், தகவல்களை விரைவாக பகுப்பாய்வு செய்து முடிவெடுக்கும் திறன்களையும்,அதிகம் எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாறுபட்டு சிந்திக்கும் நிலையில் மொழியாற்றலும், முன்வைக்கும் ஆற்றலும் விருத்தியடைவதுடன் எம்மை ஆக்கப்பூர்வமானவாகளாக வெளிக்காட்டுகின்றது.
- மாறுபட்ட சிந்தனைக் கோலங்கள் எம்மில் உருவாகும் போது அது எமது பிரதிபலிப்புச் சிந்தனைகளை உயிர்ப்பிக்கின்றது.
- விஞ்ஞானபூர்வ அணுகுமுறைக்கும், சுதந்திரமான வாழ்க்கைக்கும் மாற்றுக் கோணத்தில் சிந்தித்தல் அவசியமானதாகும்

**சிந்தனையை மாற்றியமைத்தலுக்கான நிபந்தனைகள்**

⊙ நாம் நமது சிந்தனையை மாற்றியமைத்தலுக்காக பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படல் அவசியம்.

⊙ புதிய யோசனைகள் தொடர்பாக திறந்த மனதுடன் இருத்தல் வேண்டும்.

⊙ அறிவுச் சுதந்திரம் உடையவர்களாக எம்மை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

⊙ புதிய தகவல்களைக் கண்டறிவதில் ஆர்வமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

⊙ தேவைப்படும் தகவல்கள், தரவுகள் தொடர்பாக விழிப்புடன் காணப்படல் வேண்டும்.

⊙ தொடர்ச்சியாக வினவும் மனப்பாங்கு தேவை.

⊙ முடிவுகளை ஆதாரத்துடன் வெளிப்படுத்த முனைதல்.

⊙ விடயங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி பார்த்தல் வேண்டும்.

⊙ எதனையும் பகுப்பாய்வுச் செய்து முடிவுக்கு வருதல்.

⊙ கையாளும் விடயங்களை சொந்த அபிப்பிராயங்களுக்கு அப்பால் இருந்து நோக்குதல் வேண்டும்.

⊙ தவறுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குதல் ஆகாது.

⊙ குழப்பங்களை உடன்பாடாக நோக்குதல் வேண்டும்.

⊙ தொடர்ச்சியான வாசிப்பு

⊙ மற்றவர்களின் கருத்துக்களில் அக்கறை காட்டுதல்

⊙ தொடர்ச்சியான தேடல் வேண்டும்.

⊙ நன்கு அறிவுறுத்தப்பட்டவராக இருத்தல்.

⊙ தினமும் பிரதிபலிப்பில் ஈடுபடல்

⊙ எதனையும் பன்முகத்துடன் நோக்கல்.

⊙ படிமுறையில் காரியமாற்றல்

⊙ சிறந்த முடிவுகளுக்காக பொறுமையுடன் செயலாற்றல்

என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாறுப்பட்ட சிந்தனைக்கான PMI.**

பாரம்பரிய சிந்தனைகளிலிருந்து விடுபடும் ஒரு நுட்பமாக *எட்வர்ட் டி போனோ* என்பார் PMI என்றொரு முறையை முன்வைக்கின்றார். இம்முறையானது எமது முதல் பார்வையில் தோன்றும் எண்ணங்கள். சிந்தனைகள்,கருத்துக்கள் மேலேட்டமானவை. அவை எமது சொந்த விருப்புகளை பிரதிபலிப்பவை. எமது கருத்தை நிரூபிப்பதற்கான பலவீனமான முயற்சி எனக் கூறுகின்றது. எமது கருத்துக்களை நிலைப்பெறச் செய்வதற்கான ஆதிக்கமுயற்சி மாற்று சாத்தியங்களை நிராகரிக்கும் பலவீன சிந்தனை என்பது எட்வர்ட் டி போனோ என்பவரின் கருத்தாகும்

PMI என்பது

1. *Plus Points (சாதகமான அம்சங்கள்)*
2. *Minus Points (பாதகமான அம்சங்கள்)*
3. *Interesting Points (சுவையான அம்சங்கள்)* என்பவற்றை குறித்து நிற்பதாகும்.

நாம் சிந்திக்கும் அல்லது கையாளும் ஒரு விடயத்தில் உள்ள சாதகமான அம்சங்கள், பாதகமான அம்சங்கள், சுவையான அம்சங்கள் என்பவற்றை சீர்தூக்கிப்பார்க்கும் போது நமது சிந்தனை மாறுபட்டதாக அமையும் என்பது இம்முறையின் எதிர்பார்ப்பாகும். இங்கு நல்லதை, கெட்டதை ஆய்வு செய்து முடிவெடுக்கும் சிந்தனை எம்மில் உருவாகுவதை உணரலாம்.அத்துடன் ஒரு விடயத்தை பல கோணங்களில் நோக்கும் திறனும் எம்மில் உருவாகுகின்றது.

**மனித மூளையும் சிந்தனையும்**

நாம் மாறுபட்டு சிந்திப்பதற்கு மற்றுமொரு நுட்பமாக எதனையும் முழுமையாக நோக்குதலை குறிப்பிடலாம். எமது மூளையானது,

- பெறுதல்
- விடயங்களை தக்கவைத்துக் கொள்ளுதல்
- ஆய்வு செய்தல்
- வெளியிடுதல்
- கட்டுப்படுத்தல்

போன்ற ஐந்து முக்கியமான பணிகளை ஆற்றுகின்றது. இப்பணிகளை எமது மூளை சிறப்பாக ஆற்றுவதற்கு முழுமையான விளக்கம் அடிப்படை யானதாகும். ஏனெனில் மூளையின் மேற்கண்ட ஐந்து பணிகளும் தனித்தனியாக ஆற்றுப்படுவதில்லை மாறாக செயல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு ஆற்றப்படுவதாகும். ஆகவே நமது சிந்தனையும் செயலும் ஒரு முழுமையை உருவாக்கி அதனை அடிப்படையாக கொண்டு சிந்திக்க பழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலில் ஆக்கச் சிந்தனை

✱ ஆ.அ.அஸ்ஹா

கட்டுரையாளர்
ஆசிரிய மாணவர்,
வவுனியா தேசிய
கல்வியற் கல்லூரி

ஆக்கச் சிந்தனைத் திறனானது கற்றலில் வெற்றி பெற மட்டுமன்றி வாழ்க்கையில் வெற்றிபெறவும் அவசியமான ஒன்றாகவும் இருக்கின்றது. ஆக்கச் சிந்தனையானது கலைத்திட்டத்தினூடாக திறன்களை விருத்தி செய்ய ஏதுவான காரணியாக அமைகின்றது. இன்று ஆக்கச் சிந்தனையானது பாடத்திட்டங்களில் மட்டுமல்லாது மனித நடவடிக்கைகளுள்ள எல்லாத் துறைகளிலும் சாத்தியமானதாக மாற்றமடைந்து வருகின்றது.

மாணவர்களை அவர்களது கற்றலுடன் சிறப்பாக ஈடுபடுத்துவதற்கு ஆக்கச் சிந்தனையை முன்னேற்றுவது ஒரு பலம் வாய்ந்த வழியாக கருதப்படுகின்றது. ஆக்கத் திறனாக சிந்திப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்ற மாணவர்கள் சுய ஊக்கலிலும் சுய மதிப்பீட்டிலும் உயர் அடைவு மட்டத்தை காட்டுகின்றார்கள். நம்ப இயலாத எதிர்காலத்திற்கு முகங்கொடுக்கத் தேவையான நெகிழத்தக்க திறன்களை ஆக்கத்திறனை மாணவர்களிடம் உருவாக்குகிறது. அதுமட்டுமல்லாது இன்றைய தேவைக்குரிய ஊழியர்கள் கூட சூழலுக்கு ஏற்ப செயற்படக்கூடிய, புத்தாக்கம் புனையக் கூடிய, பிரச்சினைகளைத் தீர்க்கும் இயலுமை கொண்ட மற்றும் ஏனையவர்களுடன் சிறப்பாக தொடர்பாடக் கூடிய நபர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

படைப்பாற்றல் உள்ளவர்களாக மாணவர்களை உருவாக்குவதானது அவர்களது வாழ்வை மேம்படுத்தக் கூடியதாகவும், ஒரு சிறந்த சமூகத்திற்கு பங்களிக்கக் கூடிய நபர்களாகவும் மாற்றுகின்றது. ஆக்கத் திறன் என்பது கற்பதற்கான ஒரு முறை. நாங்கள் அனைவரும்,

- புதிய சிந்தனைகளை உருவாக்கவும், அவற்றை திறமையாக பயன்படுத்தவும்.
- கருதுகோள்களை அமைக்கவும்.
- எந்தவொரு செயற்பாட்டிலும் மாற்றுத் தெரிவுள்ள புத்தாக்கமுடைய விளைவுகளைத் தேடியறியவும் போதுமான ஆக்கத் திறனான சிந்தனைக்குரிய தகுதிகளைக் கொண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு மற்றும் திறன்களை புதிய வழிகளில் பிரயோகித்து பெறுமதியான விளைவுகளை அடைந்து கொள்ளல் ஆக்கத் திறன் எனவும், சிந்தனையில் உதிக்கும் விடயங்களை படைப்புத் திறனுடன் செயற்படுத்தி பெறுமதியான விளைவுகளாக உருவாக்கல் எனவும் வரைவிலக்கணப் படுத்தலாம்.

ஆக்கத் திறன் அல்லது படைப்பாற்றல் ஒருவருடைய முன்னைய அனுபவங்களுடன் தொடர்புபட்டது. எமது சிந்தனை மற்றும் விளைவு களது பெறுமதிகளை தீர்மானிக்கும் இயலுமை எங்கள் ஒவ்வொருவரிட மும் காணப்படல் வேண்டும்.

**ஆக்கத்திறனின் சிறப்பியல்புகள்**

1. கற்பனை அல்லது சிந்தனையைப் பயன்படுத்துதல்.
2. நோக்கங்களைச் செயற்படுத்துதல்.
3. ஒவ்வொரு செயற்பாடும் படைப்புத் திறன் அல்லது ஆக்கத் திறன் கொண்டதாக இருத்தல்.
4. பெறுமதியான அதேவேளை பயனுள்ள செயற்பாடுகள் காணப்படல்.

**ஆக்கத்திறனுக்கான கற்பித்தலின் பணிகள்**

***1. ஊக்கப்படுத்தல்***

எந்தத் துறையை எடுத்து நோக்கினும், உயர் ஆக்கத்திறன் கொண்ட மக்களின் முன்னேற்றத்திற்கு, குறித்த துறையில் அவர்களது இயலுமை களில் அவர்கள் கொண்டுள்ள பலமான சுயநம்பிக்கையே காரணமாக அமைந்துள்ளது.

எங்களிடம் வரும் படைப்பாற்றல் உள்ள மாணவர்கள், அவர்களது ஆக்கத் திறனான செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு, மாணவர்கள் தங்கள் மேல் வைத்துள்ள நேரான தன்னம்பிக்கையை ஆசிரியர்களான நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.

***2. உண்மைப்படுத்தல்/ மெய்ப்பித்தல்***

ஆக்கத்திறனுடைய சாதனைகள், குறித்த ஒரு விடயத்தில் அதிகம் ஈடுபாடுள்ள சிந்தனையாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இளம் சந்ததியினரின் பலங்களைக் கண்டறிந்து உதவுவதன் மூலம்,அவர்களது ஆக்கத் திறனுக்குரிய இயலுமைகளை மெய்ப்பிக்கலாம்.

***3. வளர்த்தல்***

பல சாதாரண இயலுமைகள், திறன்களில் இருந்து ஒரு சிறப்பான ஆற்றல் - வெளிப்படுகின்றது. பல பொதுவான திறன்கள் மற்றும் நுண்ணுணர்வு என்பவை ஆக்கத்திறனை வளர்ப்பதற்கு உதவ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு கொள்ளல் மற்றும் படைப்பாற்றல் செயற்பாடு பற்றிய அறிவுடையவராதல் என்பன ஆக்கத்திறன் விருத்தியை வளர்க்க உதவ முடியும். ஆக்கத்திறனுக்கான கற்பித்தலானது, இளம் சந்ததியினர் படைப்புத் திறனுடன் இருப்பதற்கும், அவர்களது சொந்தப் படைப்புத் திறன் செயற்பாடுகளில் அதிக நுண்ணுணர்வுடன் இருப்பதற்கு எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்பதை அறிய உதவுகிறது.

**படைப்பாற்றலுக்கான கற்பித்தல் ஊக்கப்படுத்துவதற்கான நோக்கங்கள்**

- முதல் முயற்சியில் ஏற்படும் நம்பகம் மற்றும் துலங்கல்கள் என்பன தனியே/ உதவியின்றி சுயமாக தீர்மானமெடுப்பதற்காக வலுவான அடிப்படையை தீர்மானிக்கின்றது.
- புதிய மற்றும் வழமைக்கு மாறான எண்ணங்களும் பலவகையான முறைகளும், அணுகுமுறைகளும் திறந்து விடப்பட்டுள்ளன.
- ஏனையோருக்கும் அவர்களுக்குத் தோன்றும் எண்ணங்களுக்கும் மதிப்பளிக்கப்படுகின்றது.
- ஒருவர் தன்னுடைய எதிர்பார்ப்பு, மனநிறைவு, ஈடுபாடு மற்றும் படைப்பாற்றல் தொடர்புகளில் மகிழ்ச்சி என்பவற்றின் மூலம் ஈடேற்றம் பெறுகிறார்.

மேலே நாங்கள் பார்த்த விடயங்கள் யாவும் நம்பிக்கையுடன் தொடர்பு பட்டவை. ஆக்கத்திறனுக்கான கற்பித்தலின் நோக்கங்களாக **தன்னம் பிக்கை, சுதந்திரச் சிந்தனை, சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல்** என்பவற்றை ஊக்கப்படுத்தலாகும். அதாவது இளம் சந்ததியினரை தன் மீதும் அதே போன்று உலகின் மீதும் ஆழமான, பரந்த விழிப்புணர்வுடன் செயற்பட்டு எதிர்கால பிரச்சினைகளை வினைத்திறனாகக் கையாள இயலச் செய்தலாகும்.

**சுய வழிகாட்டல் கற்றல்**

படைப்பாற்றலுக்கான கற்பித்தல், கற்பதற்கான பொறுப்பை அறிந்து கொள்ள ஊக்கப்படுத்துகிறது. அது **சுயமாக இலக்கு நிர்ணயித்தல், திட்டமிடல், சுய உற்று நோக்கல், சுய மதிப்பீடு, சுய முகாமை** என்பவற்றின் இயலுமையை இலக்கு வைக்கின்றது.

மாணவர்களை சுய கற்றலில் ஈடுபடுத்துவது இன்றைய முக்கிய தேவையாக இருக்கின்றது. அவர்கள் தங்கள் திறமைகளை பரீட்சிப்பதற்கு பலவாறான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவர்களது கற்றல் அனுபவங்களைப் பற்றி கலந்துரையாட வேண்டும். மாணவர்களது பலம், பலவீனங்கள் தொடர்பான பிரதிபலிப்புக்களை கேட்டறிவதனால் அவர்களது சுயவிருத்தியை, ஈடுபாட்டை மதிப்பீடு செய்யலாம்.



மாணவர்களை விளையாட்டுடனான பரிசோதனை மூலம் கற்றலில் ஈடுபடுத்துவதன் மூலம் விளையாட்டு விருப்பமுள்ள, சிந்தனையில் சிறந்த மாணவர்களாக கற்றலில் பங்குகொள்ளச் செய்ய முடியும். நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்ற தேடலானது இயலுமைகளை விருத்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். பின்னர் அவற்றில் கூர்ந்து அவதானித்து மதிப்பிடல் மேற்கொள்ள வேண்டும்.

இச் செயன்முறை புதியவற்றைக் கண்டுபிடித்தல், அறிமுகம் செய்தல், கட்டியெழுப்புதல் அல்லது மீளக் கட்டியெழுப்புதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. படைப்பாற்றல் சிந்தனைகளைப் பற்றி கற்பது புத்தாக்கத்தை நோக்கியதாகும்.

**படைப்பாற்றல் கற்றலை கட்டியெழுப்ப சில வழிகள்**

- உங்களது செயற்பாடுகளை எளிமையாகத் தொடங்குங்கள், தொடர்ந்து செயற்படுங்கள்.
- ஆக்கத் திறன் கற்றலுக்கான இலகுவான வழிகளைக் கண்டறிந்து செயற்பாடுகளை வகுப்பறைச் சூழலில் இருந்து ஆரம்பியுங்கள்.
- உண்மையான மாற்றங்களைக் காண்பித்து பகிர்ந்து கொள்ளுங்கள். இவை முன்னேறிச் செல்வதற்கான உறுதியை விருத்தி செய்யும்.
- ஒரே நேரத்தில் ஒரு விடயத்தில் முழுமையாகக் கவனம் செலுத்துங்கள்.
- பாடசாலையில் கண்டுபிடிப்பாளர் கழகத்தை ஆரம்பியுங்கள். அத்துடன் பாடசாலையில் ஒரு பகுதியை புதிய சிந்தனை, படைப்பாற்றலுக்காக ஒதுக்கி இதன் சில உரிமைகளை மாணவர்களுக்கு அளியுங்கள்.

**ஆக்கத் திறனான சிந்தனைக்கு வலுச்சேர்க்கும் கலைத்திட்டத்தினூடான கற்பித்தல் நுட்பங்கள்**

எந்தவொரு பாடத்தினூடாகவும் ஆக்கத் திறனான சிந்தனையை விருத்தி செய்யலாம். அது மாணவர்களுக்கு சிந்தனைகளை உருவாக்கவும், அவற்றை சிறப்பாக பயன்படுத்தவும், கருதுகோள்களை முன்வைக்கவும் உதவுமாயின் சிந்தனைகளைச் செயற்படுத்தி புதிய மற்றும் புத்தாக்கமுடைய விளைவுகளை கண்டுகொள்ளலாம்.

நீங்கள் கற்பிக்கும் பாடத்திட்டத்தில் படைப்பாற்றலுக்கான சந்தர்ப்பங்களை இணைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அதாவது,

- பிரதானமானவற்றை வெளிப்படையாக சிந்திக்கச் செய்யுங்கள்
- சிந்தனைகளை செயற்படுத்துங்கள்
- வினாக்கள், சிந்தனைகள், விளைவுகளை உருவாக்குங்கள்
- மிகப் பொருத்தமான வினாக்களை வினவுங்கள்
- மாற்றுக் கருத்துக்களை ஆராயுங்கள்

தொடர்ச்சி 45 ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு - எழுத்து - கற்பித்தல் புதிய அணுகுமுறை

✱ ச.தேவசகாயம்

**ஸ்கேம்பர் (Scamper) உத்தியைப் பயன்படுத்தி வாசிப்போடு எழுதும் திறனை வளப்படுத்தும் கற்பித்தல் முறை.**

*மாணவர்கள் கற்பதற்குப் பல்வேறு கற்பித்தல் முறைகள் பயன்படுவது வழக்கமாகும். எப்பொழுது, எந்தக் கற்பித்தல் முறைகள் பயன்படுத்துதல் வேண்டும் எனத் தீர்மானிக்கும் பொழுது, குறிப்பிட்ட பாடவேளையில் மாணவர்கள் எத்தகைய இலக்குகளை அடைய வேண்டும் என்பது பற்றியும் ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரேவிதமான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி எல்லா இலக்குகளையும் அடைந்து விட முடியாது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறை மனனக் கற்பித்தலை ஊக்குவிப்பதாகவே உள்ளது. இவ்வாறு ஆசிரியர் வகுப்பில் முதன்மைப் படுத்தப்பட்ட பாடம் கற்பிக்கும் முறை மாறி மாணவர்கள் முதன்மைப்படுத் தப்பட்ட பாடம் கற்பிக்கும் முறை இக்கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இன்றைய வகுப்பறைகளில் இந்த கற்பித்தல் சூழல் நிலவுகின்றதா? என்பது கேள்விக்குறியே. இருந்தபோதிலும் ஒரு இலகுபடுத் தப்பட்ட மாணவர் முதன்மைப்படுத்தப்பட்ட கற்பித்தல் உத்தியான ஸ்கேம்பர் முறை பற்றிய விளக்கத்தைப் பெறுவதும், இதனை நமது வகுப்பறையில் பிரயோகிப்பதற்கான முயற்சிகளை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இதனை உங்களுடன் பகிர்ந்துகொள்ள கட்டுரையாளர் முற்படுகின்றார்.*

*சிங்கப்பூர் மாணவர்களின் நலனையும் சூழ்நிலையையும் கவனத்திற் கொண்டு சிங்கப்பூரில் பாடத்திட்டங்கள் மாற்றி அமைப்பது போன்று, கற்பித்தலிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்ப்பதோடு. அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் மொழிப்பாடத்தையும், இலக்கியப்பாடத்தையும் கற்க உதவும் வகையிலான முறையாக ஸ்கேம்பர் (Scamper) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.*

*மாணவர்கள் ஒரு பாடத்தில் நாட்டம் ஏற்பட வேண்டுமாயின், அப்பாடம் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைதல் வேண்டும். ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் ஒரே அணுகுமுறையை மட்டும் பயன்படுத்தாமல், வெவ்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் புதுப்புது*

*கட்டுரையாளர்
திருகோணமலை கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையத்தின் முகாமையாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளச் செய்தல் வேண்டும். அதனால் மாணவர்கள் மகிழ்ச்சியான சூழலில் பல அம்சங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

கொடுக்கப்படும் பாடநூல்கள், பயிற்சிகள் போன்றவற்றோடு ஆசிரியர்கள் சில கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தினால் வகுப்பை மேலும் சிறப்பாக நடத்தலாம். இதனால் மாணவர்களும் அதிகமாகப் பயனடைவர். இப்படிப் பயன்படும் அணுகுமுறைகளிலே ஸ்கேம்பர் அணுகுமுறையும் ஒன்றாகும்.

மாணவரின் புத்தாக்கச் சிந்தனையையும், சிந்தனைத்திறனையும் மேம்படுத்த உதவும் அணுகுமுறைகளில் ஸ்கேம்பர் அணுகுமுறை குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது. இதனால் புதுமையான முறைகளில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வழிகளில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க உதவுகிறது. ஒரே பாடத்தில் பல மாற்றங்களைச் செய்து புதுமையான ஒன்றை உருவாக்க இந்த முறை மாணவர்களுக்கு உதவும்.

ஸ்கேம்பர் உத்தி என்பது படைப்பாற்றல் சிந்தனைத் திறனைப் பயன்படுத்தி ஒரு பொருளை அல்லது செயலை மேம்படுத்த உதவும் ஒரு சிறந்த முறையாகும். இம்முறையை அமெரிக்கரான பொப் எபர்ல் *(Bob Eberle)* என்பவர் அறிமுகப்படுத்தினார். ஸ்கேம்பர் என்னும் சொல்லின் விரிவாக்கம் பின்வருமாறு அமையும்.

**S** - Substitute **பதிலீடு செய்தல்** - ஒரு பொருள் அல்லது ஒரு செயலுக்கு மாற்றாக வேறு பொருளையோ அல்லது செயலையோ சேர்த்தல் என்பது பதிலீடு செய்தலாகும்.

**C** - Combine **இணைத்தல்/சேர்த்தல்** - படிக்கப்பட்ட கதையுடன் வேறு புதிய கற்பனைகளைச் சேர்ப்பது இணைத்தலாகும்.

**A** - Adapt **பொருத்தச் செய்தல்** - ஒரு பகுதிக்கு எந்தப் பொருள் அல்லது செயல் பொருத்தமாக இருக்கும் என்பதை அறிவதை பொருந்தச் செய்தலாகும்.

M - Modify **வேறுவடிவம் தருதல் / பெரிதாக்குதல்** - ஒரு பொருளையோ அல்லது ஒரு செயலையோ எவ்வாறு மேம்படுத்திச் சிறப்பிக்க முடியும் என்பதே வேறு வடிவம் தருதலாகும்.

P – Put to other use **வேறு பயன்பாடுகளைக் கண்டுபிடித்தல்**- ஒரு பொருளை எவ்வாறு மாற்றி வேறு செயலுக்குப் பயன்படுத்துவது என்பதை இது குறித்து நிற்கின்றது.

E – Eliminate **நீக்குதல் / சிறிதாக்கல்** - ஒரு பொருளையோ அல்லது அவசியமில்லாத கருத்தையோ வெளியேற்றுவது நீக்குதலைக் குறிக்கின்றது

R – Re - arrange **ஒழுங்கு/வரிசை முறைமை** - ஒரு பொருளையோ அல்லது ஒரு செயலையோ ஒழுங்கு முறையாக மாற்றிப் புதிதாக ஒன்றை உருவாக்குதல் ஒழுங்கு/ வரிசை முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட ஏழு ஆங்கில சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதே *scamper* (ஸ்காம்பர்) என்பதாகும். இதனை பின்வரும் கதை உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுகிறது.

நரியும் நாரையும் என்ற கதையூடாக இக்கற்பித்தல் முறையின் அணுகுமுறையை நோக்கலாம்.

*ஒரு காட்டில் நரியும் நாரையும் நீண்ட நாள் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. ஒரு நாள் நரி தனது நண்பனாக இருந்த நாரைக்குத் தனது குகைக்குள் விருந்து படைத்தது. அப்போது நரி தனக்கும், நாரைக்கும் இரண்டு தட்டுக்கள் நிறைய மீன்களை வைத்துக் கொடுத்தது. நரி மீன்களை நன்றாகச் சுவைத்து உண்டது. ஆனால் நாரையால் தன் அலகு நீளமாய் இருந்ததால் அது அந்தத் தட்டிலிருந்த மீன்களை உண்ண முடியாமல் தவித்தது. நரி நாரை தவித்ததைக் கண்டும் அதைப் பொருட்படுத்தவில்லை.*

*அடுத்த நாளே நாரை நரியைத் தனது வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தது. நாரை நரியைப் பழிக்குப்பழிவாங்க வேண்டும் என்று நினைத்தது. அதனால் இம்முறை நாரை தனக்கும், நரிக்கும் கூஜாவில் மீன்களை வைத்துப் படைத்தது. இதைப்பார்த்த நரி தான் நேற்று செய்த தவறை எண்ணி வருந்தியது. நாரையிடம் மன்னிப்பும் கேட்டது.*

இக்கதையை நம்மில் பலர் சிறுவயதில் இருக்கும்போதே படித்திருப் போம். பல வருடங்களாக பெரியவர்கள் தமது சிறு குழந்தைகளுக்கு இக்கதை யைக் கூறிவருகின்றனர். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நாம் அதே கதையைச் சிறுவர்களுக்குச் சொல்லப்போகிறோம்? அதை மாற்றினால்தான் என்ன? இக்கதையில் ஸ்கேம்பர் உத்தியைப் பயன்படுத்திப் பல மாற்றங்க ளைச் செய்ய இயலும். கதையின் கருப்பொருளை மாற்றாமல் கதையில் நிகழும் நிகழ்வுகள் சிலவற்றை மாற்றினாலேயே ஒரு கதையை நம்மால் உருவாக்க முடியும். இதன் வழி மாணவர்களின் ஆர்வத்தையும் எம்மால் ஈர்க்க முடியும். ஸ்கேம்பர் உத்தியைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்ட அதே நரியும் நாரையும் என்ற கதை கீழ் வருகிறது.

*ஒரு நாள் நரி தனது நண்பனாக இருந்த நாரைக்கு தனது குகைக்குள் விருந்து படைத்தது. அப்போது நரி தனக்கும், நாரைக்கும் இரண்டு தட்டுகள் நிறைய மீன்களை வைத்து கொடுத்தது. நரி மீன்களை நன்றாகச் சுவைத்து உண்டது. ஆனால் நாரையால் தன் அலகு நீளமாய் இருந்ததால் அத அந்தத்தட்டிலிருந்த மீன்களை உண்ண முடியாமல் தவித்தது. நரி, நாரை தவித்ததைக் கண்டு அதைப் பொருட்படுத்தவில்லை.*

*அடுத்த நாளே நாரை நரியை தனது வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தது. ஆனால் இம்முறை நாரை தனக்கு நீண்ட கூஜாவில் மீன்களையும், நரிக்கு பலவிடங்களில் தேடி அலைந்து திரிந்து ஒரு தட்டையும் கண்டெடுத்து அதில் மீன்களை வைத்து விருந்து படைத்தது. இதைப்பார்த்த நரி தான் நேற்றுச் செய்த தவறை எண்ணி வருந்தியது. விருந்தோம்பலைப் பற்றி நரி அறிந்து கொண்டது. மேலும் தன் நட்பு நிலைத்திருக்க வேண்டும் என்றால், பழிவாங்கும் உணர்ச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களுக்கிடையில் வரக்கூடாது என்றும் நரிக்கு சொல்லாமல் சுட்டிக் காட்டியது.

இக்கதையை மாற்ற பதிலீடு செய்தல், இணைத்தல், வேறு வடிவம் தருதல் ஆகிய ஸ்கேம்பர் கூறுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் கதையில் நாரை தனக்கும் நரிக்கும் கூஜாவில் மீன்களை வைத்துப் படைத்தது. ஆனால் மாற்றம் செய்யப்பட்ட இரண்டாவது கதையிலோ நாரை தனக்கு நீண்ட கூஜாவில் மீன்களையும் நரிக்கு பலவிடங்களில் தேடி அலைந்து திரிந்து ஒரு தட்டையும் கண்டெடுத்து அதில் மீன்களை வைத்து விருந்து படைத்தது. ஆகையால் இரண்டாம் கதையில் கூஜாவுக்குப் பதிலாக ஒரு தட்டு சேர்க்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக முதல் கதையில் தன் தவறை உணர்ந்த நரி நாரையிடம் மன்னிப்புக் கேட்கிறது. அத்தோடு கதை முடிவுக்கு வருகிறது. ஆனால் மாற்றம் செய்யப்பட்ட கதையில் தன் தவறை அறியும் நரி விருந்தோம்பலைப் பற்றியும், நட்பு நிலைத்திருக்க வேண்டும் என்றால் பழிவாங்கும் உணர்ச்சி நண்பர்களுக்கு இடையில் வரக்கூடாது என்பதையும் உணர்கிறது. கதையில் இக்கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இது விருந்தோம்பல் என்ற தமிழ் பண்பாட்டை உணர்த்துகிறது.

இக்கதையின் முடிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நரி தன் தவறை மட்டும் உணர்ந்து கொள்ளாமல் சில நீதிகளையும் கற்றுக் கொள்கிறது. இது வேறு வடிவம் தருதல் என்ற கூற்றைக் குறிக்கிறது. முடிவை மாற்றி வேறு கருத்தையும் சேர்ப்பதையே இது புலப்படுத்துகிறது.

மாற்றம் செய்யப்பட்ட கதையில் ஸ்க்கேம்பர் உத்தியானது பயன்படுத்தப் பட்டதை அவதானிக்க முடிகின்றது. இக்கதையின் உண்மையான முடிவை மாற்றி இதற்குப் புதிய முடிவினை அளித்துள்ளதால் இங்கு ஸ்கேம்பர் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்கேம்பர் உத்தியில் உள்ள பதிலீடு செய்தல், இணைத்தல், வேறு வடிவம் தருதல், நீக்குதல் ஆகிய கூறுகள் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

- உண்மையான கதையின் முடிவுக்குப் பதிலாக வேறு ஒரு முடிவை அளித்திருப்பதால் பதிலீடு செய்தல் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இக்கதையின் முடிவில் பண்பாட்டுக் கூறுகளைப் பற்றியும் விருந்து உபசரிப்பைப் பற்றிய கருத்துக்களையும் இதில் இணைத்துள்ளதால் இணைத்தல் என்ற உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் மாணவர்களுக்கு பிறரை மன்னிக்கும் குணத்தை (நீதியை) அவர்களது மனதில் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக இக்கதையில் நாரை நரியை மன்னித்து ஏற்றுக்கொண்ட படி கதையின் முடிவு மாற்றப்பட்டுள்ளது. எனவே இங்கு வேறு வடிவம் தருதல் எனும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பிக்கும் முறை :**

ஆசிரியர் வாசிப்போடு எழுதும் திறன் என்றும் வளர்க்க இவ்வாறான ஒரு பாடப்பரப்பினை இம்முறையைப் பயன்படுத்திக் கற்பிக்க முடியும். இவ்வாறு பாடத்தை நடாத்துவதற்கு முன்பே நரியும் நாரையும் என்ற படத்தொடர்களாக அமைந்த கதைத்துண்டுகளை பயன்படுத்திக் கதை எழுதக் கற்பித்தல் வேண்டும். இடைநிலை வகுப்பு மாணவர்கள் இப்படத்தொடரைக் கொண்டு கதை அமைக்க கற்றிருப்பர். ஆதலால் இந்தக்கதைப் பகுதி ஏற்கெனவே மாணவர்கள் அறிந்த ஒன்றாகும். ஆசிரியரால் தயாரித்து வைத்துள்ள நரியும் நாரையும் கதைப்பகுதியை முதலில் மாணவர்களுக்கு வழங்கி அதை சுயமாக அமைதியாக வாசிக்கச் செய்தல் வேண்டும். பின்னர் சத்தமாக வாசிக்கச் செய்தல் வேண்டும். அதன் பின்னர் இக்கதையை வாசித்தவர்களிலிருந்து எழுமாற்றாகத் தெரிவு செய்த மாணவர்களால் இக்கதைப்பகுதியைச் சுருக்கமாகக் கூறச் சொல்லுதல் வேண்டும்.

பின்னர் இக்கதையை எவ்வாறு மாற்றி அமைக்கலாம் என்று ஆசிரியர் மாணவர்களிடம் வினவுவதன் மூலம் பல்வேறு விடைகளைப் பெறலாம். இதனைத் தொடர்ந்து மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரித்து இக்கதையை ஸ்கேம்பர் வடிவமைப்புக்கு ஏற்ப வேறுபட்ட மாறுபட்ட கதைவடிவாக உருவாக்க வழிப்படுத்தல் வேண்டும். பின்னர் கதைய வாசிக்கவும் அதனை மதிப்பீடு செய்யவும் ஆசிரியர் தயாராகிக்கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டிப் புதிய கோணத்தில் சிந்திக்க வைக்கலாம். அத்தோடு இதனூடாக பல்வேறு வினாக்களூடாக மதிப்பீட்டை யும் மேற்கொள்ளலாம். உதாரணம் உங்கள் கதையில் நீங்கள் காட்டும் நீதிக் கருத்துக்கள் எவை? இக்கதை கூறும் பண்பாட்டு அம்சங்கள் எவை? போன்ற பல்வேறு வினாக்களை ஸ்கேம்பர் பதம் காட்டும் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு வினாக்களை உருவாக்கி மாணவர் அதற்கான விடைகளைக் கண்டறியவும் வழிப்படுத்தலாம்.

ஆசிரியர் தனது பாடங்களை கற்பிக்கும்போது சில மாற்றங்களைப் பயன்படுத்திக் கற்பித்தால்தான் அந்தப்பாடம் சுவாரசியமாக இருக்கும். மாணவர்கள் அப்பாடத்தில் கவனம் செலுத்தவும் உதவும், ஆகவே ஆசிரியர் கள் பலவிதமான உத்திகளைக் பயன்படுத்திக் கற்பிப்பது மிகவும் அவசிய மாகும். ஸ்கேம்பர் உத்தி என்பது கேட்டல் திறனையோ, பேசும் திறனையோ, எழுதும் திறனையோ, வாசிக்கும் திறனையோ, சிந்திக்கும் திறனையோ தனியே வளர்க்கும் ஓர் உத்தியல்ல. மாறாக தனி மனிதன் திறனில் பல்வேறு கூறுகளை ஒன்று சேர வளர்க்கும் ஆற்றல் வாய்ந்தது. இதனை நமது ஆசிரியர் கள் தமது வகுப்பறையில் பிரயோகித்தால் நிச்சயம் நமது மாணவரும் தேடலாற்றலுடன் கூடிய மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடவதுடன் பாடசாலையும் மகிழ்ச்சிகரமான இடமாக மாற்றம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்...

■ அன்பு ஜவஹர்ஷா

? *"பயன்படுத்தப்படாத லீவுகளை மதிப்பிடுவதன் மூலம் அரச அலுவலர்களின் வினைத்திறமையை அதிகரித்தல்" என்ற தலைப்பிலான 24/2007, 24/2007 (i) இலக்கங்கள் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின்படி நன்மை பெறுவதற்காக 2008ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஐந்து வருடங்களில் 150 நாட்களுக்கு மேல் லீவை சேகரித்து வைத்துள்ளேன். எனக்கு சம்பளத்துடன் ஆறு மாத கால லீவை எடுக்க முடியுமா?*

நீங்கள் குறிப்பிடும் சுற்றறிக்கைகள் அரசாங்க ஊழியர்களுக்கு பலவித நன்மைகளைத் தந்த சுற்றறிக்கைகளாகும். இன்று அந்த சுற்றறிக்கை அமுலில் இருந்தால் 180 நாட்கள் லீவு மிகுதியாக இருந்தால் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ சம்பளத்துடன் ஆறுமாத கால லீவை அனுபவித்து இருக்கலாம்.

ஆனால் அரசாங்கத்தால் 2010.09.30 அன்று வெளியிட்ட 19/2010 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி 24/2007, 24/2007 (1), சுற்றறிக்கைகளை மட்டுமல்ல 10/2006, 02/2005 ஆகிய சகல சுற்றறிக்கைகளும் 2010.12.31 தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கைகளில் உள்ள பெரும்பாலான நன்மைகள் 19/2010 இலக்கச் சுற்றறிக்கை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. 2010.12.31 திகதி கடந்த 33 மாதங்கள் ஆகிவிட்டபடியால் நீங்கள் சேகரித்த லீவால் முன்சொல்லப்பட்டுள்ள சுற்றறிக்கையில் உள்ள நன்மைகளைப் பெற முடியாது. சுகவீன தேவைக்காக அல்லது ஓய்வு பெறும்போது இரண்டு வருட லீவைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஓய்வு பெற முன்னர் மூன்று மாத காலத்திற்கு இந்த லீவு உதவும்.

ஆசிரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? எனது சேவைக்காலத்தையும், கல்வித் தொழில் தகைமைகளைக் கொண்ட இலக்க ஆசிரியர் சேவையின் முதலாவது வகுப்பு ஆசிரியர் ஒருவருக்கு 1994.10.06 திகதி தொடக்கம் பின்வருமாறு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனது கோரிக்கையை கல்விப் பணிமனை ஏற்க மறுக்கின்றது, இதற்கு காரணம் என்ன?**

| | |
|---|---|
| *1994.10.06* | *- 1,29,000/-* |
| *1995.10.06* | *- 1,33,800/-* |
| *1996.10.06* | *- 1,38,600/-* |
| *1997.01.01* | *-1,56,600/-* |
| *1997.10.06* | *-1,62,120/-* |
| *1999.10.06* | *-1,67,640/-* |

உங்களது நியமனத் திகதியையும், கல்வி, தொழில் தகைமை பெற்ற திகதிகளையும் தெரிவித்து இருந்தால் பின்வரும் பதில் இதைவிடத் தெளிவாக இருக்கும்.

இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த எவருக்கும் இவ்வாறு சம்பளம் வழங்க எந்த சுற்றறிக்கையும் இடம் தராது. இது தவறுதலாகச் செய்யப்பட்ட ஒரு சம்பள மாற்றியமைப்பாகும். இந்த அடிப்படையில் சம்பளம் பெற்று இவர் ஓய்வு பெற்று இருக்கலாம். எப்போதாவது கணக்காய்வின்போது பிடிபட்டால் இலட்சக்கணக்கான ரூபாய்களே மீள செலுத்த வேண்டிவரும்.

1970 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற தொழிற்றகைமை பெற்ற ஒரு சிறப்பு பட்டதாரி ஆசிரியர் கூட பின்வரும் சம்பளத்தையே 1994.10.06 திகதி தொடக்கம் பெற முடியும்.

1994.10.06 - 1,09,800/-

1995.10.06 - 1,14,600/-

1996.10.06 - 1,19,400/-

1997.01.01 - 1,29,768/-

1997.10.06 - 1,35,288/-

1998.07.01 - 1,40,040/-

1999.10.06 - 1,45,560/-

1997.01.01 தொடக்கம் சம்பள அதிகரிப்பின் ஒரு குறித்த தொகையே வழங்கப்பட்டது. 1994.10.06ல் 2-I தரத்தில் உச்ச புள்ளியை அல்லது 1,01,400 ரூபா சம்பளத்தை அடையாத சகல ஆசிரியர்களுக்கு தகைமை இருந்தால் 1994.10.06 முதலாம் வகுப்பு பதவி உயர்வை வழங்கி 1,05,000 ரூபா என்ற ஆரம்பச் சம்பளத்திலேயே வைப்பார்கள். ஆகவே நீங்கள் குறிப்பிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் சம்பள மாற்றியமைப்பு மிகத் தவறானது. மாதாந்தம் 1500 ரூபாவுக்கு மேலதிக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய திகதிக்கு கணக்கெடுத்தால் மூன்று தொடக்கம் நான்கு இலட்ச ரூபாய்களை மீளச் செலுத்த வேண்டும். ஆகவே சகல ஆசிரியர்களும் தமக்கு கிடைக்கும். சம்பளம் சரியானது தானா எனக் கணக்குப் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.



? *1975ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்ற நான் 1980 தொடக்கம் கஷ்ட பிரதேச பாடசாலையில் கடமை பார்த்த வகையில் 1985.01.01 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் வகுப்பு பதவி கிடைத்தது. பின்னர் சேவை மூப்பு அடிப்படையில் இரண்டாம் தரம், முதலாம் வகுப்பு பதவி உயர்வுகள் கிடைத்தன. 1997.01.01 தொடக்கம் புதிய பிரமாணக் குறிப்பின்படி நியமனம் பெறும்போது சேவைக்காலம் போதாது என்று கூறி 2000ஆம் ஆண்டில் 1,11,420 ரூபா சம்பளத்தில்தான் ஓய்வுபெற வைத்தார்கள். இன்று வரை போராடியும் நியமனத்திற்குரிய சம்பளம் கிடைக்கவில்லை.*

1980.04.30 திகதி கடமை பார்த்த சகலருக்கும் பாடசாலை தரங்களின்படி 1982.04.21 தொடக்கம் அதிபர் பதவி வழங்கப்பட்டது. அப்போது சேவைக் காலமோ, கல்வித் தகைமையோ கவனிக்கப்படவில்லை. 1985.01.01 புதிய பிரமாணக் குறிப்பு அதிபர் சேவைக்கென உருவாக்கப்பட்டபோது 1,2,3 தரங்களில் உள்வாங்கப்பட்டார்கள். தரம் 3இல் 3 வருடமும் தரம் 2ல் 5 வருடமும் கொண்டவர்களுக்கு அடுத்த பதவி உயர்வு கிடைத்தது. இதன்படியே உங்களுக்கு முதலாம் வகுப்பு அதிபர் பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். இது 1985.01.01 தொடக்கம் செயற்பட்ட பிரமாணக் குறிப்புக்கு உட்பட்ட சட்ட பூர்வமான விடயமாகும். உங்களுக்கு இரண்டாம் வகுப்பு சம்பளமும், முதலாம் வகுப்பு சம்பளமும் உரியதாகும். எந்தக் காரணத்தைக் கொண்டும் 1,11,420/- சம்பளத்தில் ஓய்வுபெற வைக்க முடியாது. எனது கணிப்பின்படி 1,73,160 ரூபா சம்பள நிலையில் வைத்து ஓய்வூதியம் செய்யப்பட வேண்டும். 1995ஆம் ஆண்டு முதல் உங்களது மாதாந்த சம்பளத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழந்து வந்துள்ளீர்கள் கல்வி அமைச்சு அதிபர் கிளைக்கு உரிய விபரங்களுடன் விண்ணப்பித்து உங்களுக்கு உரியதைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். மனித உரிமை ஆணைக்குழுவுக்கோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ வழக்கு தொடர்ந்தால் கூட நீங்கள் நட்டமடையமாட்டீர்கள். கடிதங்களுக்கு பதில் கிடைக்கா விட்டால் இந்த திசையைத் தான் நாட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? *இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்பில் இருந்த எனக்கு 2009ஆம் ஆண்டில் சேவை மூப்பு அடிப்படையில் கல்வி நிருவாக சேவை மூன்றாம் வகுப்பு நியமனம் கிடைத்தது. தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையவில்லை எனக் காரணம் காட்டி தற்போது ஓய்வு பெற்றுள்ள எனக்கு வருடாந்த சம்பள உயர்வு மறுக்கப்படுகின்றது. எனக்கு வருடாந்த சம்பள ஏற்றம் கிடைக்க வழி உண்டா?*

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்பு அதிபர்களுக்கு கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்பு பதவியானது சேவை மூப்பு திறன் அடிப்படையில் ஓய்வு பெறும் வயதை அடையும்போதே கிடைக்கின்றது. 58,59,60 வயதை அடைந்தவர்கள் தடைதாண்டல் பரீட்சை எழுதுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

உங்களது நியமனக் கடிதத்தில் 12ஆம் பிரிவில் தடைதாண்டல் பரீட்சை எழுத 3 வருட கால அவகாசம் வழங்கப்பட்டு இருக்கும். அதுவரை சம்பள ஏற்றத்தை நிறுத்த முடியாது. 2010, 2011 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குரிய வருடாந்த சம்பள ஏற்றம் வழங்கப்பட வேண்டும். 2012ஆம் ஆண்டு 3 வருட கால எல்லை கடந்து விடுவதால் அந்த வருட ஏற்றத்தை வழங்க முடியாது.

வலய, மாகாண கல்விக் காரியாலயங்கள் உங்கள் கோரிக்கையை ஏற்று செயல்படாவிட்டால் கல்வி அமைச்சில் உள்ள கல்வி சேவை தாபன பிரிவுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளருக்கு விண்ணப்பித்து கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம். சம்பள மாற்றியமைப்புக்களைச் செய்யும் விடயத்தில் சில மாகாணங்களும் சில வலயங்களும் தெய்வம் வரங்கொடுத்தாலும் பூசாரி வரம் தராத நிலையிலேயே உள்ளன.

? *மூன்று மாதங்களுக்கு முன்னர் குழந்தை கிடைத்த எனக்கு தற்போது ஆசிரியர் நியமனம் கிடைத்தது. நான் எவ்வாறு பிரசவ லீவைப் பெற்றுக் கொள்ள்லாம்?*

உங்களைப் போன்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பொது நிருவாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. 2013.08.27 திகதி வெளியிடப்பட்ட 03/2013 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைப்படி உங்களுக்கு குழந்தை கிடைத்து 84 வேலை நாட்கள் லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

நியமனம் பெறும் போது குழந்தை கிடைத்து 60 வேலை நாட்கள் கடந்து இருந்தால் நியமனம் பெற்ற பின்னர் மிகுதி 24 வேலை நாட்கள் லீவைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல 04/2005 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் உள்ள அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறைகளையும் ஆசிரியரின் கோரிக்கையின்படி வழங்க இந்தச் சுற்றறிக்கையில் வழி செய்யப்பட்டுள்ளது.

? *நான் கல்விமாணி பாடநெறியை மேற்கொண்டு வருகின்றேன். நான் கடமையாற்றும் பாடசாலையில் இருந்து 210 கிலோ மீற்றல் தூரத்தில் கற்கை நிலையம் உள்ளது. எனக்கு வெள்ளிக்கிழமை அல்லது திங்கள் கிழமை கடமை லீவு பெற உரிமை உண்டு எனக் கோரிக்கை விடுத்தபோது அதை வழங்க அதிபர் மறுக்கின்றார். அப்படியொரு சுற்றறிக்கை இல்லை என்று சொல்கின்றார். இது தொடர்பாக விளக்க முடியுமா?*

பல பாடசாலைகளில் அதிபர் - ஆசிரியர் இடையே இந்த முரண்பாடு தோன்றியுள்ளது. அதிபர்கள் சுற்றறிக்கைகளை பற்றி அறியாமல் இருப்பது அல்லது தெரிந்துகொண்டு இத்தகைய சலுகைகளை வழங்காமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

1990ஆம் ஆண்டு தொடக்கம் இத்தகைய கற்கைநெறி தொடர்பாக பல சுற்றறிக்கைகள் வந்துள்ளன. சில முன்னுக்குப் பின் முரணான விதிமுறைகளையும் வழங்கியுள்ளன. இவையெல்லாவற்றையும் மீறி பயனுள்ள புதிய சுற்றறிக்கையொன்று 2013.06.07 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 26/2013 இலக்கம் கொண்ட இந்தச் சுற்றறிக்கையில் இவை தொடர்பான சகல விளக்கங்களும் உள்ளது.

4ஆம் பிரிவின் கீழ் வார இறுதிப் பாடநெறிக்காக பெற்றுக்கொள்ளும் கடமைப்பொருட்டு லீவு என்ற தலைப்பின் கீழ் பின்வரும் வாசகம் உள்ளது.

4.1 கற்கைப் பாடநெறிக்காக வார இறுதியில் சமூகமளிப்பதாயின் சேவை இடத்தில் இருந்து கற்கை மத்திய நிலையத்துக்குள்ள தூரம் 50 கிலோ மீற்றரை விட மேற்பட்ட உத்தியோகத்தருக்காக வார இறுதியில் முன்னைய தினம் வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினம் திங்கட் கிழமையாயின் ஒரு நாள் கடமை பொருட்டு விடுமுறை பங்கேற்பினை உறுதி செய்ததன் பின்னர் உரித்தாகின்றது.

பூரண விபரங்களூடாக இந்தச் சுற்றறிக்கை கல்வி அமைச்சு *moe.gov.lk* என்ற இணையத்தளத்தில் சுற்றறிக்கை பகுதியில் இருந்து பதவிறக்கம் செய்து கொள்ளலாம்.

210 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உங்களுக்கு மட்டுமல்ல கிளிநொச்சியில் சேவையாற்றும் ஆசிரியர் வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் அனுராதபுரத்தில் உள்ள ஆசிரியர் வவுனியாவிற்கும் சென்று கற்பதற்கு இந்த ஒரு நாள் விமுமுறையை வழங்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72

**?** *இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த நான் 2013 ஆம் ஆண்டு 33,255 ரூபா அடிப்படைச் சம்பளத்தையும் 980 ரூபா சீராக்கல்படியையும் பெற்றுக் கொண்டு இருந்தேன். சென்ற மாதம் 980 ரூபா சீராக்கல்படியை நிறுத்தச் சொல்லி புதிய சுற்றறிக்கை வந்துள்ளது. என்று சொல்லி நிறுத்தியுள்ளார்கள். மீள அறவிடப்போவதாக கூறுகின்றார்கள். இவ்வாறு சொல்லப்படுவது உண்மையா?*

தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு முன்னுக்கு பின் முரண்பட்ட விளக்கங்கள் சுமார் 50,000 அதிபர், ஆசிரியர்களுக்கு இத்தகைய பாதிப்பை உண்டாகியுள்ளது.

கல்வி அமைச்சின் 2008.07.21 திகதிய சுற்றறிக்கைப்படியே உங்களுக்கு 980 ரூபா கிடைத்து வந்தது. 2013.04.23 ஆந் திகதி 2013/14 இலக்கத்துடன் கல்வி அமைச்சு தேசிய சம்பள பதவியணி பொது நிருவாக அமைச்சின் இணக்கத்துடன் அதாவது அவர்களின் அறிவுறுத்தல்களின்படி 2008.07.21 திகதிய சுற்றறிக்கையை இரத்துச் செய்து புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி 2006ஆம் ஆண்டு தொடக்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கே இதை வழங்க முடியும். 2005.12.31 அன்றுவரை 715 ரூபா வருடாந்த சம்பள ஏற்றத்தைப் பெற்று வந்தவர்களுக்கு 2006.01.01 தொடக்கம் இது 645 ரூபாவாக குறைக்கப்பட்டமையால் இந்த 70 ரூபா சீராக்கல்படி வழங்கப்படுகின்றது.

இதனை முற்றாக நிறுத்த முடியாது. 2013/14 இலக்கச் சுற்றறிக்கைப்படி உங்களுக்கு சீராக்கல்படி பின்வருமாறு உரித்தாகும்.


| | |
|---|---|
| 2006 | 70/- |
| 2007 | 140/- |
| 2008 | 210/- |
| 2009 | 280/- |
| 2010 | 350/- |
| 2011 | 420/- |
| 2012 | 490/- |
| 2013 | 560/- |

ஆகவே குறையுமே தவிர முற்றாக இதனை நிறுத்த முடியாது. சுற்றறிக்கை 6ம் பிரிவில் மீள அறவிடுமாறு கூறப்பட்டுள்ளதால் மேலதிகமாக வழங்கியதை மீள அறவிடுவார்கள். இது தேசிய சம்பள பதவி ஆணைக் குழுவினதும், கல்வி அமைச்சினதும் தவறால் நடந்த விடயமாகையால் மீள அறவிடுவதை நிறுத்துமாறு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்மம் பதிப்பகத்தின் புதிய வெளியீடு

















# CHEMAMADU BOOK CENTRE

**U.G.50, People's Park, Colombo -11**
**Tel: 011-2472362, Fax:011-2448624**
**E=Mail:chemamadu@yahoo.com**
**Website:www.chemamadu.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












பாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் கொப்பிகள், புத்தகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

Importers Office/School Stationary

# CHEMAMADU BOOK CENTRE

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2321905 Fax: 011-2448624
Mob:077 7279983, 077 3147442, 077 8323561
E-Mail:chemamadu@yahoo.com Website:www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org